# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 06 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 17, வெள்ளிக்கிழமை 02.12.2016


## ஊடகவியலாளராக பணி புரிந்தாராம் மைத்திரிபால

யாழ்ப்பாணம், டிசெ. 2
பொலன்னறுவையில் இருந்த போது, ஊடகவியலாளராகப் பணியாற்றியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தகவல் வெளியிட்டுள்ளார்.
பொலன்னறுவையில் நாளிதழ் ஒன்றின் குழுச் செய்தியாளராகத் தாம் பணியாற்றினார் என அவர் கூறியுள்ளார்.
இலங்கையின் வரலாற்றில், ஊடகவியலாளராக இருந்து, தாம் ஒருவரே ஜனாதி >> 25

## நாமலுக்கு எதிரான மனு ஜனவரியில் விசாரணைக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 2
இலஞ்சஊழல்தடுப்புஆணைக் குழுவை அவமதித்த குற்றச் சாட்டை எதிர்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிரான வழக்கு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி விசாரணைக்கு >> 25

## கோத்தா வெளிநாடு செல்ல அனுமதி

யாழ், டிசெ. 2
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச உட்பட ஏழு சந்தேக நபர்களுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த வெளிநாடு செல்வதற்கான தடை உத்தரவை நீக்குமாறு கொழும்பு நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது.
கடந்த ஆட்சியின்போது, அரசுக்கு சுமார் 11 பில்லியன் ரூபாய்க்கு அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தியதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் மூன்று முன்னாள் >> 25



# வடக்கை சுழற்றியது நடா புயல்

- ஒருவர் சாவு; 4 பேரைக் காணவில்லை
- வீடுகள் சேதம்; மரங்கள் வேரோடு சாய்வு
- மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



உயிரிழந்த அரச பணியாளர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 2
வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாழமுக்கத்தால் உருவான நடா புயல் நேற்று வடக்கில் பாதிப்பை ஏற்படுத்தியது. கடும் குளிரான காலநிலையுடன் பலத்த காற்றும் வீசியது. வடக்கைப் புயல் தாக்கும் அபாயம் உள்ளதாக >> 25

## 35 ஆண்டுகளின் பின் யாழ். குடாநாட்டை வாட்டியது குளிர்

யாழ்ப்பாணம், டிசெ. 2
யாழ். மாவட்டத்தில் கடந்த 35 ஆண்டுகளின் பின்னர் கடும் குளிரான காலநிலை நிலவியது. நடா புயல் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டதாக யாழ். பல்கலைக்கழகப் புவியற்துறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா 'உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார். >> 04




## நீங்கியது நடா அபாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 2
வங்காள விரிகுடாவில் தோற்றம் பெற்ற நடா புயல், நேற்று மாலை 4 மணிக்குக் காங்கேசன்துறையிலிருந்து வடகிழக்காக 120 கிலோ >> 04

## தமிழகப் படகு புயலால் சுப்பர்மடத்தில் ஒதுங்கியது

யாழ்., டிசெ. 2
தமிழகத்திலிருந்து புறப்பட்ட படகு நடா புயல் காரணமாக பருத்தித் துறை சுப்பர்மடம் பகுதியில் நேற்று மாலை கரை ஒதுங் >> 04

## கடும் குளிரால் மூன்று பேர் வைத்தியசாலையில்

யாழ்., டிசெ. 2
வவுனியாவில் கடும் குளிரினால் பாதிக்கப்பட்ட மூவர் வைத்தியசாலை >> 04

## வட்டமேசைப் பேச்சுக்கு அழைக்கிறார் ஜனாதிபதி

### புதிய அரசமைப்பு தொடர்பில்

யாழ்ப்பாணம், டிசெ. 2
புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பொது வாக்கெடுப்பு முன்வைக்கப்படும்போது, >> 25

## அரசியல் கைதி திடீரெனச் சாவு

### மகசின் சிறைச்சாலையில் தடுப்பில் இருந்தவேளை

யாழ்ப்பாணம், டிசெ. 2
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் கொழும்பு மகசின் >> 25

## யாழ். குடாவிலேயே நடாவால் உச்ச மழை

நடா புயல் காரணமாக இலங்கையிலேயே யாழ்ப்பாணத்தில்தான் அதிகூடிய மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றதாக, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. கடந்த இரு தினங்களில் யாழ். குடாநாட்டில் 66.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி >> 04


### போருக்குப் பின்னர்

## வடக்கில் மது நுகர்வு 400 சதவீதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2
போருக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் மதுப்பாவனை 400 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இவ்வாறு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது யாழ். மாவட்டத்திலுள்ள மதுபான விற்பனை நிலையங்கள் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கா நிதி அமைச்சரிடம் கேள்விகளை >> 25

## சம்பந்தன் சிங்களவருக்கும் தேசியத் தலைவர்

### சகல இனங்களுக்காகவும் அவர் குரல் கொடுக்க வேண்டும் என்கிறது ஜே.வி.பி.



யாழ்., டிசெ. 2
எதிர்க்கட்சித் தலைவரான இரா.சம்பந்தன் சிங்கள மக்களும் >> 04



## தென்னாபிரிக்காவின் பங்களிப்பை கோருகிறது தமிழ்க் கூட்டமைப்பு

### அந்த நாட்டுத் தூதுவருடன் சம்பந்தன் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 2
இலங்கையின் நல்லிணக்க முயற்சியில் தென்னாபிரிக்காவின் வகிபாகம் முக்கியமானது. தென்னாபிரிக்கா காத்திரமான பங்களிப்பை வழங்கவேண்டும். இவ்வாறு இலங்கைக்கான தென்னாபிரிக்கத் >> 04


உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்ட்ரீம் சேவர்

ரூ.1000 தொடக்கம் ரூ.50 மில்லியனுக்கு மேல் நீங்கள் தொடர்ச்சியாக சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும் அதிகபட்ச வட்டி வருமானமாக 6.75% (AER 6.96%) முதல் 9.25% (AER 9.65%) வரை கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000
இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கி கிளையுடன் விரைந்து வர்தன எக்ஸ்ட்ரீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.
www.dfcc.lk
நிபந்தனைகள் உண்டு.
DFCC வங்கி பிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.
DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 27 மில்லியன் அரச நிதியை மகனுக்காக செலவிடவில்லை

## மங்களவின் குற்றச்சாட்டு பொய் என்கிறார் கோத்தா



யாழ்ப்பாணம், டிசெ. 2
லொஸ்ஏஞ்சல்ஸில் தனது மகனுக்காக 27 மில்லியன் ரூபா அரச நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச மறுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டிருந்த அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் மகனுக்காக லொஸ்ஏஞ்சல்ஸில், வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இரு இராணுவத்தினர் அவருக்கு பாதுகாப்புக்கு வழங்குவதற்காக இலங்கையிலிருந்து சென்றுள்ளனர். மேலும் 27 மில்லியன் ரூபா அரச நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக்குற்றச்சாட்டுக்களில்உண்மையில்லை என்று முன்னாள் பாதுகாப்பு அமைச் சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச மறுத்துள்ளார். தம்மை அவமரியாதை செய்வதற்கு மிகவும் இழிவான வழிமுறைகளை மங்கள பின்பற்றுவதாக, ருவிட்டரில் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். (த-5)

# 25 ஆயிரம் ரூபா தண்டம் சரியானதே

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் கூறுகிறார்

வீதி ஒழுங்குகளை மீறுபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடுவதை வரவேற்பதாக வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வீதி ஒழுங்குகளை மீறுபவர்களுக்குத் தண்டப் பணம் மற்றும் தண்டனைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதுகுறித்துவெளியிட்டுள்ளஅறிக்கையில் அவர் தெரிவித்ததாவது:
வீதி விபத்துக்களால் இலங்கையில் நாளாந்தம் சராசரியாக 12 பேர்வரை உயிரிழக்கின்றனர். பலர் நிரந்தர அங்கவீனர்களாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதைத் தற்போது கிடைக்கும் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துதல், வாகன காப்புறுதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் செலுத்துதல், மதுபோதையில் வாகனம் செலுத்துதல், ரயில் கடவைகளை அவதானமின்றிக் கடத்தல், முறையற்ற விதமாக முந்திச் செல்லுதல் போன்ற குற்றங்களுக்கே 25 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்படுவதாக மத்திய அரசு தனது பாதீட்டில் அறிவித்துள்ளது.

ஆகவே இவ்வாறான ஒரு அறிவிப்பை வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் என்ற வகையில் நான் வரவேற்கிறேன். வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்னும் உயரிய நோக்கில் 25 ஆயிரம் ரூபா அதிகரிப்புக்கு நான் ஆதரவு வழங்குகிறேன். ஆனால் குறித்த விடயத்தைப்போக்குவரத்துப்பொலிஸார் சரியான முறையில் நடைமுறைப்படுத்தவேண்டும்.

இவ்வாறான தண்டப் பண அதிகரிப்பினால் ஒரு சாரார் வருமானத்தை பிழையான முறையில்ஈட்டிக்கொள்ளமுடியும்என்று சிலர் வியாக்கியானம் செய்கின்றனர். ஆனால் பிழை செய்யாதவர்களிடம் இவ்வாறான தண்டப் பணங்கள் அறவிடப்படப் போவதில்லை. வீதி ஒழுங்குகளை மீறிச் செயற்படுகின்ற சாரதிகளிடமே குறித்த தண்டப் பணங்கள் அறவிடப்படும். சாரதிகள் அசமந்தப்போக்கோடு வாகனத்தைச் செலுத்துவதால் நாளாந்தம் பச்சிளங்குழந்தைகள் தொடக்கம் முதியவர்கள் வரை பலரும் உயிரிழக்கின்றனர்.

இந்தத் தண்டப் பணத்துக்கு எதிராக நாடளாவியரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக பேருந்து மற்றும் தொடருந்துச் சங்கங்கள் கூறியிருக்கின்றன. அவ்வாறுபணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டாலும், வடக்கில் பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது. குறித்த பணிப்புறக்கணிப்புக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என்று வடக்கு மாகாணத் தனியார் பேருந்துச் சங்கங்களின் உரிமையாளர்கள் தெரிவித்திருப்பதை வரவேற்கிறேன் - என்றுள்ளது. (த-4)



# தற்காலிக பாலம் உடையும் அபாயம்

## ஊற்றுப்புலம் கிராம மக்களுக்காக படகுப் போக்குவரத்துக்கு ஏற்பாடு

கிளிநொச்சி, டிசெ. 2
ஊற்றுப்புலம் ஒடுக்குப் பாலம் துண்டிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதை அடுத்து அங்கு படகுப் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு இடர் முகாமைத்துவப் பிரிவு ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஊற்றுப்புலம் கிராமத்தில் அமைந்துள்ள ஒடுக்குப் பாலத்துக்குப் பதிலாக நிரந்தரப் பாலம் அமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அங்கு காணப்பட்ட ஒடுக்குப் பாலம் அகற்றப்பட்டு நிரந்தரப் பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

மக்களின் தடையற்ற போக்குவரத்துக்காக மாற்று ஏற்பாடாக தற்காலிகமாகப் பாலம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகப் பாலமும் உடையும் அபாய நிலையில் காணப்படுகின்றது.

இதனையடுத்து அங்கு படகுப் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு இடர் முகாமைத்துவப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறப்பட்டது. (த-8-35)

# வடக்குப் பாடசாலைகளில் ஆசிரியர் சமநிலைப்படுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ.2
அமைச்சரவையில் அண்மையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்களை சமநிலைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:
எந்தவொரு பாடசாலையிலும் மேலதிகமாக ஆசிரியர்களை வைத்திருக்க முடியாது. அதன் பிரகாரம் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஆசிரியப் பணிக் குழுவை வழங்கவேண்டியது அவசியம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் வடக்கு மாகாணத் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் மேலதிகமாக இருக்கும் ஆசிரியர்களை பற்றாக்குறை காணப்படும் பாடசாலைகளுக்கு நியமிக்க வேண்டும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஆகவே வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் செயலாளர் இவ்வருட இறுதிக் குள் ஆசிரியர்களது சமநிலையை மேற்கொள்ளுமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார் - என்றார். (த-8)

# நாடு கடத்தப்படார் குமார் குணரட்ணம்

## அமைச்சர் நாவின்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2
முன்னிலை சோசலிஸக் கட்சியின் தலைவரான குமார் குணரட்ணம் நாடு கடத்தப்படமாட்டார் என்று உள்ளக அலுவல்கள் அமைச்சரான எஸ்.பி.நாவின்ன நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குமார் குணரட்ணத்தை ஒருபோதும் நாட்டிலிருந்து வெளியேற்ற மாட்டோம். ஏனென்றால் அவரது பெற்றோர் இலங்கையிலேயே இருக்கின்றனர். அத்துடன் இரட்டைக் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும்தகுதியும்அவருக்கு இருக்கின்றது. ஆஸ்திரேலிய குடியுரிமையைக் கைவிட்டு குடியுரிமையைக் கோரினால் அது குறித்து ஆராயவும் நாம் தயாராகவே இருக்கின்றோம் - என்றார் அமைச்சர் நாவின்ன. (த-5)

# நொதேர்ண் பவர் வழக்கு மார்ச்சுக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் உள்ள நொதேர்ண் பவர் மின் உற்பத்தி நிலையத்துக்கு எதிராக உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பனவற்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டன.

குறித்த மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேறிய கழிவு எண்ணெயே சுன்னாகம் உள்ளிட்ட பல பகுதிகளில் நிலத்தடி நீருடன் கலந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டதுடன், குறித்த மின் உற்பத்தி நிலையத்தை மூடுமாறு கோரி நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

உயர் நீதிமன்றில் பொதுமக்கள் சார்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல்நீதிமன்றில் சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மத்திய நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எதிர்வரும் மார்ச் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்குகள் மல்லாகம் நீதிமன்று, யாழ். மேல்நீதிமன்று, கொழும்பு மேன்முறையீட்டு மேல்நீதிமன்று, உயர் நீதிமன்றுஎன்பனவற்றில் தாக்கலாகியுள்ளன.

மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறித்த மின் உற்பத்தி நிலையத்தைத் தற்காலிகமாக மூடுமாறு உத்தரவிடப்பட்டது. அதன்படி அந்தமின் நிலையம் மூடப்பட்டது. சில மாதங்களின்பின்னர் அந்த மின்நிலையத்தை மீளத் திறக்க அனுமதிக்குமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்று, குறித்த மின் நிலையத்தைத் திறந்து பராமரிக்க மாத்திரம் அனுமதி வழங்குவதாகவும், மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாது என்றும் உத்தரவிட்டிருந்தது. அதனால் குறித்த மின் உற்பத்தி நிலையத்தில் இன்றுவரை மின் உற்பத்தி இடம்பெறுவதில்லை. (த-4)

# ஆட்பதிவுத் திணைக்களம் நாளையும் திறந்திருக்கும்

கொழும்பு, டிசெ. 2
இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் நாளை சனிக்கிழமையும் ஆட்பதிவுத் திணைக்களம் திறந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய, காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை, ஆட்பதிவுத் திணைக்களத்தைத் திறந்து வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த)

# வெளியார் தலையீட்டை ஏற்றுக்கொள்ளாது சீனா

## மகிந்தவிடம் கூறினார் அந்த நாட்டுப் பிரதிநிதி

யாழ்ப்பாணம், டிசெ. 2
உள்நாட்டு விவகாரங்களில் வெளியாரின் தலையீடுகளுக்கு எதிராக, கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாகவும், மனித உரிமைகளை ஓர் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி, இலங்கையின் பெயரைக் கெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் சீனா தெரிவித்துள்ளது.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை, சந்தித்த போது, சீனாவின் அரசவை உறுப்பினரும், சீன மக்கள் குடியரசின் அயலுறவுத்துறை விவகாரங்களுக்கான முன்னணி குழுவின் பொதுச் செயலருமான யாங் யீச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் உள்ள டாவோயுடாய் அரச விருந்தினர் மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, மகிந்த ராஜபக்சவைச் சீனாவின் உண்மையான நண்பன் என்று வர்ணித்துள்ள யாங் யீச்சி, சீனத் தலைநகரில் அவரை வரவேற்பதையிட்டு மகிழ்ச்சி கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடாவால் வடக்கில் சேதங்கள்





மரம் முறிந்து விழுந்ததில் தென்மராட்சியில் ஒருவர் சாவு.






கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் கொடி காமம் பஸ் நிலையத்திலிருந்து 500மீ இடைவெளியில் உள்ள வீட்டில் சூறாவளிக் காற்றினால் அடியோடு சரிந்த மலை வேம்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுக் காலை சற்றுப் பலமாக வீசிய காற்றினால் புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் உள்ள பல தற்காலிக வீடுகள் சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.





பருத்தித்துறை முனை கரையில் கடும் அலை அடிப்பு



யாழ். பொது நூலகத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்டில்கள்.



யாழ்.நகரில்



நீர்வேலி வாழைத் தோட்டங்கள்



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி தற்காலிக வகுப்பறை சரிந்துள்ளது.



யாழ். நல்லூர் பின் வீதியில் மரம் சரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகப் படகு புயலால் சுப்பர்மடத்தில் ஒதுங்கியது

கியது. படகிலிருந்து 5 மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

நடா புயல் காரணமாகக் கடல் கடும் கொந்தளிப்பாக இருந் தது. அத்துடன் கடல் காற்றும் கடுமையாக வீசியது. இதன் காரணமாகக் கடல் அமைதியின்மையாக இருந்தது. தமிழகத்திலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காகப் புறப்பட்ட படகு புயலில் சிக்கியுள்ளது. இதன் காரணமாகத் திசைமாறிப் பருத்தித்துறைக் கரையில் ஒதுங்கியது. படகில் இருந்த 5 மீனவர்களையும் கடற்படையினர் பத்திரமாக மீட்டனர்.

இதன் பின்னர், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வந்தனர். மீனவர்கள் அத்துமீறிக் கடல் பகுதியினுள் பிரவேசிக்கவில்லை என்பதால் அவர்களை தமிழகத்துக்குத் திருப்பி அனுப்புவதற்குக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். கடல் கொந்தளிப்பு அடங்கிய பின்னர் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5-26-101)

### அலைபேசியில் உரையாடல்

# பொலிஸ்மா அதிபரிடம் விளக்கம் கோரப்படுமாம்

கொழும்பு, டிசெ. 2

பொலிஸ்மா அதிபரின் அலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தி அவருக்குப் பணிப்புரைகள் வழங்கப்பட்ட காணொலி காட்சியை நானும் பார்த்தேன். அது தவறானது. அது குறித்து விளக்கம் கோரவுள்ளேன்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றுக்கு நேற்றுச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தேசிய கலந்துரையாடல் அமைச்சு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, இடர் முகாமைத்துவ அமைச்சு ஆகியவற்றின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றினார். அதன்போதே ஜனாதிபதி விளக்கம் கோரவுள்ளதாகத் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற பகிரங்க கூட்டமொன்றில் பொலிஸ்மா அதிபர் உரையாற்றிக் கொண்டிருக்கிறார். அதன்போது அவர் தனது அலைபேசியை எடுத்து கதைக்கிறார். அவ்வாறு பேசுவது 'கட்டாயமாக அவரை கைது செய்யமாட்டேன். பொலிஸ் நிதி மோசடி பிரிவில் விசாரித்தேன். எனது அனுமதியின்றி அவரை கைது செய்ய விடமாட்டேன்' என்று கூறுகின்றார். அந்தக் காணொலி ஊடகங்களில் செய்தியாகியது.

அந்தக்காணொலியை நானும் பார்த்தேன். அந்த செயற்பாடு மிகவும் தவறானது. இது தொடர்பில் அவரை அழைத்து விளக்கம் கோர இருக்கிறேன் என்று ஜனாதிபதி சபையில் தெரிவித்தார். (வ-4)

# யாழ். குடாவிலேயே நடாவால் உச்ச மழை

கிடைக்கப்பெற்றுள்ளது.

வங்காள விரிகுடாவில் நிலை கொண்டிருந்த நடா புயல், திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணக் கடற்கரை ஊடாக தமிழகத்தைச் சென்றடைந்தது. இதனால் வடக்கு மாகாணத்தில் கடும் காற்று, மழையுடனான காலநிலை நீடித்தது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையிலான நேரத்தில் 35.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதே காலத்தில் வல்லிபுரத்தில் அதிகூடிய மழை வீழ்சியாக 50.8 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளது. மன்னாரில் 13.3 மில்லி மீற்றரும், திருகோணமலையில் 12.9 மில்லி மீற்றரும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையில் 30.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளது. (த-5)

# தென்னாபிரிக்காவின் பங்களிப்பை கோருகிறது தமிழ்க் கூட்டமைப்பு

### அந்த நாட்டுத் தூதுவருடன் சம்பந்தன் பேச்சு

தூதுவரிடம், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

தென்னாபிரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் றொபினா மார்க்ஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கம், தற்போதைய அரசியல் சூழ்நிலைகள், சமாதானம் மற்றும் நல்லிணக்கம் பற்றி இதன்போது ஆராயப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு தென்னாபிரிக்காவின் பங்களிப்பு தேவைப்படுகின்றது என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றுள்ளார். (த-5)

# நீங்கியது நடா அபாயம்

மீற்றரில் நிலை கொண்டிருந்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. நள்ளிரவு பெரும்பாலும், தமிழகக் கரையைக் கடக்கும் என்றும் இதனால் இலங்கைக்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்படாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு உருவான தாழமுக்கம் புயலாக மாற்றம் பெற்றது. நடா புயல் இலங்கையின் வடகிழக்குக் கடல் பகுதியின் ஊடாகப் பயணித்தது.

நேற்று முன்தினம் மாலை திருகோணமலையிலிருந்து 480 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டிருந்தது. நேற்று முன்தினம் இரவு முல்லைத்தீவிலிருந்து 400 கிலோ மீற்றரிலும், நேற்றுக் காலை காங்கேசன்துறையிலிருந்து 200 கிலோ மீற்றரிலும் நிலை கொண்டிருந்தது.

நேற்று மாலை 4 மணிக்கு, காங்கேசன்துறைக் கடற்பரப்பிலிருந்து வடகிழக்காக 120 கிலோ மீற்றரில் நிலை கொண்டிருந்தது. புயல் வலுவிழந்து வருவதாகவும், நேற்று நள்ளிரவு தமிழகக் கடற்கரையைக் கடக்கும் என்றும் வளிமண்டலவியல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5-எ)

# சம்பந்தன் சிங்களவருக்கும் தேசியத் தலைவர்

### சகல இனங்களுக்காகவும் அவர்குரல் கொடுக்க வேண்டும் என்கிறது

தேசியத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளதால், சகல இன மக்களுக்கும் குரல் கொடுக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய கலந்துரையாடல்கள், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகள் அரச மொழிகளாக இருக்கின்றன. தனியார்துறைகளில் இந்தமொழிக்கொள்கைநடைமுறைப்படுத்தப்படுவதில்லை. மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அந்தத் துறை சார்ந்த அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விகாரைப் பக்கமே செல்லாதவர்கள், பௌத்த சிந்தனை பற்றி தெளிவில்லாத சில இனவாதிகள் பௌத்தத்தைக் காப்பாற்றப் போவதாக சமூக வலைத்தளங்களில் பரப்புரை செய்கின்றனர். கதாநாயகர்களாவதற்கு முயற்சிக்கின்றனர்.

சில முஸ்லிம் இனவாதிகளும் இதைத்தான் செய்து வருகின்றனர். இஸ்லாம் என்பது புனிதமான மதமாகும். இதனால்தான் ஜப்பான் வரை அது பரவியது. இன்று உலகளாவிய ரீதியில் பெரிதும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள மதமாகவும் அது விளங்குகின்றது.

பங்களாதேஷில் இஸ்லாம் மதமாக இருக்கின்றபோதிலும் வங்க தேசத்துக்குரிய கலாசாரமே அங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சகலமக்களும் அதை ஏற்றுக்கொண்டுள்ளனர். இங்கு அரசு நாட்டு கலாசாரம் திணிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலமை மாறவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இன்று இனவாதம் பேசிவருகின்றனர். இந்த நிலமை மாறவேண்டும். தேசிய மட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி அதிக வாக்குகளைப் பெற்றிருந்தாலும், சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்ததை எதிர்க்கவில்லை. அவரைத் தேசியத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளோம். எங்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்துகள் என்று கூட இரத்தினபுரியில் 'கட்டவுட்' வைக்கப்பட்டது. நாங்கள் சம்பந்தனை மதிக்கின்றோம். சகல இன மக்களுக்காகவும் கூட்டமைப்பு குரல் கொடுக்கவேண்டும்.

இன்று வடக்கில் நடைபெறும் சம்பவங்கள் தெற்கில் பெருப்பித்து காண்பிக்கப்படுகின்றது. அத்துடன், விக்னேஸ்வரனும் இனவாதம் பரப்பி வருகின்றார். விக்கி இல்லையேல் மகிந்த இல்லை என்றநிலை உருவாகியுள்ளது. விக்கியின் இனவாதச்செயற்பாடுகளில் கூட்டமைப்பு தலைவர் பங்கேற்காமை மகிழ்ச்சியளிக்கின்றது என்றார். (த-5)

# 35 ஆண்டுகளின் பின் யாழ்.குடாநாட்டை வாட்டியது குளிர்

கடந்த காலங்களில் பல சூறாவளிகள் ஏற்பட்டபோதும் இவ்வாறான குளிரான காலநிலை உணரப்படவில்லை என்றும் தற்போது அது உணரப்படுவது காலநிலை மாற்றத்தை வெளிக்காட்டுவதாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணம் முழுவதும் நேற்றுக் காலையிலிருந்து கடும் குளிரான கால நிலை நிலவியது. சராசரியாக 28 தொடக்கம் 31 பாகை செல்சியசாகக் காணப்படும் வெப்பநிலை நேற்றைய தினம் 21தொடக்கம் 23 பாகை செல்சியசாகவே காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 20 பாகையும், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவில் 21 பாகையாகவும், மன்னாரில் 22 பாகையாகவும் வெப்பநிலை சராசரியாகக் காணப்பட்டது.

கடும் குளிரான காலநிலை தொடர்பில், யாழ். பல்கலைக்கழக புவியற்துறை [illegible] நா. பிரதீபராஜாவை தொடர்பு கொண்டு கேட்டபோது,

நடா புயல் காரணமாகவே இந்தநிலைஏற்பட்டது. மழையினால் சூரியகதிர்களை மழை முகில்கள் தடுக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் வெப்பநிலை 21 பாகையாகக் காணப்படுகின்றபோதும், நாம் உணரும் வெப்பநிலை அதனை விடக் குறைவானது. அதனாலேயே கடும் குளிரை நாம் உணர்கின்றோம். யாழ்ப்பாணத்தின் சாரீரப்பதன் 98 ஆகக் காணப்படுகின்றது. வெப்பநிலைகுறைந்து சாரீரப்பதன் அதிகரித்திருப்பதனாலும், காற்றின் வேகம் கூடியுள்ளமையினாலுமே மிகக் குளிரான காலநிலை நிலவுகின்றது. நாம் இதனை அதிதீவிரமான நிலை என்று கணிக்கின்றோம்.

கடந்த 35 வருட காலத்தில் இதுவே மிகவும் குளிரான காலநிலையாகும். கடந்த காலங்களில் நிசா உள்ளிட்ட சூறாவளியின்போது இவ்வாறான குளிரான காலநிலை நிலவவில்லை. காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளதையே இது காட்டுகின்றது என்றார். (த-5)

# கடும் குளிரால் மூன்று பேர் வைத்தியசாலையில்

யில் சிகிச்சைக்காக நேற்றுச் சேர்க்கப்பட்டனர் என, வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

வடக்கில் நேற்றுக் கடும் குளிரான காலநிலை நிலவியது. வவுனியாவில் நேற்றுக் காலையில் 20 பாகை செல்சியஸ் வெப்பநிலை காணப்பட்டது. இதனால் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட மூவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

'தலையிடி, நெஞ்சு நோவு என்பன ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சை பெறுமாறும், சூடான இடங்களில் இருக்குமாறும், சிறுவர்களைக் குறிப்பாக ஐந்து வயதுக்கு உட்பட்டவர்களைத் தலைக்கு மவ்ளர், காலுக்கு கால் உறை என்பன அணிந்து பாதுகாப்பாக வைத்திருக்குமாறும், தேவையின்றி வெளியே சென்று வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், அதேபோல வயோதிபர்களும் காலநிலையைத் தாங்கக் கூடியவாறு உடை அணிந்து பாதுகாப்பாக இருக்குமாறும் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்திலுள்ளவர்கள் எப்பொழுதும் சூடான காலநிலையில் பழக்கப்பட்டதால், திடீர்க் காலநிலை காரணமாக குளிர் அதிகமாகவே உணரப்படும். இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் எப்பொழுதும் சூடான நீரை அருந்துமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளர் கூறினார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்ப தேவஸ்தானம் கோண்டாவில் வருடாந்த மகரஜோதி தேர்த்திருவிழா சிறப்பிதழ்



**02.12.2016**



## அன்பும் ஆசியும் கிடைப்பதாகுக

யாழ். கோண்டாவில் சபரீஷ ஐயப்பன் ஆலய தேர்த்திருவிழா பக்த அடியார்கள், சாமிமார்கள் அனைவருக்கும் பெருமகிழ்வினைத்தரும் உற்சவமாகும். மக்களின் துன்பம் துயரம் நீங்க திருவருள் ஒன்றே துணைசெய்யும். அதற்கு குருவழிபாடு அவசியமாக அமைகின்றது. குரு வழிபாடு முக்கியமாக இடம்பெறுவது ஐயப்பன் வழிபாட்டிலாகும். அதற்கு அமைய ஐயப்பன் குருதட்சணை கொடுத்த வரலாறு அனைவரும் அறிவர். அவ்வகையாக அனைவரும் ஐயப்பன் அருள் பெற்றுய்ய வேண்டும் என எல்லாம்வல்ல திருக்கைலாயன் திருப் பாதாரவிந்தங்களை வழுத்தி இறைஞ்சுகின்றேன்.

**ஆதீன குரு முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்- இரண்டாவது குருமஹா சந்நிதானம்**



## ஆசிச் செய்தி

கர்மம், பக்தி, ஞானம் மூன்றையும் இணைத்து ஒன்றாக்கும் பணியை மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் செய்கின்றன. இதன் பலனாக மக்கள் கண்டதே தீர்த்தாடனம் அதாவது தீர்த்தம் ஆடுதல் என்பதனைக் குறிப்பதாகும். எனவே வாழ்வின் பயனைப் பெறத் தங்களால் இயன்ற ளவு தீர்த்த யாத்திரை மேற்கொள்வது சைவ மக்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். இதன் வழியே தான் சபரீஷஐயப்பன் தீர்த்த யாத்திரை அமைகின்றது. சபரீஷ ஐயப்பன் தேவஸ்தானத்தில் எங்கள் முன் தோன்றுவது "தத் த்வம் அஸி" என்ற வேத வாக்கிய மாகும் அதன் பொருள் "ஒரே உண்மை" அதாவது "நீயே அந்தப் பேருண்மை" இதனை உணர ஐயப்ப சாமிமார்கள் முயற்சி எடுக்க எல்லாம் வல்ல சபரீஷஐயப்பன் அருள் புரிய வேண்டும் என இன்றைய தேர்த்திருவிழாவில் என் ஐயனை வேண்டி நல்லாசி கூறுவதும் ஐயன் திருவருளேயாகும்.

கலாபூஷணம்

**ஈழவூர் சைவப்புலவர்**
**சிவஸ்ரீ கதிர்குமார சாமி சுழகலிங்கம் சிவாச்சாரியார்**
**அமைப்பாளர் உலக சைவத்திருச்சபை - இலங்கை**

## ஈழத்து சபரி மலையானே தேரேறி வருக.

ஈழத்து சபரிமலை ஐயனே தேரேறி வருக
இரந்திடும் அன்பரின் துயர் தீர்க்க தேரேறி வருக
நாளை நமக்கொரு தீர்வுதர தேரேறி வருக
நாலாறு திசையெலாம் தொழ தேரேறி வருக
ஏழைபங்காளன் மைந்தனே தேரேறி வருக
எழிலார்ந்த சபரி மலையானே தேரேறி வருக
மாலை அணிந்து விரதமிருந்தோம் ஐயனே தேரேறி வருக
மானிலம் வேண்டும் தீர்வு தர தேரேறி வருக

-மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்-

## ஆசிச் செய்தி



துர்முகி வருடம் சபரீஷ ஐயப்ப சுவாமி தேவஸ்தானத்தில் நடை பெறும் மஹோற்சவப் பெருவிழா வில் இன்று வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழா இடம்பெறுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மனி தனை மனிதனாக வாழ வழிகாட்ட வேண்டியது சைவ சமயத்தின் கடமையாகும். ஐயப்ப விரதத்தில் 38 விரத விதிகளை நாம் அறிந்து ஒழுக வேண்டும். இவை மனிதப் பண்பாட்டை மேலோங்கச் செய்வனவாகும். தேர்த்திரு விழா என்றால் அன்று மக்கள் ஒன்று கூடி தேர் இழுத்து மன அமைதி பெறுவதனைக் காண முடிகின்றது.

தேங்காய் அடித்து தேர் உற்சவம் ஆரம்பிப்பதனை யும் மக்கள் எல்லோரும் தேங்காய்கள் அடிப்பதனையும் பார்க்கிறோம். ஒவ்வொரு மனிதனதும் அறியாமைக்குக் காரணமாக அமைவது மும்மலங்களின் தொழிற்பாடா கும். மலநீக்கம் பெறவேண்டும் என்பதனை அனைத்து மக்களும் உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடுதான் தேர்த்திருவிழாவில் பக்தர்கள் அதிகமாக பங்குபெறக் காரணமாக அமைகின்றது. குருசுவாமி ஹரிஹரசுத சிவாச்சாரியார் சாமிமார்களை நெறிப்படுத்தும் பாதை மிகப் புனிதமானது. இப்பணியானது சிவப்பரம்பொரு ளுக்குச் செய்யும் பெருந்தொண்டாகும். இத்தொண்டு தொடரவும் தேர்த்திருவிழா காணும் அடியார்கள், சாமி மார்கள் அனைவரும் குருசுவாமி நெறிப்படுத்தலைப் பின்பற்றுவதும் தலையாய கடமையாகும். இவ்வகை யில் அனைவருக்கும் ஐயப்பன் அருளாசி கிடைக்கப் பிரார்த்தனைகள் செய்து வாழ்த்துகின்றேன்.

சாமியே சரணம் ஐயப்பா

**கலாநிதி அடியார் விபுலாநந்தா**
**தர்மகர்த்தா- கனடா பெரிய சிவன் ஆலயம்**
**சைவசமயத் தலைவர்**
**உலக சைவத் திருச்சபை - கனடா**



சாமியே சரணம் ஐயப்பா

## ஆசிச் செய்தி

ஈழத்துச்சபரிமலை, யாழ். கோண்டா வில் சபரீஷ ஐயப்பன் தேவஸ்தானம் ஐயப்பன் திருவருளினால் வளர்ந்து வரும் தேவஸ்தானம் ஆகும். ஆலயம் ஆரம்பித்து இரண்டு கும்பாபிஷேகங்கள் நிறைவேறி யுள்ளது .ஆலய அமைவிடம் சிறிது என்ப தும் உண்மை இருப்பினும் சாமிமார்கள், அடியார்கள் அனைவரும் ஒன்றிணைந்து குருசாமியின் வழிகாட்ட லுக்கு ஏற்ப இசைவாக்கம் பெற்று ஐயப்பன் திருவருளின் தன்மையை உணர்ந்து வழிபாடு செய்து வருகின்றனர். துர்முகி வருடம் மஹோற்சவப் பெருவிழாவில் இன்று இர தோற்சவப் பெருவிழாவினால் மக்கள் துன்ப துயரங்கள் விலகி சுபீட்சம் மேலோங்க வேண்டும் என்பதும் இலங்கை மக்களின் மனம் சாந்தி பெற வேண்டும் என்பதும் எமது வேண்டுத லாகும்.

இன்றைய இளம் தலைமுறையினரின் சைவ சமய அடிப்படைகளை அறிந்து தமது வாழ்வியலை மேற்கொள்ள வேண்டும். ஐயப்பனுடைய வழிபாடு கார்த்திகை, மார்கழி ஆகிய இரு மாதங்களையும் உள்ளடக்கியதாக அமைகின் றது. இதனால் மன உணர்வுகளில் நல்வினை தீவினை களை உணரும் நிலை உருவாகும். ஆணவ மல ஒடுக்கமே இரதோற்சவப் பெருவிழாவின் தத்துவமாகும். ஐந்தொழில் தத்துவத்தில் அமைவது மஹோற்சவப் பெருவிழா. இவ்வகையில் மகர ஜோதி தரிசனம் காண்பதனூடாக பேருண்மைப் பொருளை அறியும் வாய்ப்பு ஐயப்ப விரதத் தில் கிடைக்கின்றது. எனவே ஆண்டு தோறும் கன்னிச் சாமிகள் பெருக வேண்டும். அனைத்துக் குடும்பங்களுமே ஐயப்ப பக்தர்களாக மாற ஐயப்பன் அருள் புரிய வேண்டு மென ஆசி கூறி பெருமகிழ்வு அடைகின்றேன்.

**குருசுவாமி, அறங்காவலர், சிவஸ்ரீ கி.**
**ஹரிஹரசுத சிவாசாரியார்,**
**யாழ். கோண்டாவில் சபரீஷ ஐயப்பன் தேவஸ்தானம்,**
**கோண்டாவில்.**



## 'அன்பே சிவம்"
## "அன்பின் உருவம் சிவம்"

ஆன்மாக்கள் அன்பின் வழியாக வாழ வேண்டும். அதற்கு ஆலயங்கள் வழி காட்டும் இடங்களாக அமைந்து மக்களுக்கு சேவை செய்யும் நிலையமாக இருக்க வேண்டும். கோண்டாவில் சபரீஷ ஐயப்பன் ஆலயநெறி முறைகள் மக்களின் வாழ்வியலுக்கு துணையாக அமைகின்றது. இன்று தேர்த்திரு விழாக்காணும் ஐயப்ப சாமிமார்கள், அடியார்கள் அனைவரும் உய்யும் படியாக நெறிப்படுத்தும் குருசாமி அவர்களின் ஆன்மீகப்பணி தொடர வேண்டும் என உருத்திரபுரீஸ்வரர் பாதம் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

**ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவசுவாமிகள்**
**மகாதேவா ஆச்சிரமம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி.**

சிறி நதியா
நகை மாளிகை
01. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். 021 222 2709
56. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம் 021 222 6744

GALGAMUWA STORES
133/1, K.K.S. ROAD, JAFFNA.
T.P: 021 222 0966, 077 183 6625

கணபதி
களஞ்சியம்
170A. பலாலி றோட், கோண்டாவில்.
T.P: 021 492 1 655

V.M.K Brothers
Palaly Road, Kondavil Junction, Kondavil.
VIGNESWARA
PAINTS &ELECTRICALS
170, Palaly Road,Kondavil.

நதியா
நகை மாடம்
இல. 02-149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7189, 021 567 0313, 021 222 3479

காசி யாத்திரை
தென் இந்திய யாத்திரை, வட இந்திய யாத்திரைகள் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
கலாநிதி ஸ்ரீரெங்கநாதன் (மகன் ராஜன்)
077 768 0102, 077 736 2154

பவி
ஹோட்டல்
பலாலி றோட், கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

22 கரட் தங்க நகைகளும் சிங்கப்பூர் ரெடிமேற நகைகளும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
சாரங்கா நகை மாடம்
அரசாங்க அதிகாரம் பெற்ற பணப் பரிமாற்று சேவை நிலையம்
இல. 157/1 . கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

ஐங்கரன் மெகா சிற்றி & பொம்பே பெஷன்
புடவைத் தினுசுகள், அழகு சாதனப் பொருள்கள், பாதணிகள், யாவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பலாலி வீதி. கோண்டாவில் சந்தி.

JT MULTI SHOP
மின்சாரப் பொருள்கள், தளபாடங்கள், பாடசாலை பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் மற்றும் அனைத்துப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
பலாலி வீதி. கோண்டாவில் சந்தி.
076 577 1792

Best Way
Supermarket
174, Palaly Road, Kondavil East, Jaffna.
021 205 3822

JANU Electronic & Phone Shop
Palaly Road, Kondavil.

Thabeshan Agro Store
Palaly Road, Kondavil Junction, Kondavil.

யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகிறது.
ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி ஜோதிட நிலையம் (Pvt) LTD
P.ஜெயசங்கர்
384A, நாவலர் வீதி, (கைலாச பிள்ளையார் கோயில் சந்தி நல்லூர்)
021 221 7944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைப் பெருவிழா பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.2
மருதங்கேணிப் பிரதேசசெயலகத்தில் இன்றைய தினம் இடம்பெறவிருந்த கலாசாரப் பெருவிழா தற்போதைய அசாதாரண காலநிலை காரணமாக பிற்போடப்பட்டதாக பிரதேச செயலர் அறிவித்தார்.

வடமராட்சி கிழக்கு, மருதங் கேணிப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பெருவிழா இன்றைய தினம் நடத்தத் திட்டமிடப்பட்டது. எனினும் நிகழ்வை நடாத்துவதற்கான சூழல் இன்மை காரணமாக இடைநிறுத்தப்படும் இந்த நிகழ்வானது பிறிதொரு தினத்தில் நடாத்தப்படும். அவ்வாறு இடம்பெறும் திகதி குறித்து பின்னர் அறியத்தரப்படும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார். (வ-101)

## உருவச்சிலை திறப்புவிழா

கூட்டுறவு பெரியார் வீரசிங்கத்தின் நினைவாக அமைக்கப்பட்ட உருவச்சிலை திறப்பு விழாவும் அவரின் 52ஆவது நினைவு தின நிகழ்வும் எதிர்வரும் 5ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)

## இணக்க சபை அமர்வு இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.2
யாழ்ப்பாணம் ஜே/246 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இணக்க சபை அமர்வு யாழ். வைத்திஸ்வராக் கல்லூரியில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்றுவந்தது. ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சை காரணமாக அந்த இணக்க சபை அமர்வு யாழ். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி 9.30 மணிக்கு நடைபெறும். எனவே கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளோர் அனைவரும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்துக்குசமுகமளிக்குமாறு யாழ். இணக்க சபைத் தவிசாளர் இ.திலகரட்ணம் கேட்டுள்ளார். (வ-8)

# நாரந்தனைத் தாக்குதலை ஈ.பி.டி.பியினரே நடத்தினர்

## கண்கண்டவர்கள் மன்றில் சாட்சியம்

யாழ்ப்பாணம், டிச. 2
நாரந்தனையில் தமிழ்தேசிய கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் ஈ.பி.டி.பியினர்தான். அது எமக்கு நன்றாகவே தெரியும்என்று கண்கண்ட சாட்சிகள் 2 பேர் யாழ். மேல் நீதிமன்றில் நேற்றுச் சாட்சியமளித்தனர்.

இந்த வழக்குத் தொடர் விசாரணைக்காக யாழ்.மேல் நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. சம்பவ இடத்தில் நின்றிருந்தவர்களில் 2 சாட்சிகள் நேற்றுத் தமது சாட்சியத்தைப் பதிவு செய்தனர்.

அவர்களில் முதலாவது சாட்சி, 'நாரந்தனையில் எங்களை இடைமறித்த கன்ரர் வாகனத்திலிருந்து இறங்கியவர்கள் முதலில் எங்கள் வாகனத்தினைத் தாக்கிப் பின்னர் எங்களையும் தாக்கினார்கள். எனக்கும் அடி விழுந்தது. எனது மகனும் வந்திருந்தார். அவர் சீற்றுக்குள் மறைந்திருந்தபோது கம்பியினால் தாக்கினார்கள். அவர்களிடம் இருந்து மகனை காப்பாற்றி பற்றைப்பக்கம் ஓடச்சொன்னேன். எமது வாகனத்தில் 10 பேர் வரை இருந்தோம். வாகனத்தை நிறுத்தியதும் துப்பாக்கியினால் சுட்டனர். இவர்களை ஓட விடக்கூடாது என்றுகூறி ஓடிவந்து தாக்கினார்கள். வாகன கதவோரம் கமல்ஸ்ரோன் காயத்துடன் விழுந்து கிடந்ததை கண்டேன். வாள்களால் வெட்டினார்கள். சிவாஜிலிங்கம் முகக்குப்பிற விழுந்துகிடந்தார். எங்களைத் தாக்கியவர்கள் ஈ.பி.டி.பியினர்தான்' என்று சாட்சியமளித்தார்.

இரண்டாவதாக சாட்சியமளித்தவர்: 'தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற போது தாக்குதல் நடத்தப்பட்டது. சிவாஜிலிங்கத்துக்கு வெட்டு விழுந்தது. கமல்ஸ்ரோனுக்கு அடித்தார்கள். பின்புறமாக வந்து எனக்கு அடித்ததில் நான் மயக்கமடைந்து விட்டேன். சிவாஜியுடன் வந்தவர்களை வெட்டிக்கொல்லுங்கள் என்று சத்தமிட்டனர். இருவர் உயிரிழந்தனர். 25 பேர் வரை காயமடைந்தனர். அவர்கள் முகத்தை மறைத்திருந்தபோதும், ஈ.பி.டி.பியினர்தான் செய்தார்கள் என்பது தெரியும்' என்றார்.

ஏனைய சில சாட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர்கள் தற்போது குறிப்பிட்ட முகவரியில் இல்லை என்று பிரதேச கிராம அலுவலர்கள் மன்றில் தெரிவித்தனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக அரச சட்டத்தரணி நா.நிசாந், எதிராளிகள் சார்பாக சட்டத்தரணி மு.றெமிடியஸ், ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். இதன் தொடர் சாட்சிப்பதிவு இன்று தொடரவுள்ளது.

### பின்னணி

2001ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரைக்காக ஊர்காவற்றுறைக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மீது நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டதோடு, 24 பேர் காயமடைந்தனர். அந்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வருகிறது. (வ-4,6)

# ரவிராஜியின் மெய்க்காவலர் மன்றில் அழுதார்

யாழ்ப்பாணம், டிசெ. 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜின் மெய்ப்பாதுகாவலராக இருந்த சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர், ரவிராஜ் பற்றிச் சாட்சியமளிக்கையில் நேற்றுக் கண்ணீர் சிந்தினார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மீது நாரந்தனையில் வைத்து 2001ஆம் ஆண்டு ஈ.பி.டி.பியினர் நடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்படும் தாக்குதல் வழக்கில் யாழ்.மேல்நீதிமன்றில் நேற்று சாட்சியமளிக்கையிலேயே அவர் சோக உணர்வைக்கட்டுப்படுத்த முடியாது அழுதார். அது அங்கிருந்த அனைவரது உள்ளத்தையும் தொட்டிருந்தது.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது: நான் ரவிராஜின் மெய்பாதுகாவலராகச் சென்றேன். என்னுடன் இன்னும் இருவர் வந்திருந்தனர். நாங்கள் சீருடையில்தான் சென்றோம். நாரந்தனைப் பகுதியினை அடைந்ததும் வீதிக்குக் குறுக்காகத் திடீரென்று வந்து நின்ற வாகனத்தில் இருந்து இறங்கியவர்கள் எமக்கு முன்பாகச் சென்ற வாகனங்களை மறித்து அடித்து நொருக்கினர்.

எங்களையும் அடித்தனர். தமது வாகனத் தொடரணியில் மாவை சேனாதிராசா, சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் வந்தனர். முன்னால் சென்றவர்களைத் தாக்கியவர்களில் 2 பேர் ரி56 ரக துப்பாக்கியுடன் எங்கே ரவிராஜ் என்று கெட்ட வார்த்தைகளால் பேசியபடி வந்தனர். இரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் ரவிராஜை நெருங்கவிடாது ஆயுததாரிகளைத் திருப்பிஅனுப்பிவிட்டனர். அவ்வாறு வந்தவர்களிடம் துப்பாக்கி, இரும்புக் கம்பிகள், கொட்டன்கள் காணப்பட்டன. அவர்கள் வந்தபோது ரவிராஜ் வாகனத்தை விட்டு இறங்கித்தான் நின்றார். பின்பு கட்டாயப்படுத்தி வாகனத்தில் ஏற்றினோம்.

10 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்க்கு மெய்ப்பாதுகாவலராக இருந்தேன்' என்று சாட்சியமளித்த அவர் மன்றில் கண் கலங்கி அழுதார். (வ-4,6)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.2
நீர்வேலி சி.சி.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா மற்றும் மண்டபத் திறப்புவிழா இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் தி.இரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், மருத்துவர் வி.விபுலன் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

## பிடல் காஸ்ரோவின் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.2
ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிய வாழ்நாள் சாதனையாளர் தோழர் காஸ்ரோ நினைவு தினக் கூட்டம் யாழ்ப்பாணம் டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் நாளை மாலை 4 மணிக்கு ஏ.சி. ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆர்வலர்களை வருகை தருமாறு பன்னாட்டு மார்க்சிய குழுவினர் கேட்டுள்ளனர். (வ-7)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி, டிசெ. 2
மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நிலையத் தலைவர் சி.செல்வராசா தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு சாவகச்சேரி பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

# தமிழரின் விடுதலைப் போராட்டத்தை புரிந்துகொண்டுள்ளது நல்லாட்சி அரசு

## மாவீரர் நாள் நிகழ்வின் ஊடாக இது புலனாகின்றது என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, டிசெ.2
தமிழர்களின் விடுதலைக்காகப் போர்க்களத்தில் இறுதிவரைப் போராடி வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களை நினைகூரும் தகுதி ஒவ்வொரு தமிழரிடம் உண்டு. மாவீரர் நாள் கொண்டாப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது. இந்த நிலையில்தான், இந்த வருடத்துக்கான மாவீரர் நாள் அஞ்சலி நிகழ்வுகளை கூட்டமைப்பு பகிரங்கமாக முன்னெடுத்திருந்தது. இந்நிகழ்வுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு அச்சுறுத்தல்களையும் நல்லாட்சி அரசு விடுக்கவில்லை. இதிலிருந்து தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நல்லாட்சி அரசு புரிந்துகொண்டுள்ளது என்பது புலப்படுகின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்ததாவது: 2015ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் நிலைமாறு கால நீதிப் பொறிமுறையில், போரில் உயிரிழந்தவர்களை அவர்களின் உறவினர்கள் நினைவு கூருவதற்குத் தடை விதிக்கப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஏற்றுக்கொண்டுள்ளார். அதன் அடிப்படையில், மாவீரர்களை நினைவுகூருவதற்கு இலங்கை அரசால் ஒருபோதும் தடைவிதிக்க முடியாது.

மேலும், தமிழர்களின் தலைவர்களாகக் காட்டிக்கொள்வதற்காவோ மேதைகளாக வெளிப்படுத்துவதற்காகவோ இந்த மாவீரர் நாள் நிகழ்வுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கவில்லை.

தமிழர்களின் விடுதலைக்காக மண்ணில் விதைக்கப்பட்ட மாவீரர்களை நினைவுகூருவதற்கு ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமை உண்டு. அந்தவகையில், மாவீரர்களைக் கௌரவப்படுத்துவதற்காகவும், எதிர்காலச் சந்தியினர் தமிழர்களின் போராட்ட வரலாறுகளை அறிவதற்காகவும், இவ்வாறான நிகழ்வுகள் வருங்காலத்தில் எப்படி முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதற்[illegible] இந்த மாவீரர் தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், செயற்படுத்துவதற்கும்தான் கூட்டமைப்பு முன்னின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் மாவீர் நாள் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ச்சியாகக் கோரிக்கையை முன்வைத்து வந்தனர். ஆனால், ஜனாதிபதியும், பிரதமரும் எமது கோரிக்கைக்கு பச்சைக்கொடி காட்டாவிட்டாலும், இம்முறை நடைபெற்ற மாவீர் நாள் நிகழ்வுக்குத் தடைவிதிக்கவில்லை. அதேவேளை, படையினர் மூலம் எந்த வித அச்சுறுத்தல்களும் விடப்படவில்லை.

இந்தமுறை மாவீரர் துயிலும் இல்லங்களில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதை சிங்கள கற்றறிந்தோர் கூட வரவேற்றுள்ளார்கள். இனிவரும் காலங்களில் துயிலும் இல்லங்கள் சீரமைப்புச் செய்யப்பட்டு மாவீரகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு நல்லாட்சி அரசு வழிவகை செய்யுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்புகின்றது - என்றார். (வ-5)

## திருமறைக் கலாமன்றத்தின் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம். டிசெ. 2
யாழ். திருமறைக் கலாமன்றத்தின் அங்கத்தவர் ஒன்றுகூடல் நிகழ்வு திருமறைக்கலாமன்ற பணிமனையில் நாளை சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

திருமறைக் கலாமன்றத்தின் 52ஆவது ஆண்டை முன்னிட்டு இந்த ஒன்றுகூடல் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு காலை 7.15 மணிக்கு புதுமை மாதா ஆலயத்தில் சிறப்பு பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது.

மேலும் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் ஆறாம் திகதி வரை கொழும்பிலும், கண்டியிலும் இடம்பெறும் பன்னாடுகள் பங்கு கொள்ளும் நட்டான்டா பன்னாட்டு நடன விழாவில் திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் பிரணவ என்னும் நடன நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பில் உள்ள தாமரைத்தடாக அரங்கில் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 583
சீட்டிழுப்பு திகதி 2016.12.01
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
08 13 51 52 G
சுப்பர் ஜக்பொட்
ரூ. 41,482,920/=

# ஈரவிழிகளுடன் 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் தம்பிஐயா பொன்னம்பலம்

திதி: பூர்வபக்க திருதியை

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்
வாழ்ந்து எங்களை
அன்புடன் அரவணைத்து
வாழ நன்நெறி காட்டி மறைந்த
எங்கள் அன்புத் தெய்வமே உங்கள்
ஆத்மா சாந்தி பெற
இறைவனை பிரார்த்திக்கின்றோம்

அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
இல. 14, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு

மண்ணில் 22.11.1932
விண்ணில் 26.11.2003

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் ஞானகுமாரன்



யாழ் குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஞானகுமாரன் (29.11.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராசரத்தினம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் பவளராணியின் அன்புக்கணவரும் கிருஷ்ணகுமார், சுகன்யா, குலொடியா ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவகுமாரன் (ஜேர்மனி) காலஞ்சென்ற பரமேஸ்வரன், பாலகுமாரன் (ஜேர்மனி), கணேசகுமாரன் (லண்டன்), சிவறஜனி (பிரான்ஸ்) காலஞ்சென்ற கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் வயித்திலிங்கம் கதிர்காமத்தம்பி (நெதர்லாந்து) அவர்களின் அன்பு மருமகனும் சத்தியமூர்த்தி (கனடா), சிவமூர்த்தி (வன்னி), அமுதராணி (இந்தியா), விக்கினேஸ்வரமூர்த்தி (கனடா), புஸ்பராணி (கனடா), ஜெயராணி (சுவிஸ்), தர்மராணி (இலங்கை) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கிருஷ்ணமூர்த்தி (மகன் - கனடா - +16476329545),**
**சத்தியமூர்த்தி (மைத்துனர் - கனடா - +16477015067),**
**விக்னேஸ்வரமூர்த்தி (மைத்துனர் - கனடா - +15143817040)**

தகவல் : குடும்பத்தினர்

## சுபாஸ்கரன் யூன்சன்



புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், நாவற்குழி கிழக்கை, வசிப்பிடமாகவும் கொண்ட சுபாஸ்கரன் யூன்சன் நேற்று (01.12.2016) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சுபாஸ்கரன் - செல்வி தம்பதியரின் அன்பு மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப. 3 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவற்குழி கிழக்கு,**
**தச்சன்தோப்பு (தச்சன்தோப்பு சந்தி).**

தகவல் : குடும்பத்தினர்

## மார்க்கண்டு விஜயரட்ணகுமார்

சாவகச்சேரி தபாலக வீதியை வசிப்பிடமாகக் கொண்ட மார்க்கண்டு விஜயரட்ணகுமார் 01.12.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு நாகமுத்து தம்பதியரின் மகனும் அருட்சோதியின் அன்புக் கணவரும் தர்சனன் (லண்டன்), கோபிகா (பிரதேச செயலகம் பூநகரி), அகிவேந்திரன் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஹம்சத்வனியின் அன்பு மாமனாரும் அக்ஷவி, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான ஜெயகாந்தன், தமயந்தி, மற்றும் நந்தகுமார், நடேஸ்வரி, தங்கரூபன், தயாநிதி, முருகதாஸ், கௌரிமனோகரி, வேற்கை முத்துக்குமார், வாசுகி, லிங்கேஸ்வரகுமார் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஜெயந்தன் மற்றும் ஜெயந்திரன் (துபாற்கந்தோர் சாவகச்சேரி), தனிஸ், ஹரிஸ் ஆகியோரின் பெரியப்பாவும் வக்சிகா, சேயோன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.012.2016) வெள்ளிக் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகளிர் கல்லூரி முன்பாக,**
**சாவகச்சேரி.**

தகவல்: குடும்பத்தினர்.

# கேப்பாபுலவின் சில பகுதிகளை விடுவிக்க இணக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 2

முல்லைத்தீவு, கேப்பாபுலவு கிராமத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், தாம் கையகப்படுத்தியுள்ள பொதுமக்களின் காணிகளில் ஒரு பகுதியை விடுவிப்பதாக அறிவித்தனர் என்று மக்களால் தெரிவிக்கப்பட்டது.

மீள்குடியேற்றப்பட்டு 7 வருடங்களுக்கு மேலாக தற்காலிக முகாமில் வைக்கப்பட்டுள்ள கேப்பாபுலவு மக்கள் தங்களுடைய பூர்வீக நிலங்களில் மீள்குடியேற்றும்படி கடந்த பல வருடங்களாகப் பல வழிகளில் போராட்டங்களை முன்னெடுத்து வந்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த முகாமின் அதிகாரி கேப்பாப்புலவு கிராம மக்களை நேற்று இராணுவ முகாமுக்கு அழைத்துக் கலந்துரையாடியுள்ளதாகப் பொதமக்கள் தெரிவித்தனர். அதன்போது, கேப்பாபுலவு மக்களின் பூர்வீக நிலங்களில் ஒரு பகுதியை விடுவிப்பதாகவும், இராணுவ தேவைக்கு பயன்படுத்தும் காணிகளுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படுவதாகவும் இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டதாக மக்களால் தெரிவிக்கப்பட்டது. எனினும், இராணுவத்தினரால் அவ்வாறு விடுவிப்பதாகக் கூறப்பட்ட பகுதிகளில், தமது பாடசாலை, கோயில், பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், பொதுநோக்கு மண்டபம், தபாற்கந்தோர் போன்றன உள்ளடங்கவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். (வ-4,7)

# முன்பள்ளி பரிசளிப்பு விழா


யாழ்ப்பாணம் டிச 2

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் சனசமூக நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், தென்மராட்சி முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.சரோஜாதேவி ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

# யாழ். வந்த உத்திரதேவி ரயில் தம்புத்தேகமவில் தடம்புரள்வு

யாழ்ப்பாணம், டிச. 2



கொழும்பிலிருந்து நேற்று முற்பகல் 11.50 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட உத்திரதேவி ரயில் தம்புத்தேகம ரயில் நிலையத்துக்கு அருகில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

ரயிலின் 5 பெட்டிகள் தடம்புரண்டுள்ளபோதும் பயணிகள் எவருக்கும் எந்தவித சேதங்களும் ஏற்படவில்லை என்று ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரயில் தடம்புரள்வு காரணமாக யாழ் -கொழும்பு பிரதேசங்களுக்கிடையிலான ரயில் சேவை நேற்று மாலை வரை பாதிப்படைந்திருந்தது.

யாழ்ப்பணத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று மதியம் ஒரு மணிக்குப் பயணித்த குளிரூட்டி ரயில் இடைவழியில் நிறுத்தப்பட்டதாகவும் பாதை சீரமைப்புப் பணிகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-4,8)

# பூநகரி மீனவர் பாலைதீவில் கரையேறினர்

யாழ்ப்பாணம், டிசெ. 2

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேசத்தில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்று காணாமற்போன 5 மீனவர்களும் பாலைதீவில் கரையொதுங்கியுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேசத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இரண்டு படகுகளில் கடற்றொழிலுக்குச் சென்றவர்களில் 5 பேர் நேற்று மதியம் வரைக்கும் கரை திரும்பவில்லை. இதனால் அவர்களைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டது. அதன் போதே அவர்கள் 5 பேரும் பாலை தீவில் கரையொதுங்கியுள்ளதாகக் கண்டறியப்பட்டது. அது பற்றி அவர்களின் உறவுகளுக்கு அறிவிக்கப்பட்டது. அவர்களை அழைத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவர்கள் இன்று நிலைமை சீரடைந்தால் தமது படகில் கரை திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீரற்ற காலநிலை தொடர்ந்தால் கடற்படையினரின் உதவியுடன் கரைக்குத் திரும்ப ஏற்பாடுகள் செய்யப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (வ-4,101)

# அரச ஊழியரின் மொழிப் பயிற்சிக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவேண்டும்

*சபையில் வலியுறுத்தினார் அங்கஜன் எம்.பி*

அரசகரும மொழிகள் அமைச்சின் ஊடாக அரச உத்தியோகத்தர்களுக்கு மொழிப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப் பட்டாலும், அவை போது மானதாக இல்லை. மொழிப் பயிற்சிக்கு மேல திக நிதி ஒதுக்கப் படுவதுடன், இந்தத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசகரும மொழிகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'தமிழ் மக்கள் தமது அன்றாடக் கடமைகளை தமது தாய் மொழியிலேயே செய்யக்கூடிய நிலை ஏற்படுத்துவது மிக அவசிய மாகின்றது.

சிங்கள - தமிழ் உத்தி யோகத்தர்களுக்கு இரு மொழிகளிலும் பயிற்சியளிக்கப்படுவதன் மூலமாகத் தான் இந்தப் பிரச் சினைக்குத் தீர்வு எட்டமுடியும்' என்று அவர் தெரிவித்தார். (வ-7)

# வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் யார்? செவ்வாயன்று அறிவிக்கப்படுமாம்

யாழ்ப்பாணம், டிசெ. 2

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் தனித்தனியே கருத்துக்கள் பெறப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற இறுதித் தீர்மானம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறும் வடக்கு மாகாண சபை அமர்வில் அறிவிக்கப்படும் என்று நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையில் தற்போதுள்ள எதிர்க்கட்சித் தலைவரான சி.தவராசாவை நீக்கித் தவநாதனை நியமிக்குமாறு ஐ.ம.சு. கூட்டமைப்பின் செயலாளரினால் பேரவைத் தலைவருக்கு எழுத்து மூலமாகக் கடந்த வாரம் கடிதம் அனுப்பப்பட்டது.


இதன் பிரகாரம் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரை தீர்மானிக்கும் நோக்கில் பேரவைத் தலைவரினால் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலுக்கு தவராசா, தவநாதன், அகிலதாஸ் மற்றும் ஜெயதிலக ஆகியோரே சமூகமளித்திருந்தனர். அதனால் இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 8 பேரினதும் தனித்தனியான அபிப்பிராயங்களை மூடிய உறையில் தனித்தனியாகப் பெறுவதாக தீர்மானிக்கப்பட்டு சமூகமளித்தவர்களின் அபிப்பிராயங்கள் பெறப்பட்டன.

ஏனையவர்களின் அபிப்பிராயங்களையும் பெற்று, அதன்பிரகாரம் தீர்மானத்தை எடுப்பது பற்றி ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இது பற்றிய அறிவிப்பு அடுத்த அவை அமர்வான எதிர்வரும் 6ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-4,101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் உயர் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் 65 ஆவது அகவை



"உண்மையானமகிழ்ச்சிநாம் சம்பாதிக்கும் பணத்தில் இல்லை,அதில் எவ்வளவுதர் மங்களைச் செய்கின்றோம் என்பதிலேயே அடங்கியிருக் கின்றது." என்பதிற்கமைய திரு.வாமதே வாதியாகேந்திரன் அவர்கள்சுவிஸ் நாட்டில் வசித்தாலும் தான் பிறந்த மண்ணுக்கும் மக்களுக்கும் உதவவேண்டும் என்றநோக்கத்துடன 'தியாகி அறக்கொடை நிறுவனத்தை உருவாக்கித் தனது முழுமையான உழைப்பாலும் நிதிப்பங்களிப்பினாலும் வறுமையில் உள்ள எமது மக்களுக்கு அறப்பணிச் செயற்பாடுகளைத்தொய்வில்லாது தொடர்கின்றார்.

**தமது 65வது அகவைநாளின்றுமட்டும் (02.12.2016) அவரின் அறப்பணிக்கொடுப்பனவுகள்.**

1) பார்வை குறைபாடுடைய பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியவர்கள் 250 பேருக்கு வைத்தியர்களின் சிபார்சிற்கு அமையபத்து லட்சம் ரூபா(10,00,000/=) பெறுமதியான மூக்குகண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.
2) மகளீர் எழுச்சித் திட்டத்தில் 32 மகளீர்கள் புதிய அங்கத்தவர்களாக இணைக்கப்படுகின்றார்கள் இவர்களுக்கு முதற்கட்டமாக 3000/= ரூபாவும்மாதாந்தம் தலா 1000/= ரூபாவும்அவர்களின் கணக்கில் வைப்பிலிடப்படும் இதற்கு முதற் கட்டமாக ஒதுக்கப்பட்ட தொகை 96000/=
3) தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான (200,000/=) உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.
4) தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு பசுமாடுகள் வழங்கப்படவுள்ளன இதற்காக ஒருலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (100,000/=)
5) ஊனமுற்ற பயனாளிகள் மூவருக்கு ஒருலட்சத்தி ஐயாயிரம் (105,000/=) பெறுமதியான மூன்று சில்லு சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.
6) 350பயனாளிகளுக்கு மூன்று லட்சத்தி ஐம்பதாயிரம் பெறுமதியான(350,000/=) புடவைகள் வழங்கப்படவுள்ளன
7) தெரிவுசெய்யப்பட்ட 10 சிறுவர்களுக்கு தலா 1500/= பெறுமதியான பரிசு பொருள்கள் இதற்காகஒதுக்கப்பட்டதொகைபதின்ஐயாயிரம் ரூபாய்கள் (15,000/=)
8) தெரிவுசெய்யப்பட்ட 100 முதியவர்களுக்கு 1500/= பெறுமதியான மடிப்பு மெத்தையும், தலையணையும் வழங்கப்படவுள்ளன இதன் மொத்தபெறுமதி ஒருலட்ட சத்தி ஐம்பதாயிரம் ரூபாய்கள்.(Folding mattresses and pillows) 150,000/=

- தியாகி அறக்கொடை நிறுவனத்ினூடாக ஆண்டுதோறும் பலமில்லியன் ரூபாய்கள் பின்வரும் மாதாந்த சமூகநலச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்றன.

1. **கல்வி ஊக்குவிப்பு செயற்திட்டம் :-**
   - சர்வதேசசிறுவர்மற்றும் முதியோர்தினத்தை முன்னிட்டு சிலபிரதேச செயலகத்தினால் கொண்டாடப்படும் சிறுவர்தின விழாவிற்கு அன்பளிப்பு பொருள்கள் எம்மால் வழங்கப்பட்டுவருகின்றது.
   - **பாடசாலை மாணவர்களுக்கான உதவி**
     மிகவும் வசதிகுறைந்தகுடும்பங்களைச் சேர்ந்தபாடசாலை மாண வர்களுக்கு அவர்களின் கல்விமேம்பாட்டிற்காகமாதாந்தம் தலா 500/-வழங்கப்படுகின்றது.
   - **பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி**
     பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் கல்விதேவைக்காகமாதாந்தம் தலா 1000/- வழங்கப்படு கின்றது.
2. **பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிச் செயற்திட்டம்**
   - கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்டமிகவும் வறிய நிலையில் இருக்கும் குடும்பங்கள் பொருளாதார முயற்சியில் வரு மானத்தைப்பெட தொடங்கும் வரைஅவர்களின் குடும்ப நிலைக்கேற்ப மாதாந்தம் தலா 500/-தொடக்கம் 2000/- வரைவழங்கப்படுகின்றது.
   - பொருளாதார முயற்சியில் ஈடுபட்டுள்ள மாதர்சங்கங்கள்மற்றும் தொண்டு நிறுவனங்களின் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த வசதி செய்து கொடுக்கப்படுகின்றது.
3) **மருத்துவ உதவிச் செயற்திட்டம்**
   - **புற்று நோயாளருக்கான உதவி**
     புற்று நோயினால் பாதிக்கப்பட்டமிகவும் வறியநிலையில் உள்ள நோயாளர்களுக்கு மருத்துவ செலவிற்காக மாதாந்தம் தலா 1000/= வழங்கப்படுகின்றது.
   - **முதியவர்களுக்கானமருத்துவஉதவி**
     பிரதேச செயலகங்களின் ஊடாக மாவட்ட அலுவலகர் சமூகசேவைத் திணைக்களத்தினால் வைத்திய உதவிபோதியளவுபெறமுடியாதவறுமைக்குட்பட்டமுதியோர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இலவச மருத்துவ சேவை எம்மால் வழங்கப்படுகின்றது. அத்துடன் இவர்களுக்கு இலைக்கஞ்சியும், போக்குவரத்து வாகனவசதிகளும் வழங்கப்படுகின்றது.
4) **ஆதரவற்ற முதியவர்களுக்கான உதவிச் செயற்திட்டம்**
   - ஆதர வற்றுவறுமை கோட்டின் கீழ் வாழும் முதியோர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு தலா 500/= வழங்கப்படுகின்றது.
5) **சிறுவர்கள் தொடர்பான செயற்திட்டம்**
   - எம்மால் நடாத்தப்பட்டுவரும் சிறுவர் இல்லத்தில் பெற்றோரை இழந்து பாடசாலை செல்லும் பெண்பிள்ளைகள் நன்றாக பராமரிக்கப்பட்டுவருகின்றார்கள்.
6) **மகளீர்மீள் எழுச்சித்திட்டம்**
   - பொருளாதாரரீதியில் மிகவும் பின் தங்கியநிலையில் உள்ளபெண்களுக்குமாதாந்தம் 1000/=ரூபாஉதவித்தொகையாகவழங்கப்படுகின்றதுஅவர்கள் பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுவதற்கானசந்தைவாய்ப்பினைஏற்படுத்திக் கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.
7) **தாய் சேய் நலத்திட்டம்**
   - வறுமைக் கோட்டிற்குட்படட்ட ஒரு வருடத்திற்குட்பட்ட குழந்தையையுடைய தாய்மாருக்குமாதாந்தம் 1000/= பெறுமதியான சத்துணவுப் பொதிவழங்கப்படுகின்றது:
8) **சூழல் பாதுகாப்புத்திட்டம்**
   - இத்திட்டத்தின் ஊடாகசெம்மணி இந்துமயானம் தெரிவுசெய்யப்பட்டு, இங்கு 200 நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது அத்துடன் மாதம் தோறும் இவ் மயானத்தில் உள்ள புற்செடிகள் எம்மால் துப்பரவு செய்யப்பட்டுவருகின்றது.

எமதுநிறுவனம் மேலும் சில உதவித்திட்டங்களை முல்லைத்தீவு, அம்பாறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ளசில இடங்களிலும் செயற்படுத்திவருகிறது. எமது இந்தநிறுவனம் இன, மத, மொழி வேறுபாடின்றி மனிதநேயத்தோடு செயற்பட்டு வருவது இங்கேகுறிப்பிடத்தக்கது.

**மேற்குறிப்பிட்டஉதவித்திட்டங்களைசெயற்படுத்துவதற்கானநிதிவளங்கள்**

- **எமது ஸ்தாபகர்திரு. வாமதேவாதியாகேந்திரன் அவர்களின் நன்கொடை**
- **ரிசிரிபல்பொருள் விற்பனைநிலையத்தில் இருந்துகிடைக்கும் வருமானம்**

எமதுஉதவித்திட்டங்களுக்கானநிதியைபெறும் வழியாக ஆரம்பிக்கப்பட்ட வியாபாரநிலையத்தின் மூலம் கிட்டத்தட்ட 75 பேர் வரையிலான இளைஞர்,யுவதிகள் வேலைவாய்ப்பினைபெற்றுள்ளமை இங்கேகுறிப்பிடப்படவேண்டியவிடயமாகும்.

" அறப்பணியே எமது முதற்பணி "

[illegible]
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

# விசேட கண்காணிப்பு வளையத்தில் உணவு கையாளும் நிலையங்கள்

## 135 வழக்குகள் நீதிமன்றில் பதிவு

கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள் மற்றும் உணவு தயாரிப்பு நிலையங்கள், உணவகங்கள் உள்ளடங்கலாக கடந்த இரு மாதங்களில் 135 வழக்குகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அச்சுவேலியில் உள்ள பிரபல உணவகம் ஒன்று நீதிமன்ற அனுமதியுடன் அண்மையில் சீல் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரத்துக்கு உடன்பாடு இல்லாத வகையில் இருந்தமை, பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்தமை மற்றும் பாவனைக் காலம் முடிவடைந்த உணவுப் பொருள்களை விற்பனை செய்தமை போன்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அச்சுவேலியில் உள்ள பிரபல ஹோட்டலின் சுகாதாரச் சீர்கேடு தொடர்பாக மூன்று தடவைகளுக்கு மேல் எச்சரிக்கை முன்னறிவித்தல் வழங்கப்பட்டது. சுகாதாரக் கேடுகள் சீர் செய்யப்படாமையால் நீதிமன்றத்தில் முன் அனுமதி பெறப்பட்ட நிலையில் அது அண்மையில் சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது.

மாரி மழை காலத்தை அடுத்து தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாய நிலை காணப்படுவதால் உணவகங்கள், உணவுப்பொருள் தயாரிப்பு நிலையங்கள் மற்றும் உணவுப் பொருள் விற்பனை தொடர்பாக விசேட கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உரிய கட்டுப்பாடுகள், சுகாதார நடவடிக்கையை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த வகையான கண்காணிப்பு நடவடிக்கைகள் திடீர் பரிசோதனைகள் தனித்தனியாகவும் குழுநிலையிலும் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.- என்று அவர் தெரிவித்தார். (ப-11)

# முல்லை, குளங்களுக்கு நீர் வரத்துக் குறைவு



யாழ்ப்பாணம், டிசெ. 2

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குளங்களுக்கான நீர் வரத்து போதுமானதாக இல்லை. குளங்களின் நீர்மட்டமும் பெரிதாக அதிகரிக்கவில்லை. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்துஐயன்கட்டு, வவுனிக்குள நீர்ப்பாசனத்துக்குள் 21 குளங்கள் உள்ளன. முத்துஐயன்கட்டுக்குளம் மற்றும் வவுனிக்குளம் 24 அடிக்கு மேல் நீரைத் தேக்கக் கூடியபெரிய குளங்களாக இருக்கின்றன. அவற்றின் நீர்மட்டம் தற்போது குறைந்த அளவிலேயே உள்ளது. கடந்த வருடம் இந்தக் காலப்பகுதியில் இந்த இரண்டு பெரிய குளங்களும் வான் பாய்ந்திருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று (நேற்று) மதியம் வரைக்கும் மழை பெரிதாக பெய்யவில்லை . கடுமையான குளிரும், காற்றுமே உள்ளன. தற்போது 33 மீல்லிமீற்றர் மழையே பதிவாகியுள்ளது. எங்கள் ஆளுகைக்குள் உள்ள குளங்களின் நீர்மட்டம் உயர்வதற்கு மழை போதுமானதாக இல்லை.- என்றார். (ற)

**தவறிவிட்டது**

கரந்தன் சந்தி, நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த கதிரேசு வயிரவநாதன் என்பவரின் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் யாழ்ப்பாணத்துக்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

021 205 4586, 076 835 3972

இலங்கையில் எமது 10 வருட நிறைவை முன்னிட்டு!!



ஆலோசனை மற்றும் சிகிச்சை கட்டணம் இலவசம்
ஆண்மைக்குறைவு மலட்டுத்தன்மை பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு
உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை

*திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தை இன்மையா? இல்லறத்தில் உடல் படபடப்பு, மயக்கம், சோர்வு மற்றும் கை,கால் நடுக்கமா? உடல் எடை கூட/குறைய வேண்டுமா? முதல் வாரத்திலேயே பலன் தெரியும்.

*கைகால் வலி, மூட்டுவலிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

*திருமணத்திற்கு தயாராகும் வாலிபர்கள் எங்களது சிகிச்சையின் பலனை முதல் மாதத்திலேயே முழுமையாகப் பெற்று இல்லறவாழ்வை இனிமையாக ஆரம்பிக்கலாம்.

ஆண், பெண் பால்வினை நோய்களிலிருந்து குணமடைய சிகிச்சை அளிக்கிறார்

பாரம்பரிய சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்கள்

செல்: 0091 9842457673, 0091 9600336009
இலங்கை செல்: 075 4154364

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
Email: srideviisiddha@gmail.com Skype: sridevisiddha

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யாழ்/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில்



செல்வன்.
மு.தஷான் – 154

2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த செல்வன் மு.தஷான் அவர்களை வாழ்த்துவதோடு அவரை வழிப்படுத்திய வகுப்பாசிரியர் திரு.செ. மதனரூபன் அவர்களையும் ஏனைய ஆசிரியர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



திரு.
செ. மதனரூபன்

100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்.

01. ஸ்ரீ.ஜஸ்வந்தினி
02. க. அனுஷன்
03. ஜே.பேபிசாளினி
04. [illegible]
05. தி. அனுஜன்
06. தெ. சுஜாங்கி
07. [illegible] தனுசிகா
08. சி.சிதுஜா
09. த. சுமேதா

பெற்றோர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பால் உற்பத்தியை அதிகரிக்க தென்மராட்சியில் நடவடிக்கை

தென்மராட்சி, டிசெ.2
தென்மராட்சியில் பால் உற்பத்தியை அதிகரிக்க பால் மாடுகளுக்கான கல்சியப் பவுடர், கனியுப்பு என்பனவும், பால் சேகரிப்புப் பாத்திரங்களும் கால்நடை வைத்தியர் அலுவலகத்தால் நேற்று வழங்கப்பட்டன.

> "84 பயனாளிகளுக்குத் தலா இரண்டு பால் சேகரிப்புப் பாத்திரங்களும், 304 பயனாளிகளுக்கு கல்சியப் பவுடர், கனியுப்பு பைக்கற்றுக்களும் வழங்கப்பட்டன.

பிரதேசத்தைச் சேர்ந்த 84 பயனாளிகளுக்குத் தலா இரண்டு பால் சேகரிப்புப் பாத்திரங்களும், 304 பயனாளிகளுக்கு கல்சியப் பவுடர், கனியுப்பு பைக் கற்றுக்களும் வழங்கப்பட்டன.
வடக்கு மாகாண கால்நடைத் திணைக்களத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் வாழ்வாதாரத் திட்டத்தில் மாடு பெற்றவர்களுக்கு இவை வழங்கப்பட்டன.
பால் மாடுகளுக்கு வைக்கப்படும் உணவுடன் ஒரு மேசைக் கரண்டி கல்சியப் பவுடர் கலந்து வைத்தால் அதிக பயன் பெறமுடியும் என்றும், கன்றுகள் கனியுப்பை நாக்கால் சுவைக்கும்போது எலும்பு வளர்ச்சி அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# வடக்கில் உருவான நியதிச் சட்டத்தின் மூலம் 35 பேருக்கு நியமனம்

### வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2
வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் இருந்த பதவி வெற்றிடங்களுக்கு தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு ஒரு நியதிச் சட்டத்தினுடாக வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது என்றால் இதுவே முதல்தடவை.
இவ்வாறு வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையிலுள்ள பதவி வெற்றிடங்களுக்கு தற்காலிக நியமனங்கள் வழங்கும் நிகழ்வு குருநகரில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அது குறித்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் அனுப்பியுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து தலா இரண்டு பேரும், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலிருந்து தலா ஒருவருமாக மொத்தம் 8 பேரும், நேரக்கணிப்பாளர் பதவிகளுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 14 பேரும், கிளிநொச்சியிலிருந்து 7 பேரும், மன்னார் மற்றும் வவுனியாவிலிருந்து 6 பேரும், முல்லைத்தீவிலிருந்து 2 பேருமாக மொத்தம் 35 பேருக்கு தற்காலிக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
போக்குவரத்துச் சேவையில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளைச் சீர் செய்வதற்கும், ஒழுங்குபடுத்துவதற்குமான அவசர தேவை கருதி அமைச்சரவை வாரியப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வடமாகாண ஆளுநர் அனுமதித்ததன் பேரில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன. அதிகார சபை உருவாக்கியவுடன் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பல வருடங்கள் வேலை செய்தவர்கள் எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி நிறுத்தப்பட்டனர். அவ்வாறு நிறுத்தப்பட்டவர்களையும் தனியார் சங்கங்களில் பணிபுரிந்தவர்களையும் அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. அவர்களில் அடிப்படைக் கல்வித் தகமைகள் உடையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டவர்கள் தமது தற்காலிக நியமனங்களை வைத்து நிரந்தர நியமனம் கோரமுடியாது. நிரந்தர ஆளணிகள் உள்வாங்கப்படும்போது அரசநடைமுறைகளுக்கு அமைவாக விண்ணப்பித்து நிரந்த நியமனத்துக்குத் தகுதியுடைவர்களாக வரமுடியும்.
எதிர்வரும் தை மாதத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆளணிக்கான அனுமதி வழங்கப்படும். அதன் பின்னர் உடனடியாக ஆளணி நிரப்பப்படும். குறைந்தது 175 பேருக்காவது வேலைவாய்ப்பை வழங்கமுடியும் - என்றுள்ளது. (ற-10)

# "ஆவா கியா"

### பொலிஸ் மூத்த அத்தியட்சகர் சஞ்சீவ தர்மரத்ன கூறுகின்றார்

யாழ்ப்பாணம், டிசெ.2
யாழ்ப்பாணத்தில் இருந்த ஆவா குழு போய்விட்டது என்று கூறினார் பொலிஸ் மூத்த அத்தியட்சகர் சஞ்சீவ தர்மரத்ன.
யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பாராட்டும் நிகழ்வு நடைபெற்றது. அதில் செய்தியாளர்கள் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு கூறினார்.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசாரணைக்காக கொழும்பு, வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களைத் தற்போது நீதிமன்று பிணையில் செல்ல அனுமதித்துள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்னரும் கூட ஆவா குழுவினர் என்ற சந்தேகத்தில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் - என்று அவர் தெரிவித்தார்.
தற்போது ஆவா குழு இருக்கின்றதா? என்று செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், "ஆவா கியா" என்று பதிலளித்தார். (ற-8)

# பெறுமதிமிக்க மரக் குற்றிகள் மீட்பு

### அனுமதிப் பத்திரம் இன்றி களஞ்சியப்படுத்தப்பட்ட நிலையில்



யாழ்ப்பாணம், டிசெ.2
கிளிநொச்சியில் உள்ள மரக்காலை ஒன்றில் அனுமதிப் பத்திரம் இன்றிக் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 25 லட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகள், தீராந்திகள், பலகைகள் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் ஜசிந்தன் தெரிவித்தார்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வெலிக்கன்னவின் பணிப்புக்கு அமைய உடனடி முறியடிப்புப் படை எனும் சிறப்புப் பொலிஸ் பிரிவு அவற்றை மீட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
உதயநகர் கிழக்கில் உள்ள மரக்காலை ஒன்றிலேயே அவை மீட்கப்பட்டன. 24 தேக்கம் குற்றிகள், 21 பாலைக்குற்றிகள், 17 முதிரைக் குற்றிகள், 220 பாலைத் தீராந்திகள், 10 முதிரைத் தீராந்திகள், 10 தேக்கம் பலகைகள் என்பனவே மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். மரக்காலை உரிமையாளரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,6)

# வவுனியா கிராம அலுவலருக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 2
லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட கிராம அலுவலரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.
வவுனியா மூன்று முறிப்புக் கிராம அலுவலர், அவரது அலுவலகத்தில் வைத்து ஒருவரிடம் லஞ்சப் பணம் பெற்ற போது கொழும்பிலிருந்து வந்த லஞ்ச ஊழல் தடுப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.
அவரை வவுனியா நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். எதிர்வரும் 8 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ற-5)

# கல்வியில் சிறப்படைந்தாலே சமூகம் மீள வளர்ச்சி பெறும்

### சித்தார்த்தன் எம்.பி. சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், டிசெ.2
எமது சமூகம் மீண்டும் வளர்ச்சி பெற வேண்டுமானால் கல்வியில் சிறந்த நிலையை அடைய வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.
சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி. ம.குணபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பாடசாலைகளின் பௌதீக வளங்களைக் கூட்டுவதன் ஊடாக கல்வி கற்கும் பிள்ளைகளின் மனத்திலே ஒரு நல்ல சூழலை உருவாக்க வேண்டும். பிள்ளைகள் மீது அதிபர், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் எடுக்கின்ற முயற்சிகளுக்கும் மேலாக பெற்றோருடைய கடமையென்பது முக்கியமானது.
கடந்த வருடம் வட மாகாணம் கல்வியிலே ஒன்பதாம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. எங்கள் மாகாணத்தில் கல்வி தான் மிகப்பெரிய மூலதனமாகப் பார்க்கப்பட்டது. போருக்கு மத்தியிலே மிகப் பெரிய அழிவுகளைச் சந்தித்தும் எங்கள் சமூகம் ஓரளவுக்கேனும் தலை நிமிர்ந்து வாழக்கூடிய அளவுக்கு உள்ளதென்றால் அது கல்வியால் கிடைத்த செல்வம்தான். பலர் இங்கிருந்து புலம்பெயர்ந்து சென்றாலும் அங்கெல்லாம் தங்கள் வாழ்க்கையை ஓரளவுக்கேனும் வாழ்வதற்கு கல்வி தான் துணை நிற்கின்றது.
இந்தச் சமூகம் மீண்டும் வளர்ச்சியைக் காண வேண்டுமென்றால் கல்வியிலே சிறந்த நிலையை அடைய வேண்டும். அதிபர், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் கைகளில் இருக்கின்றது. பலர் மிகவும் அர்ப்பணிப்போடும் அக்கறையுடனும் செயற்படுவதை எம்மால் பார்க்கக் கூடியதாக விருக்கின்றது.
அதேநேரத்தில் பெற்றோர்கள் கையிலும் மிகப் பெரிய பொறுப்பு இருக்கின்றது. நல்ல குழந்தைகளாக வளர்தெடுப்பதில் பெற்றோர்களின் பங்கு மிக முக்கியமானது. பெற்றோர்கள் குழந்தைகளின் வளர்ச்சியிலே கவனம் எடுத்து வந்தால் எமது சமூகத்திற்கு அது ஒரு சிறந்த பணியாக இருக்கும். இவர்களுடைய எதிர்காலம்தான் எங்களுடைய சமூகத்தினுடைய எதிர்காலமாக இருக்கின்றது. அது தான் நாங்கள் செய்ய வேண்டிய முதலாவது பணி என்று நான் கருதுகின்றேன் - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## புயல் எச்சரிக்கையால் நேற்று மீனவர் கடலுக்குச் செல்லவில்லை

மன்னார், டிசெ.2
வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையால் பெரும்பாலான மீனவர்கள் நேற்றுத் தொழிலுக்குச் செல்லவில்லை.
மன்னார், யாழ்ப்பாணம் முல்லைத்தீவு கடற்கரைப் பகுதிகளில் வழமைக்கு மாறாக சற்றுக் கூடுதலான வேகத் தில் காற்று வீசியது. மழையும் பெய்தது. மன் னாரில் இருந்து காங்கேசன் துறை மற்றும் திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புக்களில் அவ்வப்போது இடியுடன் கூடிய மழைபெய்யலாம் எனவும் மன்னார் கடற்பரப்பிலும் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்வதற்கான அறிகுறிகள் உள்ளன என்றும் வளிமண்டலவி யல் திணைக்களம் தெரிவித்திருந்தது.
சீரற்ற காலநிலையால் மன் னார் பெரிய பாலத் தடியில் இருந்து ஆத்து வாய் பகுதியூடாக கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு அந் தப் பகுதியில் கடற்பாது காப்பில் ஈடுபடும் கடற் படையினர் தொழிலுக்குச் செல்ல அனுமதி வழங்கவில்லை. (ற-56)



## ஆதனப் பதிவு பிரச்சினையை தீர்க்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 1
புதிய எல்லை நிர்ணயத்தின்படி வலி.தென்மேற்கில் உள்ள 55 குடும்பங்கள் ஜே/147 கிராமத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். அவர்களின் ஆதனங்கள் வலி.மேற்கு ஆதன இடாப்பில் உள்ளன. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த விடயத்தை முன்னிலைப்படுத்தி வலி.தென்மேற்கு ஆதனத்தில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு வலி.தென்மேற்கு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சி.சி.மகேந்திரன் தெரிவித்தார்.
நாடு தழுவிய ரீதியில் எல்லை நிர்ணய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவருகின்றது. ஆனால் வலி.தென்மேற்கில் உள்ள ஜே/147 கிராம மக்களின் எல்லை நிர்ணயம் உள்வாங்கப்பட்ட போதும் அவர்களின் ஆதனப் பதிவுப் பிரச்சினை தீரவில்லை. வலி. மேற்கு பிரதேசசபை, வலி. மேற்குப் பிரதேச செயலகம் வலி.தென்மேற்கு பிரதேச சபை, வலி. தென் மேற்குப் பிரதேச செயலகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மக்களின் பிரச்சினைக்கு உடன் தீர்வு காண நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முன்வரவேண்டும். பிரான்பற்று, வடலியடைப்பு எல்லை நிர்ணயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தொடர்பு கொண்டு பிரச்சி னையைத் தீர்ப்பதற்கு எடுத்த நடவடிக்கைக்கும் நன்றி -என்றார். (ற-50)

## யாழ். மணிக்கூட்டுக் கோபுரக் கடிகாரம் செயலிழந்தது

யாழ்ப்பாணம், டிசெ.2
யாழ்ப்பாணம் மணிக் கூட்டுக் கோபுரத்தில் உள்ள கடிகாரம் செயலிழந்துள்ளது. அந்தக் கடிகாரம் அடிக்கடி செயலிழக்கின்றது என்று மக்கள் விசனம் தெரிவித்தனர். கடிகாரத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கடிகாரத்தின் மின்கலம் அடிக்கடி பழுதடைகின்றது. கடிகாரத்தைப் பொருத்திய தென் பகுதியைச் சேர்ந்த நிறுவனம் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். அவர்கள் கடிகாரத்தைத் திருத்துவார்கள் - என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (ற-17)

## அதிபர் விடுதிக்கு 4 பரப்புக் காணி அன்பளிப்பு

சாவகச்சேரி, டிச.2
சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அதிபருக்கு வதிவிட விடுதி அமைப்பதற்காக 4 பரப்புக் காணி கல்லூரியின் பழைய மாணவர்களால் கொள்வனவு செய்யப்பட்டுவழங்கப்பட்டுள்ளது. நடுவண் கல்வி அமைச்சு கல்லூரியின் அதிபர்களுக்கு வதிவிட விடுதி அமைத்துக் கொடுக்கவுள்ளது. தென்மராட்சி கல்வி வலயத்தில் ஒரேயொரு தேசிய பாடசாலையான சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் அதற்குத் தெரிவு செய்யப்பட்டது என்று-கல்லூரிக்கு வந்த கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்திருந்தார்.
கல்லூரி வளாகத்தில் போதிய இடவசதி இல்லாததால், கல்லூரிக்கு முன்பாக சங்கத்தானை ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள 4 பரப்புக் காணியைக் கல்லூரியின் பழைய மாணவர்கள் 43 லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்து கல்லூரிக்கு வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# பெண் தலைமை குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தத் திட்டம்

### விவரங்களைச் சேகரிக்கின்றது வடக்கு முதலமைச்சரின் அமைச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 2
வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப் பட்ட பெண் தலைமைத்துவக் குடும் பங்களின் விவரங்களைத் திரட்டி, அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதற்கான வேலைத் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகள் வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டன என்று தெரிய வருகின்றது.
பெண்கள் விவகாரம், புனர்வாழ்வு தொடர்பான அடிப்படைத் தரவுகளைத் திரட்டும் செயற்றிட்டம், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்து வடக்கில் உள்ள அரச நிறுவனங்களுடன் இணைந்த வகையில் முன்னெடுக்கப்படவுள்ளது.
வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், போரால் கணவனை இழந்த பெண்கள், கணவரை இழந்த பெண்கள், போரால் மாற்றுத் திறனாளிகள் ஆக்கப்பட்டோர், வாழ்வாதார இருப்புக்களை இழந்தோர், சொத்துக்கள் மற்றும் வீடுகளை இழந்தோர் மற்றும் சிறப்புத் தேவைக்கு உட்பட்டோர் போன்ற பிரிவுகளுக்குள் பெரும் எண்ணிக்கையான பெண்கள் உள்ளடங்கியுள்ளனர். அவர்களுக்கான வாழ்வாதாரம், வீடமைப்பு உதவிகள், மல சலகூட உதவி மற்றும் விசேட தேவை களை இனங்கண்டு நடைமுறைப்படுத்த வேண்டியது மிகப் பெரிய சவாலாக மாறியுள்ளது. இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு மிக அவசியமானது.
இந்தப் பொறுப்பையும், கடமையையும் நிறைவேற்றுவதற்கு இந்தக் குடும்பங்கள் தொடர்பான அடிப்படைத் தரவுகளையும், அவர்களுடைய தேவைகள் பற்றிய மதிப்பீட்டையும் பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகப் பெற்றுக்கொள்வது மிக அவசியமாகவுள்ளது.
திரட்டப்படும் தரவுகளின் அடிப்படையிலேயே 2017 ஆம் ஆண்டுக்கான பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்கள் உடன் அடையாளப்படுத்த வேண்டியுள்ளது.
இந்தப் பணிகள் யாவும் 31 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த வேலைத் திட்டத் துக்குச் சகலரது ஒத்துழைப்பையும் கோருகின்றோம்- இவ்வாறு வட மாகாண முதலமைச்சு தெரிவித்தது. (ற-5-7-50)

## மாவீரர் குடியிருப்பு மக்களுக்கு நல்லின ஆடுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 2
முல்லைத்தீவு, மாவீரர் குடியிருப்பு மக்களுக்கு வடக்கு கால்நடை அபிவிருத்தி அமைச்சால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நல்லின ஆடுகள் வழங்கப்பட்டன. கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.வசீகரனின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு கால்நடை அபிவிருத்தித் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு நல்லினஆடுகளை வழங்கி வைத்தார் என்று அமைச்சு அனுப்பிய செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.



அதில் உள்ளதாவது:
வடக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சு பின்தங்கிய ஒரு கிராமத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழும் குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு நல்லின ஆடுகளை வழங்கும் 'தகர்ங என்ற திட்டத்தை முன்னெடுக்கின்றது.
அதன் கீழ் மாங்குளம் - துணுக்காய் வீதியில் அமைந்துள்ள மாவீரர் குடியிருப்பு மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக முதற்கட்டமாக 17 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு 7 இலட்சம் ரூபா பெறுமதியில் இந்த ஆடுகள் வழங்கப்பட்டன.
இவை கலப்பு இல்லாத தூய யமுனாபாரி ஆடுகளாகும். இந்த ஆடுகளை இன விருத்தி செய்து எதிர்காலத்தில் வடக்கின் ஏனைய பகுதிகளுக்குத் தரமான யமுனாபாரி ஆடுகளை விநியோகிக்கும் நோக்கிலும், இந்தக் குடியிருப்பு மக்கள் கணிசமான வருவாயைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் இந்தத் திட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது. நிகழ்வில் வடக்கு மாகாணசபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். மாவீரர் குடியிருப்புப் பகுதியில் நடுகை செய்வதற்கென மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ற-10)

## நன்னடத்தை அமைச்சின் விவரங்கள் புத்தகமாக

யாழ்ப்பாணம், டிசெ. 2
வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ மற்றும் சிறுவர் நன்னடத்தை அமைச்சின் செயற்பாடுகளின் விவரங்கள் கடந்த வாரம் புத்தகமாக வெளியிடப்பட்டது.
சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக, வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் கலந்து கொண்டு நூலின் முதற்பிரதியைப் பெற்றார். (ற-ஏ)

## யாழ். ப.நோ.கூ. சங்க வளாகத்தில் மரக் கன்றுகள் நடுகை

யாழ்ப்பாணம், டிசெ.2
மரம் நடுகை மாதத்தின் இறுதி நாளான நேற்று யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் மரம் நடுகை செய்யப்பட்டது. சங்கத் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் பயன்தரும் மரக்கன்றுகளை நட்டார். சங்கப் பணியாளர் களுக்கும் பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.
யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புக்கள் மரம் நடுகை மாதத்தை முன்னிட்டு பயன்தரும் மரக்கன்றுகளைப் பணியாளர்களுக்கு வழங்கின. சங்க வளாகத்திலும் பொது இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன. (ற-வ-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சிக்கு எதிராக வீதியில் இறங்குவோம்

## லால்காந்த எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 2
மைத்திரி-ரணில் நல்லாட்சி அரசு, 2017 ஆம் ஆண்டுக்காக முன்வைத்துள்ள வரவு- செலவுத் திட்டம் கடன், தண்டப் பணம், வரி உட்பட கட்டணங்கள் அறவீடுகளினால் நிரம்பியுள்ளதாகவும், மக்களின் பொதுச் சொத்துக்களை விற்பனை செய்யும் வகையிலும், மக்களின்உரிமைகளை மீறும் வகையில் காணப்படுவதாகவும் தேசிய தொழில் சங்க மத்திய நிலையத்தின் தலைவர் லால்காந்த தெரிவித்தார்.

கொழும்பு-கோட்டையில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற துண்டுப் பிரசுர விநியோக நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பல்வேறு இடைஞ்சல்கள் காரணமாக நாடு முழுவதும் தொழிற் சங்கங்கள் வீதிக்கு இறங்கியுள்ளன.

இன்று மருத்துவர்கள் வீதிக்கு இறங்கியுள்ளனர். நாளை தனியார் பஸ், முச்சக்கர வண்டி, லொறி, பாடசாலை வான் என்பனவும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (து)



தேசிய பௌத்த அறிஞர் சபை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் கூடியது. பிரிவெனா கல்வி, இளம் துறவியர் நிறுவனம், தேரவாத பௌத்த நிலையத்தை நிறுவுதல், 2017 சர்வதேச வெசாக் பண்டிகை ஆகிய விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (து)

# தொகை மதிப்பீட்டுக்கு அடுத்த ஆண்டில் 'ரப்'

## டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சு நடவடிக்கை

கொழும்பு,டிசெ. 2
அடுத்த ஆண்டு முதல் தொகைமதிப்புப் புள்ளி விவரத் தகவல்களை திரட்டுவதற்கு ரப்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தபால் தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் தொழிற் பலம் தொடர்பான தகவல்களைப் பெறும் நோக்கில் ஒவ்வொரு வருடமும் தொகைமதிப்புப் புள்ளிவிவரவியல் திணைக்களம் மாவட்டங்களில் கணக்கெடுப்புக்களையும் மதிப்பாய்வுகளையும் நடத்தி வருகின்றது. அந்தத் தகவல்களின் அடிப்படையிலேயே இலங்கையில் தொழில் பலம் மற்றும் தொழில்வாய்ப்பின்மை என்பன தொடர்பில் அறியப்படுகின்றது.

> “குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விவரத் திணைக்களமும் கொரிய அரசும் இணைந்து முன்னெடுக்கும் 'கொஷ்டட்' என்ற கருத்திட்டத்தின் கீழ் 'ரப்' மூலம் தகவல்கள் சேகரிக்கும்போதே அவை தரவேற்றம் செய்யப்படவுள்ளன.

குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விவரத் திணைக்களமும் கொரிய அரசும் இணைந்துமுன்னெடுக்கும் 'கொஷ்டட் என்ற கருத்திட்டத்தின் கீழ் ரப் மூலம் தகவல்கள் சேகரிக்கும்போதே அவை தரவேற்றம் செய்யப்படவுள்ளன.

குறித்த தகவல்களைத் திரட்டுவதற்கு அடுத்த ஆண்டு தொடக்கம் ரப்களைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றுள்ளது. (து)

## மீனவர்களுக்கும் 'ரப்'

கொழும்பு, டிசெ. 2
கடற்றொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களுக்கு ரப் கணினிகளை வழங்கும் திட்டமொன்றை அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக அரசு ரூபா 183 மில்லியன் ஏற்கனவே ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.

குறித்த 'ரப்' கணினிகளை எவ்வாறு உபயோகிப்பது என்பது தொடர்பிலும் செயலமர்வுகளை மீனவர்களுக்கு நடத்த அமைச்சு திட்டமிட்டுள்ளது. (து)

# கர்ப்பிணிப் பெண் கொலை: கணவருக்கு மறியல் நீடிப்பு

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதுக் கர்ப்பிணிப் பெண்ணை கழுத்து நெரித்துக் கொலைசெய்த குற்றச்சாட்டில் கைதான கணவனைஇம்மாதம்14ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் டி.சரவணராஜா நேற்று உத்தரவிட்டார்.

கிண்ணியா - சூரங்கல் சாந்திநகர் பகுதியைச் சேர்ந்த அன் அஹமட் பிர்னாஸ் (வயது-18) என்பவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபரான கணவர் கடந்த நவம்பர் 20 ஆம் திகதி காலை தனது மனைவியான (வயது-15) நளீம் ஜனூபா என்பவரின்கழுத்தைநெரித்து கொலை செய்ததாகச் சட்ட வைத்தியப் பரிசோதனையின் மூலம் தெரியவந்ததையடுத்து கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-ய-45)

## சீனாவிலிருந்து திரும்பியது மகிந்த குழு

கொழும்பு, டிசெ. 2
சீனாவுக்கு ஒரு வார உத்தியோகப்பூர்வ பயணமொன்றை மேற்கொண்டிருந்த, முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட இணைந்த எதிரணி உறுப்பினர்கள் நேற்று வியாழக்கிழமை காலை நாடு திரும்பினர்.

வெளிவிவகார முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான லொஹான் ரத்வத்த மற்றும் உதித்த லொக்குபண்டார ஆகியோரை உள்ளடக்கிய இந்தக் குழுவினர் கடந்த நவம்பர் மாதம் 23ஆம் சீனாவுக்குப் பயணித்திருந்தனர்.

சீன அரசால் விடுக்கப்பட்டுள்ள அழைப்பின் பேரிலேயே, இவர்கள் சீனாவுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (து)

## பாடசாலைகளுக்குள் சீருடை விற்கக் கல்வி அமைச்சு தடை

பாடசாலைகளுக்குள் மாணவர்களின் சீருடைத் துணிகளை விற்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

அத்துடன், மாணவர்களிடம் தங்களுக்கான சீருடைத்துணிகளைவாங்கிக் கொள்வதற்காகஎந்தவொருநிறுவனத்தினதோ அல்லது தனிநபரினதோ பெயரைப்பரிந்துரைசெய்வதற்கு அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சீருடைத் துணிகளுக்கான வவுச்சர்களை மாணவர்களிடம் கையளிப்பது மட்டுமே அதிபர்களின் பொறுப்பு எனவும், அந்த வவுச்சர்களுக்கானதுணிகளைப் பாடசாலைக்குள் கொண்டு வருவதற்கோ விநியோகம் செய்வதற்கோ அனுமதி கிடையாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை, லங்கா சலுசல நிறுவனம் இந்தச் சீருடைத் துணி விநியோகத்தில் பல குளறுபடிகளைச் செய்துவருவதாக கல்வி அமைச்சுக்குக் கிடைத்துள்ள ஏராளமான முறைப்பாடுகளின் அடிப்படையில் அந்த நிறுவனம்சீருடைத்துணிகளை விநியோகம் செய்வதற்குக்கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தடைவிதித்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. (து)

# பொலிஸ் சாவடியை உடனே அகற்றுங்கள்

## கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



செங்கலடி, டிசெ. 02
பல்கலைக்கழக வளாகத்தில்உள்ளபொலிஸ் காவல் நிலையத்தை அகற்றுவது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்துக் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வந்தாறுமூலை வளாகப் பிரதானநுழைவாயில்முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மூவின மாணவர்களும்கலந்துகொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவல் நிலையம் அகற்றப்பட வேண்டும், பல்கலைக்கழக வளாகத்தில சீசீரிவி கமரா பொருத்தும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும், மாணவர்களுக்கான பரீட்சைகள் உரிய நேரத்தில் நடத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும், மகாபொல மற்றும்ஏனையகொடுப்பனவுகளில் வரி அறவிடக்கூடாது, விடுதி வசதிகள் வழங்கப்படவேண்டும் போன்றபலகோரிக்கைகளை முன்வைத்து கோசங்களை எழுப்பியும் பதாகைகளை ஏந்தியவாறும் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(து-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலரும் ஏற்கும் அரசமைப்பே உருவாக்கப்படும்

## அதுவே அரசின் நிலைப்பாடு என்கிறார் அமைச்சர் அர்ஜுன

கொழும்பு,டிச.2
அனைத்துத் தரப்பினரும் ஏற்கும் வகையிலான அரசமைப்பை உருவாக்கவேண்டும் என்பதே தற்போதைய அரசின் நிலைப்பாடு என கப் பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.



உடுகம்பொலவில் நடைபெற்ற அறிவை மேம்படுத்துவோம் உலகை வெல்வோம் எனும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சொத்துக்களை ஒருபோதும் விற்பதற்கு இடமளிக்க மாட்டேன். வெள்ளை யானையாகிய அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் விற்ப தற்கு நாம் தீர்மானிக்கவில்லை. அம்பாந் தோட்டைத் துறைமுகத்தில் கொள்கலன் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பொருட்டு முதலீட் டாளர்களுக்கு குத்தகைக்கு விடுவதற்கு உத்தேசித்துள்ளோம்.

இன்று அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் கண்ணீர் விடுகின்றனர். பல்வேறுபட்ட கதைகளை கூறி வருகின்றனர். கடந்த ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் செயற்பாடுகளை முன் னெடுப்பதற்கு அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுக முகாமைத்துவ நிறுவனத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட 482 பேரின் தொழில்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. ஆனால் நாம் அவர்களை நிரந்தரமான ஊழியர்களாக மாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டோம்-என்றார். (த-8)

## குளிரால் மாணவன் வைத்தியசாலையில்

திருமலை, டிச.02
திருகோணமலை – மஹாதிவுல்வெவ சிங்கள மகாவித்தியாலய மாணவர் ஒருவர் நேற்று அதிக குளிரினால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

06ஆம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவரே இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை வழமைபோல் பாடசாலைக்கு வருகை தந்த இவர் வகுப்பில் குளிர்வதாகக் கூறியதாகவும், அதனையடுத்துச் சிறிது நேரத்தில் மயக்கமுற்றதாகவும் தெரியவருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்து காற்றுடன் கூடிய மழை பெய்து வருவது குறிப்பிடத்தக்கது. (த-ய-45)

## 500 மில்லியன் ரூபா நிதி கிழக்குக்கும் கிடைத்தது

மட்டக்களப்பு, டிசெ 02
கிழக்கு மாகாணத் துக்கு 500 மில்லியன் ரூபா நிதியை மத்திய அரசு விடுவித்துள்ள தா கக் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னு வலாப்தீன் நஸீர் அஹமட் நேற்றுத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத் துக்கு வழங்கப்பட வேண்டிய நிதியை விரைவில் வழங்க ஆவன செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தான் கடந்த சில தினங்களுக்கு முன்னர் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் இந்த நிதி விடு விக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் கூறி னார்.

இதனடிப்படையில் மேலும் 600 மில்லியன் ரூபா வழங்கப்பட வுள்ளதாகவும், குறித்த நிதியையும் விரைவில் கிழக்கு மாகாணத் துக்கு வழங்க நடவ டிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-ய-46)

## பாதுகாப்புச் செயலருக்கு அழைப்பாணை

கொழும்பு, டிசெ 2
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி உள் ளிட்ட ஐவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

குறித்த ஐவரையும் எதிர்வரும் வருடம் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதி மன்றில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது.

மாலபே குழுவினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதே இந்த அழைப்பாணை விக்கப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் இருந்து ஒப்புதல் பெறாமல் இரண்டு ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவத்துடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்ப தற்கே குறித்த நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் விஜித்கே மல்கொட, எஸ்.துரை யப்பா ஆகியோர் பாதுகாப்புச் செய லர் உள்ளிட்ட ஐவருக்கும் அழைப் பாணை விடுத்தனர். (தி)



## மின்சார சபை ஊழியர் போராட்டம்

கொழும்பு, டிசெ 2
சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து லக்சபான மின் சாரசபை ஊழியர்களினால் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

லகச்பான மின்சார சபை பிரதிப் பொதுமுகாமையாளர் கரியாலயத்தின் முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இலங்கை மின்சார சபையின் இணைந்த தொழிற்சங்க முன்னணியினால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் கோரியும், பதவி உயர்வு உட்பட பல கோரிக் கைக்களை முன் வைத்தும் ஊழியர்கள் கோசங்களை எழுப்பினர். (த-ய-43)

## இடது பக்கத்தால் முந்தும் வாகனங்களுக்கு தண்டத்தைக் குறைக்க அமைச்சர் இணக்கம்

இடப்பக்கமாக வாக னங்களை முந்திச்செல்லும் சாரதிகளுக்கான 25 ஆயிரம் ரூபா அபராதத் தைக் குறைக்க போக்கு வரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம், பாடசாலை வான் உரிமையாளர்கள் சங்கம், மோட்டார்சைக்கிள் உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் போக்குவரத்து அமைச்சில் நடந்த சந்திப்பொன்றின் முடிவிலேயே அமைச்சர் இந்த இணக்கத்தைத் தெரிவித்தார்.

அத்துடன், ஓட்டோக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள உச்சபட்ச வேகமான 40 கிலோமீற்றரை 50 கிலோமீற்றராகவும், மோட்டார் சைக்கிள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 50 கிலோ மீற்றர் உச்சபட்ச வேகத்தை 70 கிலோ மீற்றராகவும் உயர்த்த நடவடிக்கை எடுப்பதாக வும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் அதிக வேகத்தில் வாகனங்களைச் செலுத்துதல், மது போதையில் வாகனங்களைச் செலுத்துதல், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் இல்லாமல் வாகனங்களைச் செலுத்துதல் அல்லது செலுத்த அனுமதித்தல் மற்றும் ரயில் கடவைகளில் கவனமின்றி உட்புகுதல் போன்ற குற்றங்களுக்கான தண்டப் பணத்தில் மாற்றம் செய்யப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். (தி)

## ஜனாதிபதி தலைமையில் காஸ்ரோவுக்கு இரங்கல்

கொழும்பு, டிசெ 2
மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் அரச வைபவமொன்று இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. மறைந்த உலகத் தலைவர் ஒருவருக்காக இலங்கையில் நடத்தப்படும் முதலாவது அரச இரங்கல் வைபவம் இதுவேயென ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில் நடக்கவுள்ள இந்த வைபவத்துக்கு இலங்கையிலுள்ள கியூபாத் தூதுவர் உட்பட ஏனைய பல வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி உட்பட இடதுசாரிக் கட்சித் தலைவர்களுக்கும், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்விமான்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது. (தி)

# 19 வருடங்கள் நடந்த படுகொலை வழக்கு

## ஒருவருக்கு தூக்கு

கொழும்பு, டிசெ 2
பாணந்துறை, ஹொரேதூடுவ பிரதேசத்தில் 1997ஆம் ஆண்டு இளைஞன் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் ஆறு சந்தேகநபர்களுக்கு எதிராகப் பாணந்துறை மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணை 19 வருடங்களாக நடந்த பின் நேற்றுமுன்தினம் முதலாவது சந்தேகநபருக்கு [illegible] மேல் நீதிமன்ற நீதிபதி [illegible] விதித்ததுடன், ஏனைய சந்தேகநபர்கள் ஐவரையும் விடுதலை செய்தார்.

1997ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி பாணந் துறை, ஹொரேதூடுவ பிரதேசத்தைச் சேர்ந்த ருக்மால் வசந்த எனும் இளைஞரைக் [illegible] குத்திக் கொன்றதாக சந்தேக [illegible]ர்கள் அறுவருக்கும் எதிராக சட்டமா அதிபரால் இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனை கதை இலக்கிய பயிலரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.2
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் (பருத்தித்துறை) புனை கதை இலக்கியம் தொடர்பான பயிலரங்கு நிகழ்வை கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித் துறை பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டது.
பிரதேச செயலர் ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற பயிலரங்கின் வளவாளர்களாக மூத்த எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகன் கலாநிதி சு. குணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
பயலரங்கில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் உயர்தர வகுப்பு பாடசாலை மாணவர்களும் மற்றும் படைப்பாளிகள், ஆர்வலர் களும் கலந்து கொண்டனர். (ற-108)



*பன்னாட்டு எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு வவுனியா பிராந்திய சுகாதார திணைக்களத்தால் நேற்று எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. வவுனியாவில் அமைந்துள்ள பிராந்திய சுகாதாரத் திணைக்கள அலுவலகத்திலிருந்து வவுனியா பஸ் நிலையம் ஊடாக பசார் வீதியை அடைந்து இலுப்பையடி வழியாக விழிப்புணர்வு வாகனப் பேரணி நடாத்தப்பட்டது. வியாபார நிலையங்களுக்கு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.* (ற-5)

# தடை செய்யப்பட்ட பொலித்தீன் விற்றால் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.2
தடிப்புக் குறைந்த – இருபது மைக்றோவுக்குக் குறைவான பொலித்தீன்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
இவ்வாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் தெரிவித்தனர்.
இருபது மைக்றோவுக்கு குறைவான பொலித்தீன்கள் மனித சமுதாயத்துக்கு கேடுவிளைவிக்கும். இந்த வகையான பொலித்தீன்களை விற்பனை செய்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையால் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்த வகையான பொலித்தீன்கள் விற்பனை செய்யப்படுவதை அறிந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையினர் யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். சில வர்த்தக நிலையங்களில் இவ்வாறான பொலித்தீன்கள் விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டு அவற்றின் விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டதுடன் அவற்றை உடனடியாக அகற்றுமாறும் பணிக்கப்பட்டது.
தடை செய்யப்பட்ட பொலித்தீன்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)




# போதனா வைத்தியசாலையில் தண்ணீர் சுத்திகரிப்புத் தொகுதி

யாழ்ப்பாணம், டிசெ. 02
யாழ். போதனா வைத்தியசாலையில் தூய்மையான குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கான சுத்திகரிப்புத் தொகுதி நேற்று கடற்படை வடக்கு கட்டளைத்தளபதி றியர் அட்மிரல் பியால் டி சில்வாவால் திறக்கப்பட்டது.
ஜனாதிபதி செயலகத்தின் சிறுநீரக நோய்த்தடுப்புச்செயலணியின் நிதியுதவியில் அபிவிருத்தி மற்றும் இலங்கை கடற்படை சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இந்தக் குடிதண்ணீர் சுத்திகரிப்புத் தொகுதி அமைக்கப்பட்டது.
நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி மற்றும் மருத்துவர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், கடற்படையினர் என பலர் கலந்து கொண்டனர். (ற-7)


# பொருத்தமான இடத்திலேயே மருதம் மாதிரிப் பூங்கா

## *அழிவடையும் அபாயம் இல்லை என வடக்கு விவசாய அமைச்சர் விளக்கம்*

யாழ்ப்பாணம், டிசெ. 2
கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள மருதம் மாதிரிப் பூங்கா அழிவடையும் எந்த அபாயமும் இல்லை. பொருத்தமான இடத்திலேயே அது அமைக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.
கிளிநொச்சி, மகிழங்காடு பிரதேசத்தில் இரணைமடு இடதுகரை வாய்க்காலின் அருகில் மருதம் மாதிரிப் பூங்கா அமைக்கப்பட்டது. வடக்கு மாகாண விவசாய அமைச்சால் அமைக்கப்பட்ட பூங்கா, கடந்த மாதம் முதலாம் திகதி வடக்கு முதலமைச்சரால் திறக்கப்பட்டது.
தற்போது இந்தப் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. "நடப்பட்ட மரங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பொருத்தமற்ற இடத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு இதனை அமைத்துள்ளது'' என்று பல்வேறு விமர்சனங்கள் வெளிவந்துள்ளன. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே வடக்கு விவசாய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மருதம் அமைக்கப்பட்ட பிரதேசமானது நீர்ப்பாசன ஒதுக்கீட்டு காணி. புதர் நிறைந்த தாழ்நிலப் பகுதி. அதனை அழகுபடுத்தவும் பிரதேசத்துக்கு பயன்பாடுள்ளதாகவும் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. மழை காலத்தில் வெள்ளம் தேங்கும் என்பதை அறிந்தவாறே இதற்குரிய திட்ட முன்மொழிவை நீர்ப்பாசனத் திணைக்களம் தயார் செய்தது.
தாழ்நிலப் பிரதேசத்தின் தன்மைகளுக்கேற்ப தகவமைவு கொண்டு வளரக்கூடிய மரங்களுக்குப் பொருத்தமான இடம் என்பது நிபுணத்துவ ஆலோசனை மூலம் உறுதி செய்யப்பட்டது. தாழ்நிலப் பிரதேசமானது வெள்ளநீரால் பாதிக்காத வகையில், அழகுபடுத்தப்பட்ட குட்டை உட்புறத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
மருதநில மரங்களின் மாதிரிப் பூங்கா என்று அடையாளப்படுத்தப்பட்டிருப்பதால் அது பொழுது போக்கு இடமோ அல்லது வனப்புடன் காட்சியளிக்கும் சிறு பூமரங்களிலான பூங்காவோ அல்ல. தாழ்நிலத்திலும் வளரக்கூடும் என்று அடையாளப்படுத்தப்பட்ட மரங்களை நட்டு சமூகம் பயன் பெற வேண்டும் என்ற அடிப்படையில் மனித முயற்சியிலான சிறுவனத்தை உருவாக்குவதைக் கொண்ட திட்டமாகும்.
கடந்த 21ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரையில் கிளிநொச்சி மாவட்டத்தில் குறுகிய காலத்திற்குள் பெய்த அதிகூடிய மழையால் மருதம் பகுதியையும் வெள்ளம் சூழ்ந்திருந்தது. திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட தேவையான மாற்று ஏற்பாடுகளின் மூலம் அது உடனடியாக சாதாரண நிலைக்கு கொண்டு வரப்பட்டது. வெள்ளப் பாதிப்பானது மருதம் அமைக்கப்பட்டதன் நோக்கத்தை இல்லாமல் செய்து விடவில்லை. தொடக்க நாள் நிகழ்வில் நடப்பட்ட புங்கை மரங்கள் அதே இடத்தில் நிலைத்துள்ளன.



மருதம் மாதிரிப் பூங்காவானது திணைக்கள வளங்களைப் பயன்படுத்தியும், ஏனைய நிறுவனங்களது பங்களிப்பைப் பயன்படுத்தியும் மேற்கொள்ளப்பட்டமையால் மட்டுப்படுத்தப்பட்ட நிதியே பயன்படுத்தப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கை மருதம் பூங்கா நீண்டகாலத்தில் நிச்சயம் அடையும் என்பதனால் வீண் விரயமாக்கப்பட்டு விட்டது என்று அச்சம் கொள்ளவேண்டியதில்லை என்றார். (ற-5)



# ஆரையம்பதி வைத்தியசாலை குறைபாடுகள் தொடர்பில் ஆய்வு

மட்டக்களப்பு, டிசெ.2
ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலையின் குறைகளையும் தேவைப்பாடுகளையும் நேரில் அறிந்து கொள்வதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் சுஜாதா சேனாரத்ன தலைமையில் 8 பேர் கொண்ட குழு நேற்றுமுன்தினம் அங்கு சென்றது. சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பணிப்புரைக்கமைவாக அவர்கள் அங்கு சென்றனர்.
சுகாதார அமைச்சின் செயலாளர் குழுவினர் வைத்தியசாலைத் தரப்பினரிடம் விவரங்களைக் கேட்டறிந்தனர்.
சுகாதார அமைச்சின் குழுவினரால் ஆரையம்பதி, காத்தான்குடி, பாலமுனை மற்றும் சிகரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கும், ஆரையம்பதி வைத்திய சாலைக்கும் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.
ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலையை எதிர்காலத்தில் தரமுயர்த்தப்பட வேண்டிய அவசியத்தையும் தேவைப்பாட்டையும் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர். (ற-ய-46)

# சில குழுக்கள் வீதிகளில் இறங்கி மக்களைக் குழப்புவதற்கு முயற்சி

## *மாகாணசபை உறுப்பினர் சுபையிர் குற்றச்சாட்டு*

அம்பாறை, டிச.2
ஒரு சில குழுக்கள் வீதியில் இறங்கிமூவின சமூகங்களுக்கும் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி மீண்டுமொரு இனக் கலவரத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ் சுபையிர் தெரிவித்தார்.
கிழக்கு மாகாணசபையின் 66ஆவது சபை அமர்வு தவிசாளர் சந்திரதாசகலபெதி தலைமையில் நடைபெற்றது.
அதில் மாகாண சபை உறுப்பினர்களான சிப்லி பாறூக், கிருஸ்ணபிள்ளை ஆகியோரால் கொண்டுவரப்பட்ட இனவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற அவசரப் பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சிங்கள இனவாதக் குழுக்கள் மாத்திரமல்ல எல்லா இனங்கள் மத்தியிலும் சில குழுவினர் இருக்கின்றார்கள். அவர்கள் ஆட்சியிலே இல்லாமல் போனாலும் இந்த நாட்டிலே ஒரு குழப்பம் ஏற்பட வேண்டும். மீண்டும் இந்த நாட்டை ஆளவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றனர். அவர்களின் எதிர் பார்ப்புக்கள் ஒருபோதும் நிறைவேறாது. பொலிசார் சட்டத்துக்குப் புறம்பான சம்பவங்கள் நடைபெறுகின்ற போது பக்கச்சார்பின்றி சட்டத்தை நடைமுறைப்படுத்தி இனவாதச் செயற்பாடுகளை அடக்கவேண்டும். இதன் மூலம் எந்தவித பிரச்சினைகளுமின்றி மூவின மக்களும் சந்தோசமாக வாழமுடியும்– என்றார். (ற-ய-49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படை விட்டோடிகளுக்கு டிசெ. 31 வரை காலக்கெடு

கொழும்பு, டிசெ 2
சட்டபூர்வமாக விடுமுறை எடுக்காமல் நீண்டகாலமாகப் பணிக்குத் திரும்பாத முப் படையினருக்கு ஒருமாத காலம் பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முதல் இம்மாதம் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் இந்தப் பொதுமன்னிப்புக் காலத்தில் அவர்கள் பணிக்குத் திரும்ப வேண்டும் அல்லது உரிய சட்ட சம்பிரதாயங்களின் பின் சட்டபூர்வமாகப் பதவி விலக வேண்டுமெனப் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி நிபந்தனை விதித்துள்ளார்.

இராணுவத்தில் 174 அதிகாரிகளும், 42,706 சிப்பாய்களும், கடற்படையில் 26 அதிகாரிகளும், 6,133 சிப்பாய்களும், விமானப்படையில் 38 அதிகாரிகளும், 2,866 சிப்பாய்களும் நீண்ட கால விடுமுறைகள் எதுவும் எடுக்காமல் பணிக்குச் சமுகமளிக்கத் தவறியுள்ளதாக அவர் தெரிவித்தார். (கு)

# ரவிராஜ் கொலை வழக்கின் அரச சாட்சிக்கு அச்சுறுத்தல்

## கருணா சிறையில் உள்ளதால்

யாழ்ப்பாணம், டிசெ. 2
கருணா அம்மான் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளதால், ரவிராஜ் கொலை வழக்கின் அரச சாட்சிக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது. இதனால் அவரைச் சிறப்பு இடத்தில் தடுத்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விடுக்கப் பட்ட கோரிக்கைக்கு நீதிமன்றம் இணங்கியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவி ராஜ் கொல்லப்பட்ட வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. இதில் கருணா குழுவினரும் தொடர்புபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் வழக்கு விசாரணையில் அரச தரப்பு சாட்சியாக மாறிச் சாட்சியமளிக்கும் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் மன்னம்பேரியின் உயிருக்குச் சிறையில் அச்சுறுத்தல் உள்ளது.

ஏனெனில், விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மானும் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். எனவே, மன்னம்பேரியைச் சிறப்பு இடத் தில் தடுத்து வைக்க, அரச சாட்சியாளரின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக் கில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி தர்சன நீதிபதியிடம் கோரிக்கை முன்வைத்தார். நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொண்டு அவரைத் தனியான இடத் தில் தடுத்து வைக்க உத்தரவிட்டது. (கு-5)



# இனபேதத்தை மாணவர் சமூகம் ஒழிக்கவேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்து

மட்டக்களப்பு, டிச.02
இனபேதம் என்பதை எதிர்கால மாணவர் சமுதாயம் ஒழிக்கவேண்டும் என முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மட்டக்களப்பில் தெரி வித்தார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் கிழக்கு, தெற்கு கல்வித் திணைக்களங்கள் இணைந்து நடத்திய தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான நிகழ்வு கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் மாவட்டப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்றது. இதில் சந்திரிகா பங்கேற்றார்.

காலி, மாத்தறை, கம்பஹா, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு கல்வி வலயத்திலும் ஒவ்வொரு சகோதர பாடசாலையை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இன பேதம் என்பதை எதிர் கால மாணவர் சமுதாயம் ஒழிக்கவேண்டும். அதற்காக அனை வரும் பாடுபடவேண்டும் என்று சந்திரிகா தனதுரையில் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ் உட்பட பல அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (கு-ய-46)

# வாகன உரிமை மாற்றத்துக்கு மேலும் ஒரு மாதம் அவகாசம்

கொழும்பு,டிசெ 2
தாமதமான வாகன மாற்றங்களை அபராதப் பணம் செலுத்தாமல் செய்துகொள்வதற்கு விதிக்கப்பட்டிருந்த சலுகைக் காலம் மேலும் ஒரு மாதத் தால் நீடிக்கப்பட்டிருப்பதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் நவம்பர் 30 வரை ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த சலுகைக் காலத்தில் மேலதிகக் கட்டணங்களோ அபராதமோ இன்றி வாகன உரிமை மாற்றங்களைச் செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தபோதிலும், இறுதிநேரத்தில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக இந்தச் சலுகைக் காலம் மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்தார்.

நீடிக்கப்பட்டுள்ள இந்தச் சலுகைக் காலத்தின் இறுதி நேரம் வரை காத்திராமல் பொதுமக்கள் தங்களது வாகன உரிமை மாற்றங்களைச் செய்துகொள்ள வேண் டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (கு)

# ரவிராஜைக் கொன்றவர் கருணா குழு உறுப்பினரே

## பிரதிவாதியின் சட்டத்தரணி மன்றில் வாதம்

## அரச சாட்சி பொய்ச் சாட்சி சொல்கிறார் என்றும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 2
கடற்படைப் புலனாய்வு அதிகாரி ரவிராஜைக் கொல்லவில்லை. கருணா குழுவின் உறுப்பினர் ஒருவரே ரவிராஜைக் கொலை செய்தார். இவ்வாறு மன்றில் வாதிட்ட பிரதிவாதியின் சட்டத்தரணி, அரச தரப்புச் சாட்சி கருணா குழு மீதான அச்சம் காரணமாக வும், தன்னைப் பாதுகாத்துக்கொள் வதற் கும்காட்டிக் கொடுத்துப் பொய்ச் சாட் சியம் சொல்வதாகத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை தொடர்பான வழக்கு விசாரணை, சிங்கள சிறப்பு அறங்கூறும் சபை முன் பாக நடைபெற்று வருகின்றது. அரச தரப்புச் சாட்சியாக மாறி யுள்ள முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் மன்னம்பேரியை, பிரதிவாதியின் சட்டத்தரணி அனோஜ குறுக்கு விசாரணை செய்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரி 56 துப்பாக்கியால் ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்டதாக அனுமானத்தின் அடிப்படையில் கூறியதாக அரச சாட்சி குறிப்பிட்டார்.

இதன் பின்னர் ஏ.கே-47 துப்பாக்கிக்கும் ரி-56 துப்பாக்கிக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது என்று அரச சாட்சி தெரிவிக்க, பிரதிவாதி சட்டத்தரணி அதனை மறுத்தார். இதன் பின்னர் ரி-56 துப்பாக்கியில் ஒரே தடவையில் எத்தனை தோட்டாக்கள் செலுத்தலாம் என்று சட்டத்தரணி எழுப்பிய கேள்விக்கு, 30 குண்டுகள் செலுத்த முடியும் என்று அரச சாட்சி பதில் வழங்கினார். தொடர்ச்சியாகக் குண்டுகளைச் செலுத்த முடியும் என்றும் குறிப்பிட்டார்.

'துப்பாக்கிச் சூடு நடத்தியதும் சந்தேக நபர் உங்கள் வாகனத்தில் தன்னை ஏற்றிச் செல்லும்படி கூறினார்' என்று கேட்க ஆம் என்று பதில் வழங்கினார். 'அந்த நேரத்தில் சந்தேக நபருக்கு மாறாக எவர் வந்து வாகனத்தில் ஏறியி ருந்தாலும் நீங்கள் வாகனத் தைச் செலுத்திக் கொண்டு சென் றிருப்பீர்கள்?' என்று கேட்டதற்கு அரச சாட்சி மறுத்திருந்தார். அதன் பின்னர் புலனாய்வுப் பிரி வின் அதிகாரிகளை லோன் றிவத்த சென்று சந்தித்தாகவும் இது தொடர்பில் வாக்குமூலங் களில் கூறவில்லை என்றும் அரச சாட்சி குறிப்பிட்டார்.

'நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை யின் பின்னணியிலும் கருணா குழுவின் சிந்துஜன் என்பவரே உள்ளார் என்று கூறினீர்கள்?' என்று கேட்டதற்கு, அது குறித்து சிந்துஜன் எனக்கு கூறினார் என்று அரச சாட்சி மன்றில் தெரிவித்தார்.

'மேற்குறித்த கொலை தொடர் பில் கூறிய உங்களுக்கு ரவிராஜ் கொலை தொடர்பில் கூற அச்சமாக இருந்ததா?' என மீள எழுப்பப் பட்ட கேள்விக்கு, சாட்சி ஆம் என்று பதிலளித்தார். உண்மையைக் கூறினால் சிக்கல் வரும் என்பதை அறிந்திருந்தேன் என் றும் சாட்சி மன்னம்பேரி தெரிவித்தார்.

'எனவே நீங்கள் இந்த வழக்கில் கருணா குழுவைத் தாக்கும் வகையில் சாட்சியளித்தால் சிக்கல் வரும் என்பதால் கடற்படைச் சிப்பாய்களை மாட்டிவிடுவதற்காக பொய்ச் சாட்சியம் அளிக்கின்றீர்கள்' என்று பிரதிவாதி சட்டத்தரணி கேள்வி எழுப்ப, அதனை மறுப்பதாகச் சாட்சி குறிப்பிட்டார்.

கருணா குழுவினர் எவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பில் இருக்கவில்லை. அவர்கள் புலிகள் மீது கடும் கோபத்தில் இருந்தனர். புலிகளை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தனர். அதன் ஓர் அங்கமாகவே ரவிராஜ் கொல்லப்பட்டாரா என்பது தெரியவில்லை.

'சாமியுடன் உங்களைச் சந்திக்க வந்த குழு வினரே ரவிராஜைக் கொலை செய்த னர்' என்ற சட்டத்தரணியின் கேள் விக்கு இல்லை என்று மறுத்தார்.

'2006 ஆம் ஆண்டு சாமி என்பவர் இறந்தன் பிறகு அவர் மீதான அச்சம் அடங்கி நீர் அவருக்கு எதிராகச் சாட்சியளிக்கின்றீர்கள்?' என்ற கேள்விக்கு, இல்லை என்று மறுதலித்தார் அரச சாட்சி.

'உங்களைப் பாதுகாத்துக் கொள்ள எவரையும் காட்டிக் கொடுத்து பொய்ச் சாட்சியம் கூறுவீர்கள்?' என்ற கேள்விக்கு, இல்லை என்று நிராகரித்தார்.


'கருணா குழுவின் பூவண்ணன் என்ற ஒருவரே ரவிராஜைக் கொன்றார். அவர் கருணா குழுவைச் சேர்ந்தவர்' என்ற சட்டத்தரணி யின் கேள்விக்கு, அப்படி ஒருவ ரின் பெயரை இன்றே கேள்விப் படுவதாக அவர் தெரிவித்தார்.

ரவிராஜ் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவரின் கையில் காயம் ஏற்பட்டது தெரியாது. ஆனாலும் கேள்விப்பட்டுள்ளேன் என்று சாட்சி குறிப்பிட்டார். 'காயத்தில் வெளியான ரத்தம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் விளைவாக வும் ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸாரின் விசாரணைகளிலும் பிரதிவாதிகளுக்கும் (கடற்படைப் புலனாய்வு அதிகாரிகள்) அதற்கும் தொடர்பில்லை என்பது உறுதியாகியுள்ளது. பூவண்ணனே அதனைச் செய்துள்ளார்' என்று சட்டத்தரணி கேட்டதற்கு, அரச சாட்சி மறுத்தார். கருணா குழுவினருடன் இணைந்து தொழில்நுட்பக் கல்லூரிச் சந்தியில் வைத்து ரவிராஜைக் கொலை செய்ய முயற்சித்துள்ளீர்கள். இது 9 ஆம் திகதி நடைபெற்றது. இந்த முயற்சி கைகூடவில்லை. பின்னர் 10 ஆம் திகதி நாரஹேன்பிட்டியில் வைத்து அவரைத் திட்டமிட்டுக் கொலை செய்துள்ளீர்கள் என்ற கேள்வியை, சாட்சி திட்ட வட்டமாக மறுத்தார்.

பொய்ச் சாட்சியம் கூறுவதாலேயே எனது குறுக்கு கேள்விக ளுக்குப் பதில் வழங்க முடியாமல் தடுமாற்றம் அடைகின்றீர்கள் என்று பிரதிவாதி சட்டத்தரணி முன்வைத்த வாதத்தையும் அரச சாட்சி மறுத்தார்.

இதனையடுத்து தமது குறுக்குக் கேள்விகள் நிறைவடைவதாக மூத்த சட்டத்தரணி அனோஜ பிரேமரத்ன அறிவித்தார். (கு-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜனாதிபதியின் கீழான பாதீடு

மூலங்கள் - 2014 ஆம் ஆண்டில் உள்ளபடியான செலவின மதிப்பீடுகள், 2016 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட பாதீடு தொடர்பிலான மதிப்பீடுகள் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்குரித்தானதாக ஒப்புதல் வரைவாகவுள்ள பாதீடு தொடர்பிலான மதிப்பீடுகள்.

**மொத்தமான பாதீடு செலுத்த வேண்டிய படுகடன் தொகையை தவிர்த்து கணிப்பிடப்பட்டுள்ளது.**

## மொத்த செலவினங்களோடான வீதாசார ஒப்பிடுகை

**2014 ஆம் ஆண்டு**
மொத்த செலவினம் - 2025 பில்லியன் ரூபா
மகிந்த ராஜபக்சாவுக்கு உரித்தாக்கப்பட்ட செலவினங்கள் - 981 பில்லியன் ரூபா
மொத்த செலவின வீதாசாரம் - 48 வீதம்




**2016 ஆம் ஆண்டு**
மொத்த செலவினம் - 3050 பில்லியன் ரூபா
மைத்திரிபால சிறிசேனவுக்கு உரித்தான செலவினங்கள் - 389 பில்லியன் ரூபா
மொத்த செலவின வீதாசாரம் - 13 வீதம்




**2017 ஆம் ஆண்டு**
மொத்த செலவினம் - 2534 பில்லியன் ரூபா
மைத்திரிபால சிறிசேனவுக்கு உரித்தாகவுள்ள செலவினங்கள் - 350 பில்லியன் ரூபா
மொத்த செலவின வீதாசாரம் - 14%




## இலங்கைக்கான கடனுதவித் திட்டம் சுயாதீன மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டது ஆசிய அபிவிருத்தி வங்கி

இலங்கையின் வடக்கில் தமிழர்கள் போரினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மேற் கொள்ளப்பட்டு வந்த ஆரம்ப அபிவிருத்தி சார்ந்த வேலைப்பாடு கள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி தனது அறிக்கையை வெளி யிட்டுள்ளது. இதன்படி 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கான 10 வருட கால வரையறைக்கான 5.5 பில்லியன் கடன் திட்டம் தொடர்பான சுயாதீன மதிப்பீட்டு அறிக்கையை தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டு வைத்துள்ளதாக தெரியவருகிறது.

அதேவேளை போரினால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் உள்ள சமூகங்கள் சார்ந்து இதுவரை மேற் கொண்ட அபிவிருத்திகள் வெற்றியளித்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

மேலும் இந்தத் திட்டத்தில் பிரதானமாக குடும்பத்தலைமைத்துவங்களை ஏற்றுள்ள பெண்கள் தொடர்பிலான நலன்திட்டங்கள் அதிகமாக உள்ளடங்கியுள்ளதாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது

## கைத்தொழில் சார் உற்பத்திகள் மூலம் பொருளாதாரம் வளம்படும்; மலேசியாவுக்கான உயர் ஆணையர் தெரிவிப்பு

இலங்கை தனது கைத்தொழில் சார் உற்பத்தி நடவடிக்கைகளை இடை நிறுத்தாது எதிர்காலத்திலும் முன்னெடுத்துவருமாக இருந்தால் பொருளாதார வளர்ச்சி நிலையில் உயர்ந்த இடத்தை இலகுவாக தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பதான தகவல் மலேசியாவுக்கான உயர் ஆணையர் வென் சஜ்டி வென் அப்துல்லாவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் அண்மையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு இலங்கை மற்றும் மலேசியாவுக்கு இடையேயான இருதரப்பு வர்த்தகம் என்ற தலைப்பின் கீழாக உரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு கருத்துரைக்கப்பட்டுள்ளது.

"மலேசியா 1970 ஆம் ஆண்டு முதல் விவ சாயம், பொருளாதாரம் மற்றும் உற்பத்தி பொருளாதாரம் என்பனவற்றில் அதிக கவனத்தைச் செலுத்தி வந்ததன் காரணமாக அபிவிருத்தி தொடர்பிலான சுட்டெண்ணில் அதிகரிப்பைப் பெற்றுள்ளது.

அதேவேளை கடந்த 6 வருட காலப்பகுதியினுள் மலேசியாவின் பொருளாதாரம் 50 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அந்தவகையிலே மாலேசியாவைப் போன்று இலங்கையும் தனது உற்பத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுமாக இருந்தால் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த முடியும்"- என்றார்.



## வைபை சேவையை

### பேஸ்புக் தனது பயனாளர்களுக்கு வழங்க திட்டம்

உலகின் மிகப்பிரபல சமூக வலைத்தள நிறுவகமாக விளங்கும் பேஸ்புக் தனது பயனாளர்களுக்கு என வைபை சேவையை வழங்க திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதன்படி 'எக்ஸ்பிரஸ் வைபை' எனும் புதிய திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதனை பேஸ்புக் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. மிகப்பிரதானமாக இணைய சேவை இல்லாத பல கிராமங்களை நோக்கி இணைய வசதியை நகர்த்துதல் என்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகக் காணப்படுகிறது.




அதேவேளை இணைய இணைப்பை அதிகரிப்பது தொடர்பிலான இந்தச் சேவையை வழங்குவதற்கான ஏற்பாடுகளின் முன்னோட்டமாக பேஸ்புக் பறக்கும் விமானங்களில் லேசர் ட்ரான்ஸ் என்பதான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி சோதனை முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

அத்துடன் இத்திட்டத்திற்காகவென இந்தியாவில் உள்ள இணைய சேவை வழங்குநர்கள் மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் பேஸ்புக் பேச்சு நடத்தி வருவதான தகவலும் வெளியாகியுள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE
பங்குச் சந்தை தகவல்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1/12/2016 | | | ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 150 | 4,693,416 | 699,444,252 |
| www.cse.lk | | | கொமர்சியல் வங்கி | COMB.N | 144.00 | 1,101,665 | 155,835,618 |
| ASPI | [illegible] | [illegible] | ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 218.5 | 505,720 | 110,506,144 |
| S&P SL20 | [illegible] | [illegible] | செ.'.ப்ட்லொஜிக் பைனான்ஸ் | CRL.N | 35.10 | 1,333,537 | 46,175,320 |
| வியாபாரப்புரள்வு | 1,181,561,470 | 579,616,580 | டோக்கியோ சிமெண்ட் | TKYO.X | 54 | 418,525 | 22,197,746 |
| உள்நாடு:- கொள்வனவு | 330,023,872 | 293,117,696 | கொமர்சியல் கிரெடிட் அண்ட் பைனான்ஸ் | COCR.N | 62.9 | 238,718 | 15,065,751 |
| விற்பனை | 375,469,664 | 341,253,408 | நேஷனல் ட்ரஸ்ட் வங்கி | NTB.N | 80.9 | 155,072 | 12,391,573 |
| வெளிநாடு:- கொள்வனவு | 851,537,600 | 286,498,880 | அம்மாண தக்காபுள் | AEL.N | 25.3 | 422,821 | 10,552,048 |
| விற்பனை | 806,091,840 | 238,363,184 | டோக்கியோ சிமெண்ட் | TKYO.N | 62 | 125,693 | 7,749,170 |
| | | | ரீயே லங்கா | TJL.N | 44.5 | 149,230 | 6,579,699 |




பங்குச்சந்தை முதலீட்டு வாய்ப்புக்கள்
02.12.2016 ... 147-2/3இ கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள (சத்திரச்சந்தி) கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்கிளையில்.

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| ...விகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 189 |
| விலை உழைப்பு | 12.8 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 3.1 |

147-2/3, K.K.S Road Jaffna - 2122 1455

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியூசிலாந்தில் அண்மையில் ரிச்டர் அளவில் 7.8 என ஏற்பட்ட நில அதிர்வு இயற்கையான பெருஞ்சுவரை தோற்றுவித்துள்ளது. நிலத்துக்குக் கீழ் இரு தகடுகள் விலகியதால் ஏற்பட்ட இந்த 15 அடி உயரமான சுவர், 600 மைல்கள் தூரத்துக்கு நீண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# பாடசாலையில்

அங்காரா, டிசெ. 2
துருக்கியின் அடானா மாகா ணத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் விடுதியில் நேற்றுமுன் தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 11 மாணவிகள் உட்பட 12 பேர் உடல்கருகிச் சாவடைந்தனர்.

இரவு
போது
ழப்பு
பட்டது
மீட்க

# தண்ணீரில்
# போர்க்குற்ற



பக்தாத், டிசெ. 2
மோசூலில் நடைபெற்று வரும்போரில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புதண்ணீரை ஆயுத மாகப் பயன்படுத்துகிறது என்றும் – இது ஒருவகையில் போர்க் குற்றமென்றும் ஐக் கிய நாடுகள் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.
ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. ஈராக்

கின் இரண்டாவது
நகரான மோசூல் க
2014 ஆம் ஆண்டிலி
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்
பிடியில் முழுவதுமாகச்
யுள்ளது.
இதனால் குறித்த ந
மீட்கும் பணியில் ஈ
இராணுவம் களத்
உள்ளது. ஈராக்குக்கு
வாக அமெரிக்காவும் து
யும் உள்ளன. ஈராக் ஆ
பெற்ற குர்தீஸ் ஆயுதக்
வும் களத்தில் உள்ளது.



# 117 'நொட்அவுட்'

ரோம், டிச. 2
மூன்று நூற்றாண்டுகளைச் சந்தித்த உலகின் வயதான மூதாட்டி, கடந்த செவ்வாய்க்கிழமை தனது 117 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.
இத்தாலியைச் சேர்ந்த எமா மொறானோ என்ற குறித்த மூதாட்டி, 1899 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 29 ஆம் திகதி பிறந்தார். மூன்று நூற்றாண்டுகளைச் சந்தித்துள்ளார். இத்தாலியின் மூன்று மன்னர்கள், 8 பாப்பரசர்கள். இரண்டு உலகப் போர்கள் ஆகியவற்றை எமா சந்தித்துள்ளார். தனது ஆரோக்கியத்துக்குக் காரணம் தினமும் உட்கொள்ளும் முட்டைகளே என அவர் தெரிவித்தார். (ம-எ)

# வெடிமருந்து தொழிற்சாலையில் தீ 20 பேர் இறப்பு; பலருக்குக் காயம்

திருச்சியில் உள்ள வெடி மருந்துத் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தை அடுத்து 20 பேர் உடல் சிதறிச் சாவடைந்தனர். பலர் காயமடைந்து மருத்துவ மனையில்சேர்க்கப்பட்டனர். தொழிற்சாலையில் வெடி மருந்து சேமிக்கும் கிடங்கில் இந்த விபத்து ஏற்பட்டது.
அங்கு பணியாற்றிய 20 தொழிலாளர்கள் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்தனர். தீயணைப்புப் படையினரின் சில மணிநேரப் போராட்டத்தின் பின்னர் தீ வலுவிழந்தது. சம்பவத்தை அடுத்து குறித்த பகுதி புகைமூட்டமாக காட்சியளித்தது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தவும் உத்தரவிடப்பட்டது. (ம-எ)



# மருத்துவமனையில் கருணாநிதி

தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஒவ்வாமை காரணமாக கருணாநிதி பாதிக்கப்பட்டார். அவருக்கு அதிக ஓய்வு தேவை என்பதால் தொண்டர்கள் அவரைப் பார்க்க வரவேண்டாம் என்று அவரது கட்சியின் சார்பில் அறிவுறுத்தப்பட்டது. இந்த நிலையில் அவர் திடீரென மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-எ)

# ஜப்பானில் பறவைக் காய்ச்சல்: 3 லட்சம் கோழிகள் அழிப்பு

டோக்கியோ, டிசெ. 2
ஜப்பானில் பறவைக் காய்ச்சல் காரணமாக 3 லட்சத்துக்கு அதிகமான கோழிகள், வாத்துக்கள் கொல்லப்பட்டன.
நாட்டின் வட பகுதியில் அமைந்துள்ள செகிகாவா என்ற பண்ணையில் 40 கோழிகள் பறவைக் காய்ச்சலால் உயிரிழந்ததை அடுத்து, ஏனைய பண்ணைகளும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அங்குள்ள கோழிகளிலும் குறித்த நோய்த் தாக்கம் இனங்காணப்பட்டதை அடுத்து இந்தநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. கோழி இறைச்சி உற்பத்திகளும் அங்கு கட்டுப்படுத்தப் பட்டுள்ளன. அத்துடன் குறிப்பிட்ட சில இறைச்சி வகைகளைப் பயன்படுத்த வேண்டாம் என அரசு மக்களை அறிவுறுத்தியது.
முன்னதாக பறவைக் காய்ச்சல் இனங்காணப்பட்டதை அடுத்து, நெதர்லாந்தில் லட்சக்கணக்கான வாத்துக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றியது தீ; 12 பேர் சாவு

வுவேளை உறங்கிக் கொண்டிருந்த து தீ விபத்து ஏற்பட்டதாலேயே உயிரி அதிகம் ஏற்பட்டது எனத் தெரி விக்கப் து. 22 மாணவிகள் தீக் காயங்களுடன் கப்பட்டு மருத்துவமனையில் சேர்க் கப்பட்டனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. மரத்தால் ஆன கட்டம் என்ப தால் இலகுவாக தீ பரவியது என பொலிஸார் தெரிவித்தனர். (ம-எ)



# கைவைத்தது ஐ.எஸ்.
# மென்றது ஐ.நா. சபை



பெரிய கடந்த ிருந்து ப்பின் ச் சிக்கி

கரை ஈராக் த்தில் ஆதர ருக்கி ஆதரவு க்குழு து.

மோசூல் முழுவதுமாகச் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 25 கிராமங்கள் மீட்கப்பட்டுள்ளன. குவையாராப்பெருங்கிராமம், பழைமைகளை உள்ளடக்கிய நிம்ரூட் ஆகியன மீட்கப்பட்டமை அரச படைக்கு மேலும் சாதகம் எனச் சொல்லப்படும் நிலையில், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனது பின்னடைவைச் சமாளிக்க மிகவும் கொடூரமான வழிமுறைகளைக் கையிலெடுத்துள்ளது.

மேசூலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நீர்வழங்கும் 3 முக்கியமான தண்ணீர்க் குழாய்களில் ஒன்று போரில் சேதமடைந்தது. ஏனைய நீர்க்குழாய்களை ஐ.எஸ். ஐஎஸ். அமைப்பு திட்டமிட்டுச் சேதப்படுத்தியது.

மேலும் நீர்ப்பம்பி இயங்குவதற்கான மின்சார விநியோகத்தையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு துண்டித்தது. இதனால் 5 லட்சத்துக்கும் அதிகமான மக்களின் நீர் தேவைகள் முடங்கியுள்ளன.

ஐ.எஸ். அமைப்பின் இந்த நடவடிக்கையால் அங்குள்ள மக்கள் சொல்லொணாத் துன்பத்துக்கு முகம்கொடுத்துள்ளனர்.

மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்துவதும், அவர்களின் வாழ்வாதாரத்தை முடக்கும் இந்தச் செயற்பாடுகள் போர்க் குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. (ம-எ)



கியூபாவின் புரட்சித் தலைவரான பிடல் காஸ்ட்ரோவின் அஸ்தி, சான்ரியாகோவில் அடக்கம் செய்வதற்காக நேற்றுமுன்தினம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. இந்த ஊர்வலத்தின் இரு மருங்கிலும் மக்கள் கூடி நின்று தமது அஞ்சலியை செலுத்தினர். (ம-எ)

# எய்ட்ஸ் தடுப்பூசிச் சோதனை

பிரிட்டோறியா, டிசெ. 2

தென்னாபிரிக்காவில் எய்ட்ஸுக்கான புதிய தடுப்பு மருந்து சோதனையிடப் படவுள்ளது என அந்த நாட்டின் மருத்துவ நிபுணர் குழுவொன்று நேற்றுமுன்தினம் அறிவித்தது.

தென்னாபிரிக்காவில் 7 மில்லியன் மக்கள் எய்ட்ஸ் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர். இந்த நிலையில்,



அவர்களில் பாலியல் ரீதியில் உறவு கொள்ளக் கூடிய 5 ஆயிரத்து 400 ஆண், பெண்களைத் தெரிவு செய்து, புதிய தடுப்பு மருந்தை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முயற்சி தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்டு சாதகமான விளைவைப் பெற்றதை அடுத்தே, தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# சிறுவர் தொழிலாளிகள் இந்தோனேஷியாவில் ஏராளம்

ஜகார்த்தா, டிசெ. 2

இந்தோனேஷியாவில் உள்ள பிரபல பன்னாட்டு வர்த்தக நிறுவனங்கள், சிறுவர் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகிறது என பன்னாட்டு மன்னிப்புச் சபை குற்றஞ்சுமத்தியது.

தொழிலாளர்களாகப் பணிபுரியும் சிறுவர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கப்படுவதுடன், அதிகநேரம்வேலை, தண்டனைகள், கண்டிப்புக்கள் என சித்திரவதை செய்யப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின் மூலம் நிறுவனங்கள் அதிக இலாபங்களைப் பெறுகின்றன.

தாவர எண்ணெய்யான பாம் எண்ணெய் உற்பத்தியில் உலக அளவில் இந்தோனேஷியா முதலிடம் வகித்து வருகின்றது.

அவ்வாறான முன்னிலை உற்பத்தி நிறுவனங்களும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளமைக்கான வலுவான ஆதாரங்கள் பெறப்பட்டன என பன்னாட்டு மன்னிப்புச் சபையின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டது. (எ)



நினைவஞ்சலிகள்

8 ஆம் ஆண்டு | 25 ஆம் ஆண்டு




அமரர் சின்னையா இராசலிங்கம்
மலர்வு 23.02.1931 உதிர்வு 30.11.2008

திருமதி மணிமேகலை இராசலிங்கம்
மலர்வு 11.11.1940 உதிர்வு 04.10.1991

ஆழ்ந்த அறிவடக்கம், கருணை, அன்பு, ஆன்மீக அறம் புகட்டி தினமும் அரவணைத்து அமுதூட்டி அருகிருந்து பசிபொறுத்து பணிவிடைகள் நமக்கு வந்து கண்விழித்து நம் கனவுகள் சுமந்த நம் இல்லத்தின் இரட்டைக் கோபுரங்கள் அழியா நற்பேறு பெறுவீர் உம் ஆசியோடு ஆயுள் வரை உம்மை நினைத்திருப்போம்.

பிள்ளைகள், மருமகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீதிக் கிணற்றையும் தாண்டுமா புதிய அரசமைப்பு?

**புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நகர்வுகள் அரைக்கிணறு தாண்டியிருக்கும் நிலையிலும் சம்பந்தப்பட்ட இரு தரப்புகள் – தமிழ், சிங்கள தரப்புகள் – இடையே அது தொடர்பில் ஒரு தெளிவான இணக்கம் காணப்படவில்லை என்பது வெளிப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப் பினர் எம்.ஏ.சுமந் திரனின் உரை இதனைத் தெளிவுட உரைத் திருக்கின்றது.**

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட 6 உபகுழுக்களின் அறிக்கைகள் கடந்த 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் பட்டன. பிராந்தியங்களிற்கும் கொழும்புக்கும் இடையே பகிரப்படவேண் டிய அதிகாரங்கள் தொடர்பான முன்மொழிவுகள் அதில் இடம்பெற்றி ருந்தன. காத்திரமான பரிந்துரைகள் சில அவற்றில் காணப்பட்டபோதி லும் - காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட - அவை பற்றி தெற்கில் பெரிய அளவில் விமர்சனங்களோ கருத்து மோதல்களோ நிகழவில்லை. அந்தப் பரிந்துரைகளில் எல்லாவற்றையும் புதிய அரசமைப்புக்கான யோசனைகளில் உள்ளடக்கப்போவதில்லை என்று தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே தெரிவித்திருந்தார்.

அதனாலோ என்னவோ முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தரப்பினர் உபகுழுக்களின் அறிக்கை குறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால், எதிர்வரும் 10ஆம் திகதி முன்வைக்கப் பட்டவுள்ள வழிகாட்டல் குழுவின் அறிக்கை அப்படியிருக்கப் போவ தில்லை. உபகுழுக்களின் அறிக்கையைப் போன்றல்லாமல், அரசின் தன்மை குறித்த (ஒற்றையாட்சியா, கூட்டாட்சியா, மதச் சார்பின்மையா இல்லையா போன்ற முக்கிய விடயங்கள்) இந்த அறிக்கையிலேயே இடம்பெற்றிருக்கும். அதனால்தான் மகிந்த தரப்பினரும் கூட்டாட்சிக்கு எதிரானவர்களும் இப்போதே அது குறித்துக் கருத்துக்களைத் தெரி விக்கத் தொடங்கிவிட்டனர்.

அமைச்சர்கள் பலர் இலங்கை ஒற்றையாட்சியின் கீழேயே தொடர்ந் தும் இருக்கும் என்று மீண்டும் மீண்டும் தெரிவித்திருக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்கு எதிர்ப்பில்லை என்ற சாரப்படவும் அவர் கள் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒற்றையாட்சிக்குக் கூட்டமைப்பு ஒருபோதும் ஆதரவில்லை என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். பிளவுபடாத ஒரு நாடு, பிரிக்கப்படமுடியாத ஒரு நாடு என்ற விடயத்திற்கே கூட்ட மைப்பு இணங்கியுள்ளது என்பதையும் திட்டவட்டமாக அவர் கூறியி ருக்கிறார். ஆக, அரசின் தன்மை குறித்த விடயத்தில் - வழிகாட்டல் குழுவின் அறிக்கை கிட்டத்தட்ட தயாரித்து முடிக்கப்பட்டிருக்கும் நிலையிலும்கூட - சிங்களத் தரப்புக்கும் தமிழ்த் தரப்புக்கும் இடையில் இணக்கம் ஒன்று ஏற்படவில்லை என்பதையே சுமந்திரனின் சீற்றத்துடன் கூடிய நாடாளுமன்ற உரை சுட்டிக் காட்டுகின்றது. அரசமைப்பு உருவாக்கத் தில் தமிழர்கள் தரப்பிலிருந்து அதிகளவில் பங்களிப்பை வழங்குபவ ரான அவரது பகிரங்க உரைகள் அதிகம் கவனிக்கப்படவேண்டியவை. அரசைச் சற்றுக் கடுமையாகவே சாடி அண்மைக் காலங்களில் அவர் ஆற்றும் உரைகளின் உள்ளே, இரு தரப்புகளுக்கும் இடையில் அதிக மான இடைவெளியிருப்பதை உய்த்துணருவது ஒன்றும் சிரமமான காரியமல்ல.

கடந்த வாரம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பேசியபோதும் தமிழர் தரப்பின் கரிசனை அவருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. தமிழ் மக்களுக்கு அரச தலைவர் வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து அவர் பின்வாங்கக்கூடாது என்பதையும் அந்தச் சந்தர்ப்பத்தில் கூட்டமைப் பினர் நினைவுபடுத்தத் தவறவில்லை. இந்த விடயத்தில் மகிந்த தரப் பினரைச் சமாளித்துவிட்டால், அனைத்தையும் வெற்றிகரமாகக் கடந்து விடலாம் என்று அரச தலைவர் அப்போது நம்பிக்கை வெளியிட்டிருக் கிறார் என்றும், இது தொடர்பில் தலைமை அமைச்சர் ரணிலை மகிந்த வுடன் பேசுமாறு தான் கேட்டுக்கொண்டிருக்கிறார் என்றும் தெரியப்படுத் தினார் என்றும் அறியக் கிடைக்கிறது.

அவ்வாறு மகிந்தவை அரச தரப்பால் சமாளிக்க முடியாமல்போனால், ஒற்றையாட்சியா - கூட்டாட்சியா என்ற விடயமும், பௌத்தத்துக்கு முன் னுரிமை என்ற விடயமும் மட்டுமே புதிய அரசமைப்பு தொடர்பான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோடுவதற்குப் போதுமானவை. இத் தகையதொரு நிலையில் அதனைத் தமிழர் தரப்பும் எதிர்த்தால் முயற்சி முற்றுமுழுதாகப் பிசுபிசுத்துவிடும். எனவே இந்தத் தருணத் தில் புதி ய அரசமைப்பு முயற்சிகள் மீதிக் கிணற்றையும் தாண்டுமா என்கிற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை.



# மைத்திரிபால ஜனாதிபதியாகி என்னதான் செய்துவிட்டார்?

சிங்களமூலம் -
ஹசித குருப்பு (ம்வ்பிம)
தமிழில் - வி.எஸ்.ரீ

ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் முடிகின்ற நிலையிலும், ஜனாதிபதி மைத்திரிபால, பேச்சளவில் மட்டுமேயன்றி, செயலளவில் உருப்படியாக எதனைச் சாதித்துவிட்டார்? இன்று பல தரப்பினர் மத்தியில் இருந்து மேற்கண்டவாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரான இலங்கை நிலவரம் குறித்து அறிந்திருப்போர் இவ்விதம் விமர்சனம் மேற்கொள்ள முன்வரமாட்டார்கள். உண்மையில் ஜனாதிபதிப் பதவியை ஏற்றதன் பின்னர் மைத்திரிபால மேற்கொண்ட மிகப்பெரிய பணி, ராஜபக்ச தரப்பினர் குறித்த அச்சத்தில் மூழ்கிப் போயிருந்த இந்த நாட்டு மக்களை, அந்த அச்சத்திலிருந்து விடுவித்தமையேயாகும். நாட்டு மக்கள் சுதந்திரமாகச் சிந்திக்க, எழுத, பேச முடிந்ததொரு நிலையை ஏற்படுத்தி வைத்ததாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மகிந்த ராஜபக்சவை மட்டுமல்ல, ராஜபக்ச என்ற பெயரைக் கொண்ட எவரொருவர் குறித்தும் விமர்சிக்கும் துணிவு இந்த நாட்டின் ஊடகமெதற்கும் இருந்ததில்லை.

'நான் உருவாக்கி வைத்த அந்த ஊடக சுதந்திரத்தை பயன்படுத்தி இன்று என்னையே விமர்சிக்க முடிந்துள்ளமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன் என மைத்திரிபால கூறத்தக்க நிலை இன்று நிலவுகிறது. நாட்டின் ஜனாதிபதி ஆனதன் மூலம் இதுவரை மைத்திரிபால என்ன செய்துள்ளார்? எனக் கேள்வி எழுப்புவோர், ராஜபக்ச அரசிலிருந்து வெளியேறி, 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் எதிர்த்தரப்புக்களது பொது வேட்பாளர் என்ற ரீதியில் அவர் ஊடகவியலாளர்களுக்கு தமது நிலைப்பாடு குறித்து, முதன்முதலில் வெளியிட்ட கருத்துக் குறித்துத் தெரிந்திருத்தல் அவசியம்.

## மைத்திரிபாலவின் பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருவது உண்மையே

47 ஆண்டுகளாக சுதந்திரக்கட்சி உறுப்பினராக இருக்கும் தாம், 13 ஆண்டுகளாக கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வகித்ததாகக் குறிப்பிட்ட மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியின் ஆரம்பகாலம் முதல் ஜனாதிபதித் தேர்தல் வரையான கட்சியின் வரலாற்றுப் பதிவுகளை தெளிவாக விளக்கியிருந்தார். அத்தோடு தம்மைப் பொது வேட்பாளராகத் தேர்ந்தெடுத்து ஜனாதிபதித் தேர்தலில் இறக்கியுள்ள தரப்பினர்களுக்கு, குறிப்பாக ஐ.தே.கட்சியின் தலைவர் ரணிலுக்கு மைத்திரிபால நன்றி தெரிவித்திருந்தார். தாம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஜனநாயக சுதந்திரத்துக்கு ஊறு விளைவிக்கும் நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை நீக்கிவிடப்போவதாகவும் அவர் உறுதி வழங்கியிருந்தார். அது மட்டுமன்றி, நாட்டில் லஞ்சம், ஊழல் நடவடிக்கைகளை ஒழித்துக் கட்டப்போவதாகவும், அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தை மீண்டும் நிறைவேற்றிச் செயற்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

தாம் ஆரம்பத்தில் வழங்கிய வாக்குறுதிகளுக்கமைய அரசமைப்புக்கான 19ஆவது திருத்தத்தை கொண்டுவந்து நிறைவேற்றி, 18ஆவது திருத்தத்தில் உள்ளடங்கியிருந்த பல சரத்துக்களை நீக்கி வைத்தார். தமது நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியின் பல அதிகாரங்களைக் குறைத்துக் கொண்டார். ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் ஜனாதிபதி செயற்பட்டுள்ளமை, இன்று ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்புக் கிட்டியுள்ளமை மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. முன்னர் மகிந்தவின் அரசில் பிரபல ஊடகவியலாளர்களான பிரகீத் எக்னெலிகொட, லசந்த விக்கிரமதுங்க ஆகியோருக்கு ஏற்பட்ட கதியிலிருந்து மகிந்தவின் ஆட்சியில் ஊடகத்துறை எத்தகைய அச்சுறுத்தல்களைச் சந்திக்க நேர்ந்ததென்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மைத்திரிபால பதவிக்கு வந்து எதனைச் சாதித்தார் என வினாவுவோர், மக்களது அன்றாட பாவனைப் பொருள்களின் விலைகளைக் குறைக்கப்போவதாக எதுவித வாக்குறுதியும் வழங்காதபோதிலும், தாம் பதவிக்கு வந்து சமர்ப்பித்த இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு பாவனைப் பொருள்கள் விலைக் குறைப்பு உட்பட வேறும் பல நிவாரணங்களை மைத்திரிபால வழங்கியிருந்ததைக் கவனத்தில் எடுத்தாக வேண்டும்.

## ஊழல் மோசடி புரிந்தோரை சட்டத்தின் முன் நிறுத்தத் தாமதம் ஏன்?

ஆனால் தாம் தமது ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய முக்கிய உறுதிமொழியான லஞ்சம், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டோரைக் கண்டுபிடித்து அவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுப்பேன் என்ற வாக்குறுதி குறித்து ஜனாதிபதி மைத்திரிபால இன்று அதிமுக்கிய கவனம் செலுத்திச் செயற்பட்டாக வேண்டியுள்ளது. உண்மையில் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் பல தரப்பட்ட ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில, எந்த விதத்திலும் கண்டுபிடிக்க இயலாத அளவுக்குச் சூட்சுமமான விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை தொடர்பாக நீதிமன்ற மற்றும் நிர்வாக ரீதியிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, குற்றவாளிகள் யாரென்பது குறித்து நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். அவர்களுக்கான தண்டனைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டாகவேண்டும் அப்படிச் செய்யப்படுமானால் மட்டுமே, எதிர்காலத்தில் அரசியல்வாதிகளும், அதிகாரம் படைத்தோரும், ஊழல் மோசடிகளில் ஈடுபடாமல் தவிர்த்துக் கொள்ள முயல்வர். அத்தகையதொரு நிலையிலேயே மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கிய மக்கள் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவர். அத்தகையதொரு சூழலிலேயே மைத்திரிபாலவுக்கு நாட்டு மக்கள் மத்தியிலான மதிப்பும் மரியாதையும் தீர்மானிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்து செயற்படுவார்களா தமிழ் முஸ்லிம் இனத்தவர்கள்?

சேரலாதன்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் நாட்டில் பரவலாக இடம்பெற்று வருகின்றன. இனவாதிகள் இந்த விடயத்தை ஓர் அரசியல் பிரச்சினையாகவே மாற்றிவிட்டனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, வடக்கும் கிழக்கும் இணைந்து தமிழர்களுக்கான தனிநாடு ஒன்று உருவாகி விடுமென் முல்லைத்தீவில் வைத்து அபாயச் சங்கு ஊதியிருக்கிறார். எந்த வகையிலாவது இனவாதத்தைக் கக்குவதன் மூலமாக ஆட்சி பீடத்தில் அமர்வதுதான் இவரது பிரதான இலக்காக உள்ளது.

ஆனால் வடக்கும் கிழக்கும் இணைந்து கொள்வதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களும், வடக்கில் தமிழர்களும் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். வடக்கும் கிழக்கும் இணைந்துவிட்டால், தமிழர்களே ஒட்டு மொத்தப் பெரும்பான்மையினராக மாறி விடுவார்கள் என்ற அச்சமும் சில முஸ்லிம் அரசியல்வாதிகளால் விதைக்கப்பட்டுவிட்டது. இதனால் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் இணைப்பை விரும்பவில்லை. மேலும் வடக்கும் கிழக்கும் இணைக்கப்படுவதால் முதலமைச்சர் பதவி தமக்குக் கிடைக்காதென்று முஸ்லிம் அரசியல்வாதிகள் நினைக்கின்றனர்.

முதலமைச்சர் பதவி என்பதற்கு அப்பால், முஸ்லிம் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் இடம்பெற்று வருவதை இந்த அரசியல்வாதிகள் ஏனோ மறந்து விட்டார்கள். இறுதியாக இடம்பெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில், ஆட்சியமைக்கக்கூடிய வாய்ப்பை சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இழந்தது. இந்த நிலையில் ஆட்சியை அமைப்பதற்கு முஸ்லிம் காங்கிரசின் உதவியை நாடியது. முதலமைச்சர் பதவியும், முக்கிய அமைச்சுக்களும் அந்தக் கட்சிக்கு வழங்கப்படுமெனவும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனால் உறுதிமொழி வழங்கப்பட்டது. ஆனால் இவற்றைச் செவிமடுக்காத முஸ்லிம் காங்கிரஸ் தலைமை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவைத் தெரிவித்து மாகாண அரசிலும் பங்கெடுத்துக் கொண்டது. ஆனால், ஆரம்பத்தில் முதலமைச்சர் பதவி அந்தக் கட்சிக்குக் கிடைக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே அந்தப் பதவியில் அமர்ந்து கொண்டார். இந்தச் சம்பவம் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையே காணப்படுகின்ற புரிந்துணர்வின்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

### சிங்கள மயமாக்கப்பட்டு வரும் கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் அரசினால் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் அங்கு இடம்பெற்று வருகின்றன. அம்பாறை மற்றும் மட்டக்களப்பின் எல்லையோரங்களிலுள்ள நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கே பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. கண்டகண்ட இடங்களிலும் புத்தர் சிலைகளை நிறுவுகின்ற செயல்களும் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதைத் தடுப்பதற்கான நிலையில் தமிழ் முஸ்லிம் மக்களும் இல்லை. அரசும் இல்லை என்பதுதான் உண்மை நிலையாகும். அந்த அளவுக்கு பௌத்த துறவிகள் மற்றும் இனவாதிகளின் கரங்கள் ஓங்கிய நிலையில் காணப்படுகின்றன.



> தமிழர்களும் முஸ்லிம்களும் தமக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலமே தமக்கு ஏற்படப்போகின்ற ஆபத்துக்களிலிருந்து தப்பிக்க முடியும். ஒருசில அரசியல்வாதிகள் தமது அரசியல் நன்மைகளுக்காக மக்களை உசுப்பிவிடுகின்ற காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் 1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போது 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் உருவானதுதான் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு. இந்த இணைப்பினால் கிழக்கில் வாழ்கின்ற மக்கள் தாம் ஓரளவாவது பாதுகாப்பாக இருப்பதாக உணர்ந்தனர். வடக்குக்கிழக்கு இணைந்திருந்தமையே இதற்கான காரணமாகும். ஆனால் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழ்வதைச் சில சுயநலம் கொண்ட முஸ்லிம் அரசியல் தலைவர்கள் விரும்பவில்லை. அவர்கள் வடக்கிலிருந்து பிரிந்து வாழ்வதையே விரும்பினார்கள்.

ஆனால் தமிழர்கள் வடக்கும் கிழக்கும் இணைவதையே விரும்புகின்றனர்.

### நீதிமன்றத் தீர்ப்பினால் பிரிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களது இணைப்பு

இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 இல் கைச்சாத்திடப்பட்டது. இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும், இலங்கைஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் அதில் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாணசபை உருவாக்கப்பட்டது. மாகாணசபையின் தலைமை அலுவலகம் திருகோணமலையில் இயங்கியது.

ஆனால் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்பட நேர்ந்தது. வடக்கு கிழக்குக்குமென இரண்டு மாகாண சபைகளும் உருவாகின. எந்தவிதமான சட்ட வரைபையும் கொண்டிராத இந்த இரண்டு மாகாணங்களின் இணைப்பு இறுதியில் கேலிக்கூத்தானது. இதில் இந்தியா அக்கறை கொள்ளவில்லை என்பது தான் ஏமாற்றத்தைத் தருகின்றது.

தற்போது நாட்டின் எந்தவொரு பிரதேசத்துக்கும் எவரும் தனித்து உரிமை கொண்டாட முடியாது. எந்த இடத்திலும் வாழ்வதற்கு அனைத்து மக்களுக்கும் உரிமை உள்ளது என்றெல்லாம் கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையினர் என்ற அந்தஸ்துடன் வாழ்ந்த தமிழர்கள், இன்று அதை இழந்து விட்டனர். இன்னும் சில காலங்களில் கிழக்கில் தமிழர்கள் எண்ணிக்கையில் மிகவும் பின்தள்ளப்பட்டு விடுவார்கள். காலப்போக்கில் தமிழர்கள் வாழ்ந்த அடையாளங்கள்கூட இல்லாமல் செய்யப்பட்டுவிடலாம். ஏற்கனவே, இலங்கையின் பல பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. கிழக்கில் இடம்பெறுகின்ற திட்டமிட்ட குடியேற்றங்களாலும், தமிழர்களின் இருப்பு அங்கு கேள்விக்குறியாக மாறி நிற்கின்றது.

தமிழர்களும் முஸ்லிம்களும் தமக்குள் உள்ள வோறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலமே தமக்கு ஏற்படப்போகின்ற ஆபத்துக்களிலிருந்து தப்பிக்கமுடியும். ஒருசில அரசியல்வாதிகள் தமது அரசியல் நன்மைகளுக்காக மக்களை உசுப்பிவிடுகின்ற காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இனவாதிகளை எதிர்த்து வெற்றிபெறுவதற்கு மொழியால் ஒன்றுபட்ட இரண்டு இனத்தவர்களும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். இதுவேபிரகாசமானதொரு எதிர்காலத்தை தமிழ் முஸ்லிம் மக்களுக்கு வழங்கக்கூடியது.



## வாசகர் திருமுகம்

### குறைவான வெளிச்சத்தில் பத்திரிகை வாசிக்க வேண்டிய அவலம்

தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரிப் பிரதேச சபை என்பவற்றின் கீழ் இயங்கும் நூலகங்களில் வாசகர்களாகிய நாங்கள் பத்திரிகைகள் வாசிப்பதற்கு மிகவும் கஷ்டப்படுகிறோம். அந்த நூலகங்களில் மின்விளக்கு வசதி இருந்தும் நூலக நேரங்களில் மின்குமிழ்கள் ஔிரவிடப்படுவதில்லை. ஏன் இப்படி செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அதனால் போதுமான வெளிச்சம் அற்ற நிலையில் தான் நாம் பத்திரிகைகள் சஞ்சிகைகளை வாசிக்கிறோம். அதுமட்டுமல்ல, இந்த நூலகங்களில் பத்திரிகைகளை வாசிக்கும் இடங்களில் சிலர் உரத்துச் சத்தமாக உரையாடுவதும், அடிக்கடி கைத்தொலைபசி மணி ஒலிப்பதுமாக இருப்பதால் பத்திரிகைகளை வாசிப்பதற்கு சிரமமாக உள்ளது. அத்துடன் மழைக்காலம் என்றால் எதுவுமே வாசிக்க இயலாத அளவுக்கு இருள் சூழ்ந்து காணப்படுகிறது. இதனால் மிகுந்த சிரமப்பட்டே பத்திரிகைகள் சஞ்சிகைகளை வாசிக்க வேண்டியுள்ளது. இதனை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ளாதது வருத்தத்துக்குரியது. எனவே தயவு செய்து இனிமேலாவது வெளிச்சம் போதுமாக இல்லாத வேளைகளில் மின் விளக்குகளை ஔிர விடவும், நூலகங்களுக்குள் கைத்தொலைபேசிப் பாவனையை முற்றாகத் தடைசெய்யவும், உரத்துக் கதைப்பதன் மூலம் வாசிப்புக்கு இடையூறு ஏற்படுத்துவதையும் தவிர்ப்பதற்கு சகலரும் முயற்சிக்க வேண்டும். நூலகம் ஒரு வாசிக்கும் இடம். நூலகத்தில் ஊசி விழுந்தால் கூட சத்தம் கேட்காத அளவுக்கு அமைதியாக இருக்கவேண்டும். ஆனால் இங்கு எல்லாமே ஏறுக்குமாறாக நடக்கிறது. இனிமேலாவது வாசகர்கள் நிம்மதியாகப் பத்திரிகைகளை வாசிக்க சபையின் அதிகாரிகளும், நூலகங்கர்களும் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

*ஓர் அபிமான வாசகன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் புதிர்கள்

1. எவ்வளவு முன்னேறுகிறீர்களோ அவ்வளவுக்கு விட்டுச் செல்வீர்கள் அது என்ன?
2. தலையில் இருந்து கால் வரை உபயோகிக்கப்படுவேன். அதனால் நான் மெலிகிறேன். நான் யார்?
3. இருபத்தைந்தை எத்தனை முறை ஐந்தால் கழிக்க முடியும்?
4. என்னால் உங்களுக்கு வியர்க்கும். நீங்கள் பலவீனமாவீர்கள். நான் உங்கள் இதயத்துடிப்பை அதிகரிப்பேன். நான் யார்?
5. கைகள் உண்டு; ஆனால் எதையும் பிடிக்க முடியாது. பற்கள் உண்டு; ஆனால் கடிக்க முடியாது. கண்கள் உண்டு; ஆனால் பார்வை கிடையாது. அது என்ன?
6. இது உங்களை அழவைக்கும்; சிரிக்க வைக்கும்; இளமையை உணர வைக்கும்; நொடியில் தோன்றினாலும் வாழ்நாள் முழுவதும் தொடரும். அது என்ன?
7. இங்கு பாதைகள் உண்டு. ஆனால் வாகனங்கள் செல்ல முடியாது. இங்கு காடுகள் உண்டு ஆனால் மரங்கள் இருக்காது. அது என்ன?

### விடைகள்

1. கால் தடங்கள் 2. சவர்க்காரம்
3. ஒரு முறைதான் 4. பயம் 5. பொம்மை
6. நினைவுகள் 7. வரைபடம்

## பேராசை பெரும் நட்டம்

ஒரு கிராமத்தில் பொன்னன் என்ற விவசாயி வாழ்ந்து வந்தான். அவன் தனது விவசாயப் பொருள்களை அருகில் உள்ள பட்டணத்துக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வான். அதில் பெறும் பணத்தில் தனது வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்புவான். ஒரு நாள் பட்டணத்தில் பொருள்களை வாங்கிக் கொண்டிருக்கும்போது ஓர் இடத்தில் மக்கள் கூட்டமாக நிற்பதை அவதானித் தான். அந்த இடத்தில் ஒரு கிளிச்சோதிடர் கிளியொன்றை விற்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார். அதை வாங்குவதற்கு மக்கள் போட்டிபோட்டுக்கொண்டிருந்தனர். அந்தக் கிளியை வாங்குவதற்கு மக்கள் ஏன் இவ்வாறு போட்டியிடுகிறார்கள் என்பதை அறியப் பொன்னனும் அவ்விடத்துக்குச் சென்றான். கிளி புதைபொருள் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்குமா? என்று கேட்டபோது புதைபொருள்



இங்கே இருக்கிறது என்று கிளி சொல்ல மக்களும் அதை வாங்குவதற்கு முண்டியடித்தார்கள். பொன்னனோ மற்றவர்கள் கூறிய விலையிலும் பார்க்க அதிகமான விலையில் அதை வாங்கிக் கொண்டு சென்றான். வீடு சென்றதும் ஓர் அறையில் கிளியை அடைத்தான். கிளி அங்குமிங்கும் நடந்தபின் புதையல் இங்கே இருக்கிறது என்றது. பொன்னனும் சந்தோசத்தில் கிளி சொன்ன இடத்தைத் தோண்டினான். எல்லா இடமும் தோண்டிப் பார்த்தும் புதையல் கிடைக்கவில்லை. பின்னர் வேறு ஓர் அறையில் கிளியை அடைத்தான். கிளியும் வேறொரு இடத்தைக் காட்டியது. பொன்னனும் கிளி கூறிய இடத்தைத் தோண்டினான். புதையல் கிடைக்கவில்லை. அதேபோல் வீட்டில் உள்ள அறைகள் எல்லாவற்றையும் தோண்டியும் புதையல் கிடைக்கவில்லை. இதில் என்ன நடந்தது என்றால் கிளிச்சோதிடர் கிளிக்குக் கற்றுக் கொடுத்த வார்த்தை 'இங்கே புதையல் இருக்கிறது' என்பது மட்டுமே. கிளிக்கு சோதிடமோ அல்லது வேறு வார்த்தைகளோ எவையும் தெரியாது. பொன்னனும் "பேராசை பெரு நட்டம் எனும் பழமொழியின் கருத்துக்கு ஏற்ப புதையல் மீது இருந்த ஆசையினால் தன்னுடைய வீட்டைச் சேதப்படுத்தினான்.

*அ.அஜந்தினி*
*தரம் - 05*
*கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை*
*மல்லாகம்*




## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



ஷ.தினோஜன்
தரம் - 01 B
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை



உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



## வரலாற்றில் இன்றைய தினம்

1409 - லிஸ்ப்ஷிக் பல்கலைக்கழகம் சக்ஸண ஜேர்மனியில் தொடங்கப்பட்டது.
1804 - பாரிஸ் நோற்றி டேம் தேவாலயத்தில் பிரான்ஸின் பேரரசாக நெப்போலியன் பொனபாட் தனக்குத் தானே முடிசூடிக் கொண்டார்.
1908 - புயி இரண்டாவது வயதில் சீனப் பேரரசரானார்.
1927 - போர்ட் மொடல் T, 19 ஆண்டுகள் தயாரிப்பின் பின் போர்ட் மொடல் A புதிய மோட்டார் வாகனமாக அறிமுகப் படுத்தப்பட்டது.
1939 - நியூயோர்க் நகரில் லா ஹோர்டியா விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது.
1947 - ஜெருசலேம் கலவரம்; ஐக்கிய நாடுகளின் பலஸ்தீனப் பிரிப்பு நடவடிக்கைத் திட்டத்துக்கு எதிராக ஜெருசலேமில் கலவரம் வெடித்தது.
1961 - தேசிய ரீதியில் ஒலிபரப்பப்பட்ட உரையில் கியூபாத் தலைவர் பிடல் காஸ்ரோ, கியூபா ஒரு கம்யூனிஸ்ட் நாடாகப் போகிறது உனவும் தான் ஒரு மாக்ஸிஸ்ட் லெனிஸ்ட் எனவும் பிரகடனம் செய்தார்.
1970 - அமெரிக்காவின் சூழல் பாதுகாப்பு முகவர் நிலையம் செயற்படத் தொடங்கியது.
1971 - அபுதாபி, அஜ்மான், புஜைரா, துபாய் மற்றுட் உம் அல் குவைன் இணைந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உருவாக்கப்பட்டது.
1976 - ரெஸ்வால்டோ போற்றிகோஸ் ரொறாடோவை அகற்றிவிட்டு பிடெல் காஸ்ரோ கியூபாவின் ஜனாதிபதியானார்.
1988 - ஒரு தலைப்பட்சமாக ஒப்பந்தம் இரத்தானதால், பாரதூரமான விளைவென பிரேமா, சிறிமா இருவருக்கும் டிக்ஸிற் எடுத்துரைப்பு.
- ஜனாதிபதித் தேர்தல் பணிக்கு வருமாறு வடபகுதி அரச அதிகாரிகளுக்குப் பணிப்பு.
1993 - பரீட்சை நாள்களில் குண்டு வீச்சை நிறுத்துமாறு நாடாளுமன்றில் கோரிக்கை.
- தென்னிலங்கையில் கைதான 500 தமிழர்கள் தொடர்பான தகவலில்லை.
2002 - முஸ்லிம் காங்கிரஸில் குழப்பம் தொடர்கிறது. தலைமைப் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் ஹக்கீம் இடைநிறுத்தம். பாயிஸ் விலக்கப்பட்டார்.


## எனது அம்மா

எனது அம்மாவின் பெயர் விசுவா.
எனது அம்மாவுக்குப் பிடித்த பூ தாமரை.
எனது அம்மாவுக்குப் பிடித்த நிறம் நீலம்.
எனது அம்மா அழகானவர்.
எனது அம்மா என் மேல் அன்பு உள்ளவர்.



*த.நர்மிதா*
*தரம் - 03*
*வு/கற்பகபுரம் அ.த.க.பாடசாலை*
*வவுனியா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பலன்கள்

**அத்தம் நட்சத்திரப் பலன்கள்**

சாஸ்தா அவதரித்த நட்சத்திரம் இது. இதன் அதிபதி சந்திரன் ஆவார். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தாயுள்ளம் கொண்டவர்கள். நல்ல உணவை விரும்பும் சுபாவம் உடையவர்கள். நல்ல குரு பக்தி உடையவர்கள். மற்றவர்கள் வணங்கும் விதமாக வாழ்வர். கனிவான பேச்சும் தெய்வத்திற்கும் மனசாட்சிக்கும் கட்டுப்பட்டவர்கள். எப்பொழுதும் சுதந்திரமாக இருக்க விரும்புவர். வார்த்தைகளை கடுமையாக பேசும் இவர்கள் மனைவிக்குக் கட்டுப்பட்டவர்கள். வயது ஆக ஆக நல்ல தொழிலும், வருமானமும் பெருகி வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவர். தோல் வியாதிகள் ஏற்படும். விடாமுயற்சி உடையவர்கள்.

**அத்தம் : 1ஆம் பாதம்**

எப்படிப்பட்ட காரியத்தையும் சீக்கிரமாகவும் வேகமாகவும் செயலாற்றும் திறன் உடையவர்கள். ஆயுள் தோஷம் உடையவர்கள். எப்பொழுதும் எதிரிகளைச் சந்தித்து கொண்டே இருக்கவும் அவர்களால் மன நிம்மதி குறைவும் ஏற்படும். எதிரிகளை ஒழிப்பதில் ஆர்வம் உடையவர்கள். கர்வம் உடையவர்கள்

**அத்தம் : 2ஆம் பாதம்**

சிறுவயதிலே தாயின் அன்பை இழப்பார்கள், அற்பபுத்தி உடையவர்கள். பிறருக்குக் கோபம் வராமல் பேசி தங்கள் காரியங்களைச் சாதிப்பதில் சாமர்த்தியசாலிகள். பாட்டு கேளிக்கைகள் இவற்றில் ஈடுபட்டு ரசிப்பார்கள். அதனால் மகிழ்ச்சியும் சந்தோஷமும் உடையவர்கள்.

**அத்தம் : 3ஆம் பாதம்**

நல்ல சுக போகங்களை அனுபவிக்கத் துடிப்பர். வியாபாரம் செயவதில் மனமும் எண்ணமும் துடிக்கும். தாயின் அன்பில் வளர்வர். வீணாக எதையும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள், தொழிலதிபர்களாக வர ஆசைப்படுவார்கள். தொழிற்சங்கத் தலைவராக வர விரும்புவர்.

**அத்தம் : 4ஆம் பாதம்**

எல்லோரிடத்திலும் உண்மையாகவும், அன்புடனும் நடந்து கொள்வர். மாமன் வீட்டாரிடம் மனக்கசப்புக் கொள்வர். எல்லாவித சுக போகங்களையும் நன்கு அனுபவிப்பர். குடும்பத்தில் எப்பொழுதும் சிக் கல்கள் இருந்து கொண்டே இருக்கும். மற்றவர்களை மதிக்காமல் தன் இஷ்டம் போல் வாழ்வர்.

**நாளை**

**கார்த்திகை-18**

சனிக்கிழமை -03.12.2016

திதி: சதுர்த்தி மு.இ.11.31

நட்சத்திரம்: பூராடம் கா.06.30

ராகுகாலம்:09.15-10.45 வரை

சுபநேரம்:03.15-04.45 வரை

சதுர்த்தி விரதம்

## ஒற்றை இரட்டை திருவிளையாடல் வேண்டாம்! தமிழர்களுக்கு நியாயம் தரும் திருவுளம் வேண்டும்!

அரசு என்பதற்கான வரைவிலக்கணப்படுத்தல்கள் இனத்துவம் என்பதனைத் தாண்டி மக்கள் நலன் மேம்பாட்டினை முன்னிலைப்படுத்துவதாக அமையப்பெற்றிருத்தலே சிறப்பானது. மக்கள் என்பதான வரையறைகளினுள் மொழி, இனம், கலை, கலாசாரம், விழுமியங்கள் என்பவற்றின் தொனிப்பை இடைவிலகலோடு நிலை நிறுத்திக் கொண்டு சேவை புரிதலின் நயப்பினை தம் சார்ந்து செய்யும் காரண காரியங்கள் அரச தனித்துவங்களை கீழ் நிலைப்படுத்துபவை. இலங்கை சுதந்திரம் பெற்றதாக சொல்லப்படுகின்ற காலம் தொட்டு மேற்போந்த தீர்க்க தரிசனமற்ற இலக்கணங்கள் தொடர்ச்சியாக ஆட்சியில் அமர்ந்து கொள்பவர்களினால் மாற்றமின்றி அலங்கரிக்கப்பட்டுவருகிறது. இவை தமிழர்களின் உரித்தான கோரிக்கை வேண்டுதல்களை முகம்சுழிப்பனவாகவும் அழிவு நிலைத்திருப்பினுள் அலங்கோலப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன. நிகழ்காலத்தின் வெளியிடையேயும் அசைந்திருக்கிறது.

குறிப்பாக தமிழ் சமூகத்தின் மீதான அடிமைத்தனங்களும், அடி வருடித்தனமான சூட்சுமங்களும் ஒழுங்குபடுத்தலின்றி காலத்தின் அசைவோடு மிகைப்பாடுகளை அதிகப்படுத்தியபடி இருக்கிறது. அவ்வப்போது கண்சிமிட்டுகின்ற மழலை முகங்களாக அரசு உருவகப்படுத்துகின்ற ஆணைக்குழுக்களும்,நிறுவகங்களும், அது சார்ந்த தீர்வுகளை மீள்தலற்று ஆழ்நிலைப்படுத்திய எழுத்துருவ நகல் வடிவங்களும் வருத்தமுறுகின்றன. எப்போதும் மாற்றமின்றி பெருமூச்செறிந்து உறங்குநிலை பெற்றுவிடுகின்றன. வார்த்தைகளின் பெருமிதங்கள் மட்டும் மேடைப் பேச்சுகளாகவும் வாக்குறுதிகளாகவும் உசலாடி திரிகின்றன.

இந்தநிலையிலே தற்போதைய நல்லாட்சி அரசும் செய்யப்பட்ட குற்றங்களுக்கான, தமிழர்களுக்கு தரவேண்டி தீர்வுக்கான வியாக்கியானங்களை நல்லிணக்கம் என்பதான சொற்பதங்களுள் முடக்கிவிட்டுள்ளது. பிரதானமாக அயலுறவுக் கொள்கைகளை தந்திரங்களால் இறுகப் பற்றிக்கொள்வதிலும் அவர்களோடு கூட்டிணைந்து கால அவகாசங்களை தங்கள் எல்லைகளுக்குள்ளாய் பூட்டி வைத்துக் கொள்வதிலும் முதன்மைச் செயலுருவங்களாக திகழ்கின்றன. இதற்குச் சமாந்தரமாக தமிழர்களுக்கான தீர்வு என்ற விழிப்பை அரசமைப்பு என்ற மந்திரக்கோல்களிடை பரிசளிப்புச்செய்திருக்கிறது.

இருந்த போதும் உள்நிலையிலே மாகாணங்களிடையேயான அதிகாரப் பரம்பல், ஆட்சி அதிகாரங்களின் உச்ச பகிர்ந்தளிப்பு என்ற விடயங்கள் பேச்சு நிலையில் இடர் நிலைப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினராகவும் சபை முதல்வராகவும் உள்ள லக்ஸ்மன் கிரியெல்ல வெளிப்படுத்திய கருத்துக்கள் உண்மை நிலையை தெளிவாக்கியுள்ளன. முக்கியமாக புதிய அரசமைப்பில் கூட்டாட்சிக்கு இடமில்லை ஒற்றை ஆட்சிக்கே முன்னுரிமை என்பதான கருத்துரைத்தல்களே அவை.

ஆக,வாக்குறுதிகளின் பெறுதி தொடர்பில் கலந்துரையாடி இருப்பதில் தமிழர் தரப்புக்கு தீர்வு தொடர்பிலான எந்த சாதக நிலையும் கிடைத்துவிடப்போவதில்லை என்பதனை அரசு உணர்ந்துகொண்டு நல்ல வழிமுறைகளைத் தர முயற்சிக்க வேண்டும்! ஒற்றை இரட்டை திருவிளையாடல் வேண்டாமே! தமிழர்களுக்கு நியாயம் தரும் திருவுளம் தனை பெற்றிட வேண்டும்.! கேட்பதை நியாயமாக கொடுத்திட முன்வர வேண்டும்! அதேவேளை உண்மை நிலைகளை சரிவரப் புரிந்து கொள்ள தமிழர் தலைமைத்துவங்கள் தலைப்பட வேண்டும்! கருத்து நிலைகளை நம்பியபடி இருந்துவிடக்கூடாது! கூட்டிணைவான புரிந்துணர்வோடு பயணித்திருக்க வேண்டும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனைத்துலக ஊனமுற்றோர் தினம் நாளை**



# வலுவற்றோருக்கும் வாழ்க்கை வசப்படும்

சு.சிவராசா

மனித சமுதாயம் பல பிரிவினைகளோடு இனங்கள், சாதிகள் என வேறுபட்டு இருப்பதைக் காணலாம். எவ்வகையான பிரிவுகளாக இருந்தாலும் அங்கெல்லாம் ஊனமுற்றோர் உள்ளனர். எனவே இவர்களைச் சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தி வைக்க இயலாது. ஊனமுற்றவரையும் சமூகத்தின் ஒரு கூறாகவே கொள்ள வேண்டும். இவர்களுக்கு வேண்டிய சிறப்புத் தேவைகளைக் கொடுத்து திறன் விருத்தி செய்து மாற்றுத்திறனாளராக மாற்ற முடியும். இத்தகைய நிலை எட்டப்படும்போது அவர்களும் சகமனிதர்களோடு சமமாக மதிக்கப்படவும் தன்னிறைவாக வாழவும் உரிமையுடையவர்களாவர்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை மிக அதிகமாகக் காணப்பட்டது. ஐ.நா.மட்டத்தில் இது பற்றி ஆராய்ந்து பல முடிவுகள் எட்டப்பட்டன. 1978 இல் இவர்களுக்கான சமவாயம் அங்கு அறிமுகமானது. அதில் ஊனமுற்றவர்களை இயலாமையுடன் கூடிய நபர்கள் என்று விளிக்கப்பட்டுள்ளது. இவர்களைப் புலன் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டவர், கற்றல் குறைபாடு உடையவர் பல்வகைக் குறைபாடு உடையவர் என ஐந்தாக வகைப்படுத்துவர்.

வலுவிழப்பு, இயலாமை, குறைபாடு என்பவை திறன் இழப்பின் வேறுபட்ட நிலைகள் ஆகும். இவை தற்காலிகமானவை. மீண்டு வந்த நிலை நிரந்தரமானது என அறியப்படும். குறைபாடு என்பது அன்றாட அலுவல்களுக்குப் பிறரின் உதவியை வேண்டுகின்ற நிலைமை ஆகும். இவர்கள் உதவு கருவிகள், அணுகு வசதிகள், பயிற்சிகள் மூலம் திறன் விருத்தி செய்து கொண்டு தமக்கு ஏற்படும் சவால்களைச் சமாளிக்க முடியும். தன்னாலான தடைகள், சமூகத்தடைகள், சூழல் தடைகள், குடும்பத்திலுள்ள தடைகள் ஆகியவற்றைத் தாண்டிப் பயணிக்க வேண்டிய தேவையும் இவர்களுக்கு உண்டு. ஊனம் என்பது உடலில் ஏற்பட்டுள்ள சிறுமாற்றம் என உணர்ந்து கொண்டால் அந்தக் குறையால் எம்மை எதுவும் செய்துவிட முடியாது. உடலளவில் பலவீனமாக இருந்தாலும் மனிதளவில் தைரியமாக இருப்பவர்கள் தான் மாற்றுத்திறனாளிகள். இவர்களுக்குள் பல்வேறு திறமைகள் மறைந்து கிடக்கின்றன. உடற்குறைபாட்டை வைத்து அவர்களுக்கு சமவாய்ப்பு அளிக்க இந்தச் சமூகம் மறுக்கின்றது. அவர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவர்களுக்கான உரிமைகளை வலியுறுத்தியும் 1992இல ஐக் கிய நாடுகள் சபையில் ஏற்றுக் கொண்ட படி மார்கழி 3ஆம் திகதி அனைத்துலக ஊனமுற்றோர் நாள் என அழைத்து உலக நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகின்றது. 1982 - 1992 வரை ஊனமுற்றோருக்கான பத்தாண்டு எனவும் கூறப்பட்டது.

உலகமக்கள் தொகையில் 15 வீதம் பேர் மாற்றுத்திறனாளிகள். இதில் 80 வீதமான பேர் ஏழை நாடுகளில் உள்ளனர். இவர்கள் வேலைவாய்ப்பு அற்றவர்களாகவும் உள்ளனர். வளரும் நாடுகளில் உள்ள மாற்றுத்திறனாளிக்குழந்தைகளில் 90 வீதம் பேர் பள்ளிக்குச் செல்வதில்லை என யுனெஸ்கோ அமைப்பு தெரிவிக்கின்றது.

மாற்றுத்திறனாளிகளின் பங்களிப்பை ஏற்காத ஒருநாட்டை வளர்ந்த நாடாக மாற்றிவிடலாம் என நினைப்பது கனவாகவே முடியும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை செய்கின்றனர். சமூகத்தின் இரங்கல் பார்வையைப் பெற்றுக் கொண்டு மாற்றுத் திறனாளிகள் ஒதுங்கி வாழவேண்டும் என நினைப்பது தவறு. நாட்டின் முன்னேற்றத்தில் அவர்களின் நியாயமான பங்கேற்பை ஏற்க வேண்டும். தனியார் வேலைவாய்ப்பால் அவர்களுக்குச் சலுகை அளிக்கப்படாவிட்டாலும் மாற்றுத்திறனாளிகள் என்பதற்காக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமையையும் பறிக்கக் கூடாது.

மாற்றுத்திறனாளரின் சமூக உரிமைகளை மேம்படுத்தத் தேசிய கொள்கை ஒன்று 2008 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

வலுவிழப்பு இயலாமை குறைபாடு என்பவை திறன் இழப்பின் வேறுபட்ட நிலைகள் ஆகும். இவை தற்காலிகமானவை. மீண்டு வந்த நிலை நிரந்தரமானது என அறியப்படும். குறைபாடு என்பது அன்றாட அலுவல்களுக்கு பிறரின் உதவியை வேண்டுகின்ற நிலைமை ஆகும். இவர்கள் உதவு கருவிகள், அணுகு வசதிகள், பயிற்சிகள் மூலம் திறன் விருத்தி செய்து கொண்டு தமக்கு ஏற்படும் சவால்களைச் சமாளிக்க முடியும்.

சிவில் சமூகம் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் மட்டுமே இது சாத்தியமாகும். அத்துடன் சேவை நிறுவனங்களும் அரசும் சேர்ந்து செயற்படுவதும் அவசியம் ஆகும். இலங்கைக் குடிமக்கள் என்றவகையில் வலுவற்றோரும் சட்டத்தின் பாதுகாப்பு வரப்பிரசா தங்கள் மனித உரிமைகள் முதலியவற்றுக்கும் கூட உரித்துடையவர்கள்.

இம்முறை தேர்தல் நடவடிக்கைகளில் மாற்றுத்திறனாளரும் சேர்த்துக் கொள்ளப்படுவது வரவேற்கத்தக்கது. வலு இல்லாதோர் இழிவானவர்கள் அல்லர். அவர்களை மதித்துநடக்க வேண்டும். இது இவர்களின் அரசியல் உரிமைகளை மேம்படுத்துவதாக இது இருக்கிறது என பெடரல் அமைப்பின் தலைவர் கருத்துத் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகள் பெற்றுக் கொள்ளும் சிறப்புத் சேவைகள் பின்வருமாறு அமைகின்றது:

- புதியவீடு ஒன்றை நிர்மாணித்தல் - 150,000 ரூபா
- மலசல கூடம் - 20,000 ரூபா
- சுயதொழில் உதவி - 25, 000 ரூபா
- காது கேட்கும் கருவி
- மருந்து, பிரயாணக் கொடுப்பனவு, - 20,000
- கண்வில்லைகள்
- மகிந்தசிந்தனை
- மாதாந்தம் - 3,000ரூபா
- மூக்குக் கண்ணாடி
- ஊன்று கோல்கள்
- முச்சக்கரவண்டி
- சக்கர நாற்காலி
- சத்திரசிகிச்சை நிதியுதவி - 20,000
- கைக்கிராதியுடன் வீதியைச் சென்றடைதல் - 15,000 ரூபா

எவ்வாறாயினும் வலுவற்றோர் இதுபற்றி அறிவு ஊட்டப்பட வேண்டியவராய் உள்ளனர். மேலும் இவர்கள் வாழ்வு மேம்படுவதற்கு கல்வி, தொழில் நுட்பம், கணினி அறிவு ஆகியவற்றை விருத்தி செய்ய வேண்டியவராய் உள்ளனர். பார்வையற்ற மாணவரின் கல்விக்கு உள்வாங்கிய கல்வி முறை பிறெயில் எழுத்து, ஓசை, வழி கணினி வசதி, டெய்சி எழுத்து முதலான பல கல்வி மேம்பாட்டு கருவிகள் இருப்பது சாதகமாகும்.

பலர் இதனால் பயனடைந்து வருகின்றனர். ஆனால் செவிப்புலன் பேச்சுத்திறன் குறையுடையோருக்கு சைகை மொழியில் இத்தகைய வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. காட்சிப்படுத்தல் மூலம் தொடர்பாடல்களுக்கு உதவு வசதிகள் இருந்தாலும் கல்வி மேம்பாட்டுக்கு உதவிகள் கிடைப்பதில்லை.

இவற்றைவிட ஓட்டிசம் கற்றல் குறைபாடு டவுண் சின்ரம் முதலிய கரிசனையோடு கவனிக்கப்பட வேண்டிய குறைபாடுகளாகும். ஓட்டிசம் என்பது 'தற்புனைவு ஆழ்வு' என்று குறிப்பிடுவர். அதாவது தனக்குள்ளேயே ஓர் உலகத்தை உருவாக்குவதில் ஆழ்ந்து விடுவதாகப் பொருள்படும். இவர்கள் புலன்களின் தூண்டல்களுக்கு தெறிவினைகளை உணர முடியாதவராய் இருப்பர்.

இரண்டு மூன்று வயதளவில் இதனை இனங்காணமுடியும். ஆண்பிள்ளைகளே அதிகம் ஓட்டிசத்தால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களையும் மற்றைய மனவளர்ச்சிக் குறைபாடுஉள்ளவரையும்விசேடகல்வியூட்டல் மூலம் குறைந்தபட்சம் தங்கள் அன்றாட அலுவல்களையாவது செய்யக் கூடியவராய் ஆக்கமுடியும். இதைவிட இயங்கு உறுப்புக்கள் பாதிக்கப்பட்டோரை கல்வி அறிவு ஊட்டுவதும் திறன்விருத்தி செய்வதும் ஒப்பீட்டளவில் செய்யக்கூடியதாக இருக்கிறது. இவர்களுக்கு உதவு கருவிகளும் அணுகு வசதிகளும் மிகவும் உபயோகமாக இருப்பதைக் காணலாம். மனவளர்ச்சிக் குறைபாடு ஒருநோயல்ல. அறிவு வளர்ச்சி நின்றுவிடும் ஒரு நிலையாகும். இதைத் திறன் விருத்தியால் மேம்படுத்தலாமே தவிர குணப்படுத்த முடியாது. ஆனால், மனநோயை மருத்துவர்களால் சரி செய்துவிட முடிகிறது. நடந்து முடிந்த போரினால் பெரிய விபத்துக்களால் சாகச விளையாட்டுக்களில் உயரத்திலிருந்து விழுதலால் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள் இன்று அதிகரித்து விட்டார்கள். இவர்களில் சிலர் படுக்கையில் வைத்து பராமரிக்கப்பட வேண்டியவர்கள். இன்னும் சிலர் சிறப்பு இயன் மருத்துவ முயற்சி மூலம் தேறி சக்கர நாற்காலியை உபயோகிக்கும் அளவுக்கு தேறியுள்ளனர். இவர்களுக்கு திறன்விருத்தியும் மருத்துவ உதவியும் கொடுக்க வேண்டியது சிவில் சமூகத்தினதும் அரசினதும் பொறுப்பாகும்.

மாற்றுத்திறனாளிகள் தாம் எதிர் கொண்ட சவால்களை வெற்றி கொள்வதன் மூலம், தம்மை வளப்படுத்திக் கொண்டு நாட்டின் அபிவிருத்தியிலும் பங்காளராக இருப்பதற்கு அவர்களை ஊக்குவிப்பதும் உதவுவதும் ஒரு சமூகக் கடமையாகும். அவர்கள் எப்போதும் உதவி கோருபவராக இருந்துவிட வேண்டும் என்பது தவறு. தமது திறன் விருத்தியால் உதவி வழங்குநர்களாக மாறும்போது தான் ஒரு நாடு அபிவிருத்தி அடைந்த நாடாக மாறும். இந்த நாளில் அவர்களின் வாழ்க்கை மேம்பட ஒன்று படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** உறவினர் செயலால் பிரச்சினைக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் குளறுபடியை தாமதமின்றி சரி செய்யவும். அளவான பணவரவு கிடைக்கும். தெய்வ வழிபாடு அமைதிக்கு வழிவகுக்கும்.



**இடபம்:** நண்பருக்காக மற்றவர்களிடம் பரிந்து பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பொறுப்பு உண்டாகும். பணவரவுக்கு குறைவிருக்காது. பெண்கள் ஆடம்பரச் செலவில் ஈடுபடுவர்.



**மிதுனம்:** அன்றாடப் பணிகளை சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். உறவினர்களுடன் சுற்றுலா சென்று வரத் திட்டமிடுவீர்கள்.



**கடகம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். சேமிப்பு உயரும். மாமன், மைத்துனருக்கு உதவி புரிவீர்கள். மாணவர்கள் பாராட்டு பெறுவர்.



**சிங்கம்:** விட்டுக் கொடுத்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாரான அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். முக்கிய தேவை ஓரளவு நிறைவேறும்.





**கன்னி:** சிலர் உங்களுக்கு உதவுவது போல ஏமாற்றலாம். சுயமுயற்சியுடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாரான அளவில் இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர்.



**துலாம்:** மனம், செயலில் புத்துணர்வு உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் ஆன்மிக நாட்டமுடன் செயற்படுவர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.



**விருச்சிகம்:** சிலர் உங்களைப் புகழ்ந்து பேசி, ஆதாயம் காண முயல்வர். தொழில், வியாபாரம் உழைப்புக்கேற்ப வளர்ச்சி உண்டாகும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.



**தனுசு:** உறவினர்களின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிர்ஷ்டவசமாக வருமானம் உயரும். பெண்களின் தேவை குறைவின்றி நிறைவேறும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.



**மகரம்:** திடீர் பொறுப்பால் அவசரப் பணிக்கு ஆளாகலாம். நல்லவர்களின் ஆலோசனை தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபார இலக்கு கால அவகாசத்தில் நிறைவேறும். உடல்நலம் பலம்பெறும்.



**கும்பம்:** மற்றவர் பாராட்டும் விதத்தில் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.



**மீனம்:** விருப்பமுடன் அன்றாடப் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கு ஏற்ப முன்னேற்றம் உண்டாகும். உபரி வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர்.

## தியேட்டர்களில் தேசிய கீதம் கட்டாயம் உயர் நீதிமன்றம் அதிரடி

'சினிமா தியேட்டர்களில் கட்டாயம் தேசிய கீதம் இசைக்க வேண்டும்' என இந்திய உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. முன்பு தியேட்டர்களில் படம் முடிந்ததும் திரையில் தேசியக்கொடி பறக்க தேசிய கீதம் இசைக்கப்பட்டது. ஆனால் படம் முடிந்து எல்லோரும் சென்று விடுவதால் இந்த நடைமுறை வெற்றி பெறவில்லை. அதன் பிறகு படம் தொடங்குவதற்கு முன்பு தேசிய கீதம் இசைக்க வேண்டும் என்று திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது. இது ஒரு சில மாநிலங்களில் மட்டும் நடைமுறையில் உள்ளது. பல மாநிலங்களில் இல்லை.

இதை எதிர்த்தும், எல்லா மாநிலங்களும் திரையரங்குகளில் தேசிய கீதம் இசைப்பதற்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியும் டில்லியைச் சேர்ந்த ஒருவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், மத்திய மாநில அரசுகளை விளக்கம் அளிக்கும்படி உத்தரவிட்டது. அதன்படி இரு மாநில அரசுகளின் விளக்கமும் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வழக்கு மீண்டும் உயர்நீதிமன்றுக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, அனைத்து தியேட்டர்களிலும் தேசிய கீதம் கட்டாயம் இசைக்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இது குறித்து உயர்நீதிமன்றம் மேலும் கூறியிருப்பதாவது: நாடு முழுவதும் தியேட்டர்களில், படம் திரையிடுவதற்கு முன்பாகத் தேசிய கீதம் கட்டாயம் இசைக்கப்பட வேண்டும். திரையில் தேசியக் கொடி தோன்ற வேண்டும். பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்யவேண்டும். மத்திய அரசு உடனடியாக அனைத்து மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஒருவார காலத்துக்குள் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். இதை வைத்து வர்த்தக ரீதியாக எவரும் எந்தவிதமான பயன்களையும் உருவாக்கக் கூடாது. தேசிய கீதத்தின்போது தேவையில்லாத படங்கள் எதுவும் தோன்றக் கூடாது எனக் கூறியுள்ளது.



மன்னர் மன்னா எதிரி நாட்டு மன்னன் நம் ராணியை கடத்திச் சென்று விட்டான்



நல்லது நாம் ஓய்வு எடுப்போம். அவனது ராஜ்யமே அழியப்போகிறது.

தேவைப்பட்டால் ஆப்பிரேசன் செய்ய வேண்டி வரும்... எப்ப டாக்டர்...?



எனக்குக் காசு தேவைப்படும் போது...

**வங்கிப் பணியாளர்:**
ஏம்மா .. உன் முகத்தைக் கொஞ்சம் தள்ளி வைம்மா... ஏன் இவ்வளவு பக்கத்தில காட்டுறாய்?

**பெண் வாடிக்கையாளர்:**
காசு மாத்தினா மை வைப்பீங்களாமே, சார் அதான்...

**வங்கிப் பணியாளர்:**
அட ராமா... மை கண்ணில இல்லம்மா.
விரல்ல, கைய நீட்டு முதல்ல...

முடியல..!

விடியற் காலை 4 மணிக்கு ஒரு பெண்ணை ஒன்லைனில் பார்த்தேன்...! "இப்படி அதிகாலையிலை எழுற பொண்ணுங்கதான் குடும்பத்தைப் பொறுப்பா பார்த்துப்பாங்க.. உங்கள மாதிரி ஒரு பொண்ணதான் தேடிட்டு இருந்தேன்" னு சொன்னேன்...!



"அட நீங்க வேற... நான் இவ்வளவு நேரமும் 'சாட்' பண்ணிட்டு. இப்பதான் தூங்கவே போறேன்... குட் நைட்" ன்னு சொல்லிட்டு போகுது...!

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | | | 6 | 8 | |
| 8 | | | | 4 | | | | |
| | | 1 | 6 | | | 9 | | |
| 4 | 3 | | | 6 | | 7 | | |
| | 8 | | 9 | 3 | 1 | | | |
| | | 2 | 4 | 7 | | | | 3 |
| | | 3 | | | 4 | 2 | | |
| | | 4 | | 1 | | | | 7 |
| | 2 | 8 | | 9 | | | 5 | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 8 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 7 | 5 | 2 | 9 | 3 | 6 | 8 | 1 | 4 |
| 9 | 4 | 8 | 7 | 2 | 1 | 5 | 6 | 3 |
| 5 | 1 | 7 | 6 | 8 | 3 | 9 | 4 | 2 |
| 6 | 8 | 4 | 2 | 7 | 9 | 1 | 3 | 5 |
| 3 | 2 | 9 | 1 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 2 | 9 | 3 | 5 | 6 | 7 | 4 | 8 | 1 |
| 8 | 7 | 1 | 4 | 9 | 2 | 3 | 5 | 6 |
| 4 | 6 | 5 | 3 | 1 | 8 | 2 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரை யான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்)
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்கு [illegible] வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். [illegible] வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை அருண்
எளிதாகக் காயப்படுத்தி விடலாம், ஆனால் ஆறுதல் கூறி தேற்றுவது அவ்வளவு எளிதல்ல.







## இது புதுசு

சிறுவர்களுக்கான முப்பரிமாண (3D) புத்தகங்கள் அறிமுகமாகியுள்ளன. முன்பு வெளிநாடுகளில் மட்டும் கிடைக்கப்பெற்ற இவை தற்போது எமது நகரிலும் விற்பனை செய்யப்படுகின்றன. சிறுவர்களுக்கான ஆங்கிலக் கவிதைகள். கதைகளை விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இலகுவாக முப்பரிமாண நூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 240 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# இரவு உணவின் பின் செய்யக்கூடாதவை

இரவு உணவை முடித்துக் கொண்டு நடைப்பயிற்சி மேற்கொள்வது மிகவும் நல்லது என பலர் அறிவுரை கூறுவதுண்டு. ஆனால் அது முற்றிலுமாகக் கேடு விளைவிக்கும் செயல் என்றே கூறலாம். ஏனெனில் சாப்பிட்ட உடன் நடக்கும் போது கைகளுக்கும், கால்களுக்கும் இரத்தம் வேகமாகப் பாய்வதால் செரிமானம் தாமதமாகவே நடைபெறுகிறது. மேலும், சாப்பிட்ட பின் நடப்பதால் சிலருக்கு வயிற்று வலியோ, தலைச்சுற்றலோ ஏற்படும்.

இரவு உணவுக்குப் பின் உடனடியாகப் பல் துலக்கக் கூடாது. ஏனெனில் உணவுகளை மென்று சாப்பிடுவதற்காக, பற்களுக்கு நிறைய வேலைகள் கொடுப்பதால், அது மீண்டும் வலுப்பெறச் சிறிது நேரமாகும். எனவே குறைந்தது 30 நிமிடங்கள் கழித்தே பல் துலக்க வேண்டும்.

சாப்பாட்டிற்குப் பிறகு நன்றாகக் குளித்துவிட்டால் தூக்கம் நன்கு வரும் என சிலர் குளியல் எடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இவ்வாறு செய்வதன் மூலம் குறிப்பாக வயிற்றுக்குப் போக வேண்டிய இரத்தம் குறைந்து விடுவதால், செரிமானம் பாதிக்கப்படுகிறது.

இரவு சாப்பிட்ட பின் உடனடியாகத் தூங்கச் செல்வதால், செரிமானப் பிரச்சினைகள் மட்டுமல்ல, பல வாயுத் தொந்தரவுகளும் ஏற்படக் கூடும். இதனால் உடல் எடையும் தாறுமாறாக அதிகரிக்கும். எனவே, இரவு உணவுக்கும் தூக்கத்துக்கும் இடையே குறைந்தது ஒரு மணி நேர இடைவெளியாவது இருக்க வேண்டும்.



# எண்ணெய் வழியும் சருமத்திற்கு

சிலருக்கு எவ்வளவு தான் சோப்புப் போட்டு முகம் கழுவினாலும் முகத்தில் எண்ணெய்ப் பசை மாறாது. மேலும் மேக்கப் செய்த சிறிது நேரத்தில் முகத்தில் எண்ணெய் வழியும். இரசாயனம் கலந்த முகப் பூச்சுகளால் அலர்ஜி உண்டாகுமே தவிர முழுமையான பலன் கிடைக்காது.

* இவர்கள் கடைந்த மோரை முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி சிறிது நேரம் அதாவது 15 நிமிடங்கள் ஊற வைத்து பின் இளம்சூடான நீரில் கழுவி வந்தால் எண்ணெய் வழியும் சருமம் மாறும்.
* தினமும் உணவில் கீரைகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அஜீரணக் கோளாறு, மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை தவிர்க்க வேண்டும். அது போல் வாயுவை அதிகரிக்கக் கூடிய உணவு களையும் தவிர்ப்பது நல்லது. எளிதில் ஜீரணமாகும் உணவுகளை சேர்த்துக்கொள்ள வேண்டும். அதிக இரசாயனம் இல்லாத மூலிகை சோப்புகளை பயன்படுத்துவது நல்லது.



# பலாப்பழக் கட்லட்

### தேவையான பொருள்கள்

பலாப்பழச்சுளை – 20
சர்க்கரை வள்ளிக் கிழங்கு – 4
சீனி – 100 கிராம்
பாண் – 5 துண்டுகள்
பாண் தூள் – ஒரு கப்
பால் – ஒரு டம்ளர்
ஏலக்காய் தூள் – ஒரு கரண்டி
நெய் – ஒரு மேசைக்கரண்டி

### செய்முறை

கிழங்கை வேக வைத்து தோல், நார் நீக்கி நன்றாக உதிர்க்கவும். பாணை பாலில் ஊறவைத்து நன்றாக பிசைந்து வைத்துக் கொள்ளவும்.
பலாச்சுளைகளை நறுக்கிப் போட்டு மிக்ஸியில் நன்கு அரைக்கவும்.
சீனியை பாகுபோல் காய்ச்சி அதில் உதிர்த்த சர்க்கரை வள்ளிக்கிழங்கு, பிசைந்த பாண், ஏலக்காய் தூள், பலாப்பழச்சுளை சேர்த்து 10 நிமிடம் கிளறவும்.
அந்தக் கலவையை நன்றாகப் பிசைந்து வடை போல் தட்டி, பாண் தூளில் அதைப் புரட்டி, நெய் தடவிய தோசைக்கல்லில் போட்டு வெந்தவுடன் திருப்பிப் போடவும். பொன்னிறமானதும் எடுத்து விடவும். பலாப்பழக் கட்லட் தயார்.







# தலையலங்காரம்


1, 2 தலையின் நடுப் பகுதித் தலைமுடியை, மேலிருந்து கீழாக வாரிக் கொள்ளவும்.
3 பின்னர் முன்பகுதி முடியை வாரி, எதிர்ப் புறமாக (மேலிருந்து கீழாக) வாரி இழுத்த தலைமுடி மீது வைத்து கிளிப் செய்யவும்
4 பின்னர் பொனிரெய்ல் இடவும். இயற்கையான 'பக்கொம் ஸ்ரைல்' தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | 600 | 1000 | – |
| நண்டு | 250 | 400 | 200 | 500 | 400 | 500 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 800 | – |
| பாரை | 550 | 500 | 400 | 450 | 800 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | – | 1000 | 350 |
| சீலா | 300 | 400 | 300 | – | 400 | 300 |
| விளை | 650 | 500 | 300 | 450 | 400 | 350 |
| முரல் | 300 | 200 | 300 | – | 400 | 300 |
| கும்பிளா | 400 | 200 | 400 | 300 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 400 | – |
| ஒரா | 400 | 200 | 300 | 300 | 200 | – |
| திரளி | 300 | 200 | 100 | 300 | 100 | – |
| நகரை | 250 | 200 | 100 | 350 | 200 | 300 |
| சூடை | 150 | 100 | 100 | – | 200 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | 200 | 200 | – |
| திருக்கை | 150 | 200 | 200 | – | 300 | – |
| மதனம் | 150 | 150 | – | 200 | 200 | 200 |
| கொய் | 100 | 100 | 50 | 120 | 50 | – |
| பாலை | 400 | 100 | 300 | 400 | 300 | – |
| வாழை | 100 | 100 | – | 300 | 200 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 60 | 60 | 40 | 50 |
| கத்தரி | 70 | 70 | 60–100 | 100 | 80 | 35 |
| கரட் | 80 | 80 | 80–130 | 100 | 80–100 | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 50 | 60 | 50–60 | 60 |
| பயிற்றை | 100 | 130 | 140 | 100 | 90–100 | 60 |
| பாகல் | 140 | 160 | 130 | 120 | 120–130 | 70 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 100 | 50–60 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80–90 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 120 | 100 | 120 | 70–80 | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 30–35 | 30 |
| தக்காளி | 60 | 70 | 60 | 60 | 50–60 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 | 40–50 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 20–30 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 25 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 60 | 50 | 50–60 | 70 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 50 | 80 | 50 | 80 | 60 | 50 |
| வெண்டி | 80 | 80 | 50 | 60 | 60 | 30 |
| போஞ்சி | 200 | 160 | 160 | 140 | 180 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 120 | 100 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 50 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 500 | 550 | 500 | 500 | 500–550 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10–15 | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 100 | 120–140 | 70 |
| இராசவள்ளி | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 60 | 40 | 60–80 | 100 |

# கரியமில வாயுவை எரிபொருளாக்கும் தொழில்நுட்பம் ஜேர்மனியில்



காற்றிலுள்ள கரியமில வாயுவை எரிபொருளாக மாற்றிக்கொள்ளும் சோல்ட்ஏர்ட என்பதான வாயுவை திரவமாக்கும் தத்துவத்தின் அடிப்படையிலான தொழில்நுட்பத்தை ஜேர்மனியைச் சேர்ந்த கார்ல்ஸ்ருஹே தொழில்நுட்ப நிலையம் உருவாக்கியுள்ளது.

இதன்படி தற்போதைய கண்டறிவை முறையாக வணிக மயப்படுத்திக்கொள்வதற்கான மூலோபாயமாக இன்டெராடெக் என்ற நிறுவனத்தையும் கார்ல்ஸ்ருஹே ஆரம்பித்துள்ள்தாகத் தெரியவருகிறது.

ஒரு சிறிய கன்டயினரில் பொருத்திவிடக் கூடிய தான அளவுடைய இயந்திரம் ஒன்று காற்றில் உள்ள கரியமில வாயுவை பிரித்தெ டுத்து அதனைத் திரவமாக்கி எரிபொரு ளாக மாற்றம் கொள்கிறது.

இந்த இயந்திரத்தின் இயக்கத்துக்கு சூரிய மின்சாரமேபோதும் எனவும் 2018 ஆம் ஆண்டளவில் வர்த்தக ரீதியில் சந்தைகளில் இந்த இயந்திரம் காட்சிப்படுத்தப் படும் எனவும் இன்டெராடெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஒளிச்சேர்க்கையை மாற்றியமைக்கும் முயற்சியில் வெற்றி கிட்டியுள்ளது

### அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிப்பு

சூரிய ஒளிப் பயன்பாட்டின் மூலம் தாவரங்கள் சர்க்கரையை தயாரித்துக்கொள்ளும் முறையான போட்டோ சிந்ததிஸ் எனப்படும் ஒளிச்சேர்க்கை முறைமையை மாற்றியமைக்கும் முயற்சியில் தாங்கள் வெற்றி கண்டுள்ளதான தகவல் விஞ்ஞானிகளால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைந்துவரும் வளர்முக நாடுகளின் உணவு உற்பத்தியில் மிகப்பெரிய தாக்க வன்மையை ஏற்படுத்தவல்லதான ஆய்வு முடிவுகளை லண்டன் மற்றும் அமெரிக்காவை சேர்ந்த விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வளர்முக நாடுகளில் பல இலட்சம்பேர் பசியோடு வாழ்ந்து வருகின்ற சூழலும் தொடர்ந்து அதிகரிக்கும் வீதத்தில் உள்ள சனத்தொகையும் உணவுப் பங்கீடு தொடர்பான சிக்கல்நிலைகளை தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையிலே மேற்படி ஆய்வின் மூலமான புதிய தகவலின் கண்டுகொள்ளலானது தாவரங்களின் விளை திறனில் மாற்றங்களையும் உணவு உற்பத்தியில் அதிகரிப்பையும் ஏற்படுத்தும் புரட்சியாக அமையுமென எதிர்வுகூறப்படுகின்றது.

## செங்கற்களால் நிர்மாணிக்கப்பட்ட புராதன கோயில்

### தொல்பொருள் ஆய்வில் கண்டறிவு

செங்கற்களால் நிர்மாணிக்கப்பட்ட புராதன இந்து கோயிலொன்று திருகோணமலை சேருவில பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை காலத்திற்குரித்தான சிவன் கோயிலொன்றே தொல்பொருள் ஆய்வின் மூலம் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருளியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்கவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் 11ஆம் அல்லது 12 ஆம் நூற்றாண்டுகளில் இக் கோயில் நிர்மாணிக்கப்பட்டிருக்கக்கூடும் எனவும் கோயிலானது மிக பாதுகாப்பான முறையில் காணப்படுவதாகவும் தொல்பொருள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெறாட் மேரி எமல்டா (மஞ்சு)



குருநகரைப் பிறப்பிடமாகவும், 35/5, விதானையார் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெறாட் மேரி எமல்டா (மஞ்சு) 30.11.2016 புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சைமன் விறிஜிற்றம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வால்டர் ஆராக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், வால்டர் ஜெறாட்டின் அன்பு மனைவியும் யூட்ஸ் றெஜிமன் (இலங்கை வங்கி, பூநகரி), றெஜிமலா, றெஜினியா, றெஜிவனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுபராஜினி (இலங்கை வங்கி, கோப்பாய்), சுவைனஸ் (அதிபர்), சுதர்சணன் ஆகியோரின் மாமியாரும் யேற்றூட் (ஜேர்மனி), மரிய கொறற்றி மேரி லிட்வீனா, வின்சலோஸ், றோகினி, கிறிஸ்ரியன் (ஆசிரியர்- புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கவிஷாந், மேரி சுவைனியா, சுபிட்சன், சுபிர்னா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (02.12.2016) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு புனிதயாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**35/5, விதானையார் வீதி,**
**சுண்டுக்குளி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

பிறப்பு
27 . 04 . 1957



இறப்பு
01 . 12 . 2016

### சுப்பிரமணியம் ஸ்ரீபாலன் (ஸ்ரீபால்)

நயினாதீவை பூர்வீகமாகக் கொண்டவரும் கொட்டடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஸ்ரீபாலன் (ஸ்ரீபால்) 01.12.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சுந்தரலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான Dr.தனபாலசிங்கம், குணபாலசிங்கம் பூபாலசிங்கம், தெய்வேந்திரபாலன் மற்றும் சிவபாலசிங்கம் (பொறியியலாளர்), ஜெயபாலசிங்கம், கிஷ்ணபாலன், நாகேந்திரபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மயூரி (ஸ்ரீ லங்கா ரெலிக்கொம்- யாழ்ப்பாணம்), Dr.மாதுரி, மனோகரி(கட்டடத் திணைக்களம்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஸ்வரா, இளமுருகன் ஆகியோரின் அன்பு மாமனும் ஷமிரா, சஞ்ஜனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2016) வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.79, மீனாட்சியம்மன் வீதி,**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**
(தே/6497)
(02.16.21)

தகவல்:
**குடும்பத்தினர்.**

077 238 0194, 021 222 9988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புத் தேவையுடையோர் பன்னாட்டுத் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ. 2
கருவி சிறப்புத் தேவையுடையோர் சமூக வள நிலையத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு சிறப்புத் தேவையுடை யோர் தினம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என்று கருவி பணிப்பாளர் சபை அறிவித்தது.

கருவி சிறப்புத் தேவையுடையோர் சமூகவள நிலையத்தின் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங் கரநேசனும், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.2
யாழ். குருநகர் சென்.றோக்ஸ் சனசமூக நிலையத்தின் 2016- 2017ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு அண்மையில் றெக்கிள மேசன் கிழக்கு கிராம அலுவலர் நா.நித்தியானந்தசிவம் தலைமையில் இடம் பெற்றது.
இதில் தலைவராக அருளனாந்தம் அருள் பிரகாசம்,உப தலைவராக கிறிஸ்துராசா எழில்தரன், செயலாளராக ஜெராட் ஜெயந்தன், உப செயலாளராக கொண்சன்ரையின் ராஜிவ்காந்த்,பொருளாளராக கிறஸ்ரியன் பேணாட், நிர்வாக சபை உறுப்பினர்களாக பெனடிக்ற் அலன், ஜோன்கென்றி, இராசேந்திரன் உதயன், சிறில்சிந்து, சசிநிர்மலாதேவி, அன்பு மன்மதராஜா ஸ்ரெலா நித்திலநாயகம்.போசகர்களாக ஆ.திருவம்பலம், ஜெ.யோகரட்ணம், நாகராஜா, கணக்காய்வாளராக உவாம்சீலின் தீபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (வ-23)

## முன்பள்ளிகளின் கண்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 2
வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும், கலை நிகழ்வும் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் என்று வடக்கு மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு அறிவித்தது.
வடக்கு மாகாண ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசாவும், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இரவீந்திரனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)




## மரண அறிவித்தல்கள்



### பேதுறு யுவானி (துரை)

பலாலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுறு யுவானி நேற்று (01.12.2016) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுறு - அருனோதயம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மோசேஸ் - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற றெஜினா மகேஸ்வரி யின் பாசமிகு கணவரும் மிரியம் கொன்செப்ரா (ஆசிரியர் கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை), டெலஸ் கொன்ஸ்ரன்ரைன் (வியாபாரம்), கிறிஸ்ரி வொலன்ரைன் (டல்லா) (வியாபாரம்), மிரியம் வொலன்ரீனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இருதயநாதன் (பிரதி அதிபர் - இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), மோதிலால் (கணக்காளர் நீர்ப்பாசன திணைக்களம் - வவுனியா) அ.கி. வொலன்ரைன் (உதவி கல்வி பணிப்பாளர் (கணிதம்) மாகாணக்கல்வி திணைக்களம் வடமாகாணம்), மேரிகிளிஸ்ரா (அபிவிருத்தி உத்தியோகத்தர் வீதி அபிவிருத்தி திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து, சிமியோன், வைத்தியாம்பிள்ளை, மாக்கிறட் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்று அனோஜ் (உயர்தொழில்நுட்ப கல்லூரி, யாழ்ப்பாணம்), ஆன்பெனலீனா, அனிஸ் புளோறிடா, யனுஸ் டில்சன், றொஸ்மி செலானோ, ஷானஸ் கிறைஸ்ரா, பெலிக்ஸ் கொனஸ்ரா, கசோனா, அஸ்ரேனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (02.12.2016) வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற பின்பு நல்லடக்கத்திற்காக புனித அந்தோனியார் சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**ஐயனார் வீதி, சுன்னாகம்.**
**076 757 8242, 076 655 1185**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

### திருமதி சரஸ்வதி வெற்றிவேலு

**தோற்றம்**
**08.03.1927**

**மறைவு**
**01.12.2016**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வெற்றிவேலு நேற்று (01.12.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வெள்ளிமலை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி வெற்றிவேலுவின் (முன்னாள் முகாமையாளர் சங்கானை ப.நோ.கூ சங்கம்) அன்பு மனைவியும், அன்பழகன் (உரிமையாளர் மாருதி அச்சகம் வழக்கம்பரை) கலையழகன், அருளழகன் (முகாமையாளர் சங்கானை ப.நோ.கூ சங்கம்), வேலழகன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், ஸ்ரீ சிவசண்முகானந்ததேவி, தவசோதி, நற்குணதேவி, அருணி (டாக்டர்-ஜேர்மனி) ஆகி யோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான திரவியம், அன்ன பூரணம் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் ஞானச்சந்திரமூர்த்தி (முன்னாள் ஆசிரியர்), சோதிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஐங்கரன், சங்கவி, பைரவி, வேல்விழி, பகீரதன், வெற்றிதரன், பகீரதி, பாரதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2016) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது பண்ணாகத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**

(J/6500) (10.19)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 520 4470**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### வருடாந்த ஆண்டறிக்கை மொழி பெயர்த்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2015ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், சிங்களத்திற்கும் மொழி பெயர்ப்பு செய்ய தகுதி யானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கணினியில் பொறித்து மென் பிரதியையும், வன் பிரதியையும் வழங்கவேண்டும். பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு ஏற்ற வகையில் கொடுப்பனவுகள் மேற் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது பெயர், விலாசம், தொலைபேசி இல மற்றும் மொழிபெயர்ப்பு செய்வதற்கான அனுபவம் ஆகியவற்றை குறிப்பிட்டு 12.12.2016ஆம் திகதிக்கு முன்னதாக "**பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் "**வருடாந்த ஆண்டறிக்கை மொழி பெயர்த்தல்**" என குறிப்பிடுதல் வேண்டும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## துயர் பகிர்கின்றோம்



கடந்த 29.11.2016 அன்று சிவபதமடைந்த
மீசாலை வடக்கைச் சேர்ந்த
**அமரர்**
**திருமதி சிவக்கொழுந்து விநாயகமூர்த்தி**

"வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

நாதியின்றி நாமெல்லாம்
அந்தரித்த நின்றபோது - எமை
அனுசரித்து அடைக்கலம் கொடுத்தீர்கள்
உன்னத்தம் அது எண்ணத்தில்
கொண்டு உயர்வாக்கும்
உத்தம பணி புரிந்தீர்கள்
பல்லாண்டு உழைத்து
பண்பாளர்களைப் படைத்தீர்கள்
ஊருக்கே அடையாளமாய் உயர்வாயிருந்தீர்கள்
உதாரணமாய் வாழ்ந்தீர்கள்
நிறைவான தம் தவவாழ்க்கை
தலைமுறைகளை ஆசீர்வதிக்கும்

எல்லாம்வல்ல இறையருளால் தங்கள் ஆத்மா சாந்தியெய்தி முத்தியின்பம் பெறப் பிரார்த்தித்து அன்னாரின் பிரிவுத் துயரில் இருக்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினருடன் நாமும் துயர் பகிர்ந்து கொள்கின்றோம்.

**சேயோன் குடும்பத்தினர், சேந்தன் குடும்பத்தினர், செங்கோடன் குடும்பத்தினர், செவ்வேல் குடும்பத்தினர் மற்றும் மாவை.செ.நவரத்தினம் குடும்பத்தினர்.**

(C/26787)
(10.19)

## மரண அறிவித்தல்



### சச்சிதானந்தம் கஜந்தன்

**(கால்நடை சுகாதாரத்திணைக்களம் - பூநகரி)**

இல.48, வன்னேரிக்குளம் கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், சப்பச்சி மாவடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தம் கஜந்தன் நேற்று (01.12.2016) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் இராசபாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் சஜிந்தன் (ஆஸ்திரேலியா), நஜிந்தராஜ் (சாரதி தர்மபுரம் வைத்தியசாலை), துஜிந்தன், ஜனோபா (மாணவி சாவ கச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அ.துரைசிங்கத்தின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2016) அவரது தற்காலிக வதிவிடமான சப்பச்சிமாவடி சங்கத்தானையில் பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**அ. கயிலாயபிள்ளை (பெரியப்பா)**
**(ஓய்வு நிலை அதிபர் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி)**
**அ.துரைசிங்கம் (சித்தப்பா)**

**சப்பச்சிமாவடி,**
**சாவகச்சேரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications upto **30.12.2016** from the qualified persons for the under mentioned posts.

## FACULTY OF TECHNOLOGY

❖ Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II /Lecturer (Probationary) in **Engineering Technology**

**Note:** Special consideration will be given to those who have degrees in Technology or Engineering in one or more of the following fields:

- Building Construction /Civil Engineering
- Automobile Technology/Mechanical Engineering
- Electro technology/Electrical & Electronic Engineering

❖ Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Probationary) in **Bio system Technology**

**Note:** Special consideration will be given to those who have degrees inBio system Technology specialized in one or more of the following fields

- Food Production Technology
- Commercial Green farming Technology

## SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs. 45,545 – 7x1050 – 52,895/-p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 39,755 – 11x 790 – 48,445/-p.m. |
| Lecturer (Probationary) | Rs.27,775 – 10x645 – 34,225/-p.m |

**Note**:

In addition to the above salary, the following allowances will also be paid:

i) Academic allowance –Senior Lecturer Gr.I/Gr.II – 136% of the basic salary
–Lecturer (Probationary) – 100% of the basic salary

ii) Special allowance -20% of the basic salary

iii) Additional monthly allowance – 20% of the basic salary

iv) Cost of living allowance of Rs.7,800/-p.m.

v) Interim allowance of Rs.10,000/- p.m.

Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

**Statutory benefits:**

(i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Grade I and Senior Lecturer Grade II

(ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.

(iii) Gratuity payments

(iv) Employees' Trust Fund benefits.

(v) Free Medical Services.

Duly completed applications should be forwarded with copies of relevant certificates under registered cover to reach the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna** on or before **30.12.2016**. The post should be indicated on the top left-hand corner of the envelope.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self – addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
**30.11.2016**

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்
## வழிபடுநர் பேரவை, உறுப்புரிமை விண்ணப்பம் கோரல் - 2017

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஆலய முகாமைத்திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் முகாமைத்திட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியிலோ நேரடியாகவோ செலுத்த இயலும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 01.12.2016 தொடக்கம் 31.12.2016 மாலை 5 மணிவரை ஆகும்.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய காசுக்கட்டளை தபாற் கட்டளை விவரங்கள் தேவைப்படுமாயின் 0213213024 021 320 7785 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாகத் தயாரித்துக் கொள்ளலாம். 2016 ஆம் ஆண்டு வழிபடுநர் பேரவை அங்கத்தவர்களாக இருப்பவர்கள் விண்ணப்பத்தை விண்ணப்பிக்க விரும்பின் வழிபடுநர் பேரவையின் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்திலும் (2ஆவது அட்டவணை) அவ்வாறு இல்லாது புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வழிபடுநர் பேரவை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம் (முதலாவது அட்டவணை) விண்ணப்பிக்க வேண்டும்.

குறிப்பு : - விண்ணப்பங்கள் பின்வருவோர்களில் ஒருவரால் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும்.

* சமாதான நீதிவான்
* இந்து மதகுரு
* இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்
* கிராம சேவை உத்தியோகத்தர்
* அரசாங்கப் பாடசாலை அதிபர்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயருடன் கூடிய இறப்பர் முத்திரை பொறிக்கப்பட வேண்டும்.

பொ.அன்பரசன்
செயலாளர்
அறங்காவலர் சபை.

முதலாம் அட்டவணை

### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்
### வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரின் முழுப்பெயர்
2. பிறந்த நாள் :
3. இந்து சமயத்தவரா?
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலில் வழிபடுபவரா?
5. நீங்கள் உறுப்புரிமை 3(2)(ஏ) அல்லது 3(2)(பீ)யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின் இந்த ஆண்டு கோயிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச் சீட்டு தொடர்பான விவரங்களைத் தருக:

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச் சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப் பட்டது என்ற விவரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி:
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/தபாற் கட்டளையின் விவரம்:
காசுக்கட்டளை / த.க. எண் அலுவலகமும் வழங்கியநாளும் தொகை
8. நீங்கள் ஏதாயினும் குற்றத்துக்காக நீதிமன்றம் எதிலாவது எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விவரங்களையும் தருக.
9. இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விவரங்களையும் தருக.

மேற்கூறிய விவரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மை யானவையும், சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துகிறேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவுசெய்துகொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

.....................................
விண்ணப்பகாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது.அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்துகொண்டதாக தென்பட்டதோடு, என் முன்னிலையில் .... ஆம் ஆண்டு ..... மாதம் ............ நாளன்று ...........................எனுமிடத்தில் தமது கையொப்பத்தையும் இட்டார்.

.....................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:- விண்ணப்பகாரரின் ஒப்பம், சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவைஅலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக் கான "றபர் ஸ்டாம்ப்" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

31.12.2016 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேணடும்.

இரண்டாம் அட்டவணை

### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்
### வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையை புதுப்பித்தற்கான விண்ணப்பம்

நயினாதீவு
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலின்
அறங்காவலர் சபை செயலாளருக்கு

அன்பார்ந்த ஐயா,

**வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்**

......ஆம் ஆண்டு சனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவைக்கான எனது சந்தாவை புதுப்பித்துக் கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன். ........................... அஞ்சலகத்தால் ...... ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட .............. ஆம் இலக்கங்கொண்ட காசுக்கட்டளை/தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன் வழிபடுநர் பேரவை யின் ஓர் உறுப்பினராகப் பதிவுசெய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் : .............................................
முகவரி : .............................................

.....................................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்துகொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் .... ஆம் ஆண்டு ..... மாதம்........ நாளன்று ..................... எனுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார்.

.....................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:- விண்ணப்பகாரரின் ஒப்பம், சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவைஅலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான "றபர் ஸ்டாம்ப்" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

31.12.2016 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேணடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகங்கள் பசுமையை பேணும் இயற்கை விரும்பிகள்



மரத்தில் கூடுகட்டி வாழ்கின்ற காகங்கள் காலையில் இரை தேடப் புறப்படுவதுடன் மதிய வேளைகளில் அதே மரத்தை வந்தடைகின்றன. காகத்தின் எச்சங்கள் சிறந்த உரமாகப் பயன்படுவதுடன் தாவரங்கள் செழிப்பாக வளர்வதற்கும் காரணமாக அமைகின்றன.

இவைதவிர எச்சத்தின் மூலமாக மண் ணில் பதிகின்ற விதைகள் மழைக் காலங் களில் முளைக்கத் தொடங்குகின்றன. குறிப்பாக விதைகளை எச்சத்தின் மூலமாக ஆங் காங்கே பரவி தாவரங்கள் உற்பத்தியாவதற் கான இயற்கை விதைத் தூவியாக காகங்கள் விளங்குகின்றன.

அதேவேளை கனிகளிலிருந்து நேரடியாகப் பெறப்பட்ட விதையின் முளைப்புத் திறனோடு ஒப்பிடுகையில் காகத்தின் எச்சத்திலிருந்து பெறப்பட்ட விதையின் முளைப் புத்திறனா னது அதிகமாக இருப்பதான தகவல் ஆய்வு பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

விலங்குகளின் உற்ற தோழனாகவும், மனி தர்கள் அன்றாடம் செய்கின்ற சுகா தாரச் சீர்கேடுகளை அப்புறப்படுத்தும் இயற் கைத் துப்புரவியாகவும் காகங்கள் இருந்து வருகின்றன. காக இனத்தின் அற்புத செயல் களைக் கருத்தில் கொண்டு அவை அழிக் கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதான தெளிவூட்டல்கள் அயல்நாடுகளில் மேற்கொள் ளப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

## 31[ஆம்] நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி திரேசம்மா (பூமணி) பூகோணப்பர்

[ஓய்வு நிலை அதிபர் வைரவார் தமிழ் வித்தியாலயம் வட்டவளை]

கடந்த 03.11.2016 இறைபதமடைந்த எமது பாசமிகு தாயாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நாளை (03.12.2016) சனிக்கிழமை நடைபெறும். அன்னாரின் மரணத் துயர் பகிர்ந்த அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட தேவரையாளி இந்துக் கல்லூரிப் பணியாளர்களுக்கும், இ.போ.ச காரைநகர் ஊர்காவற்றுறைசாலை நலன்புரிசங்கத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அலன் பூபாலசிங்கம்(ஓய்வு நிலை ஆசிரியர்) மற்றும் குடும்பத்தினர்.
நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலய வீதி, மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி




எனது ஆருயிர் நண்பனும் Wesco மருந்தக முகாமையாளர் திரு. பாஸ்கரனின் மைத்துனருமாகிய

### அம்பலவாணர் இரட்ணசபாபதி

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைந்தோம்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபம் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

லயன் Dr. க.மு. பத்மநாதன்,
Wesco மருந்தகம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## 31[ஆம்] நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



### அமரர் இராசா செல்வக்கதிரமலை

தோற்றம் 19.04.1949 — மறைவு 02.11.2016

கடந்த 02.11.2016 புதன்கிழமை இறைபதம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபத்தைத் தெரிவித்தும் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும் எங்கள் அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று 02.12.2016 வெள்ளிக்கிழமை பகல் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மாணிக்க கங்கை,
கொற்றாவத்தை.
(J 6485)
(22,16,21)
குடும்பத்தினர்
0771368178

## 2[ஆம்] ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03
.
10
.
1932

மறைவு
25
.
11
.
2014

### அமரர் கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

சோகம் சொரிந்தது ஐயா சோவென்று பொழிந்தது
மாரிவந்த கணம் எமை ஏமாற்றிச் சென்றீர்கள் ஐயா
தேவர்கள் தமை அழைக்க – எம் தேகங்கள் படபடக்க
விண்ணுறையும் தெய்வத்துள் தெய்வமாய் ஆனீர்களே ஐயா
இரண்டு வருடங்கள் கடந்தன ஒரு கணமும் மறவோம் ஐயா
எம் இதயத்தில் உயிர் மூச்சு உள்ளதென்று உணர்கையிலே
எம்முடனே நீங்கள் இருப்பீர்கள் ஐயா

ஆலடி,
காரைநகர்.
(J 6423)
(14,17,18)
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
திரு. சோமசுந்தரம் முரளி
அவர்களின் மைத்துனர்

### தம்பிஐயா பாக்கியராஜா

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கல்லூரிச் சமூகம்
தெகிவளை தமிழ் மகா வித்தியாலயம், கொழும்பு.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

### முத்துலட்சுமி நவரத்தினம்



மலர்வு
04.06.1951

உதிர்வு
15.12.2012

காலங்கள் எவ்வளவு வேகமாக நகர்கிறது
கண்ணயர்ந்த வேளையில் நான்கு ஆண்டுகள் கடந்தும்
முள்ளாக எங்கள் மனதில் உங்கள் நினைவுகள்
நான்கு வருடம் என்ன இன்னும் ஓராயிரம் வருடங்கள்
கடந்தாலும் அழியாது உங்கள் நினைவுகள்

நினைவுகளுடன்
கணவர்- வ. நவரத்தினம், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நவம் பந்தல் சேவை, நுணாவில் மத்தி, கல்வயல், சாவகச்சேரி

## 45[ஆம்] நினைவு நாள் அழைப்பு





### அமரர் விஜயகுமார் சுலக்ஷன்

தோற்றம் 08.03.1992 — மறைவு 20.10.2016

கடந்த 20.10.2016 கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட அமரர் விஜயகுமார் சுலக்ஷன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (03.12.2016) சனிக்கிழமை கந்தரோடையில் உள்ள அவரது வீட்டில் நடைபெறும். அன்றையதினம் இறுவட்டு, சுலக்ஷன் வீதி திறப்பு விழா, நினைவுப் பேருரை என்பன நடைபெறும். இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவரும் இந் நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்
குடும்பத்தினர்.

## உடல் வெப்பத்தால் காயங்கள் குணமடையும்

எலக்ரோன்ஸ் உதவிபுரிகிறது

எலக்ரோன்களின் உதவியுடன் மனித உட லில் ஏற்படும் காயங்களைக் குண மாக்கக் கூடியதான புதிய முறைமையை அமெரிக்க விண் வெளி ஆய்வு மைய மான நாசாவை சேர்ந்த விஞ்ஞானி கள் மேற்கொண்ட ஆய்வுத் தகவல்கள் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

இதன் மூலம் உட லில் காணப்படு கின்ற செல்களின் வளர்ச்சியைத்தூண்டி காயங்களை விரை வாக குணப்படுத்த முடிகிறது.

இவ்வகைக் கருவி கள்உடல்வெப்பத்தின் மூலம் இயங்கும் வகையிலான வடி வமைப்பைப் பெற் றுள்ளது.

எலெக்ட்ரோ ஆக்டிவ் பாண்டேஜ் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த முறையானது மனித உடலின் வெப்பத்தால் எலக் ரோன்கள் தூண்டப் பட்டு மின்சாரம் உற்பத்தியாகிறது. இந்த மின்சாரம் உடலிலுள்ள செல் களின் வளர்ச்சியை அதிகப்படுத்துவ துடன் காயங்களை விரைவில் ஆற்றும் வகையில் அமைந் துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமலுக்கு எதிரான மனு ஜனவரியில் விசாரணைக்கு

எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இந்த வழக்கு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முறையற்ற ரீதியில் பணம் ஈட்டியமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. விசாரணைக்குச் சமுகமளித்திருந்த நாமல் ராஜபக்ச, ஆணைக் குழுவினால் விதிக்கப்பட்ட உத்தரவுகளை மீறியதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

அத்துடன் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் நாமல் ராஜபக்ச கருத்து வெளியிட்டிருப்பதாகத் தெரிவித்து ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி தில்ருக்சி டயஸ்விக்ரமசிங்கவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழ்க்கு மீதான விசாரணை நேற்று முன்தினம் தலைமை நீதியரசர் கே.சிறிபவன் தலைமையிலான மேன்முறையீட்டு நீதியரசர்களான புனநேக அலுவிஹாரே ஆகியோரை உள்ளடக்கிய குழாம் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது வழக்கு மீதான அடுத்த விசாரணை ஜனவரி மாதம் 16 ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டது. (த-5)

# கோத்தா வெளிநாடு செல்ல அனுமதி

கடற்படைத் தளபதிகள் உள்பட ஏழு சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கியபோது அவர்களின் வெளிநாட்டுப் பயணங்களை முடக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்றத்தில் நேற்றுக் கருத்து தெரிவித்த எதிர்த்தரப்புச் சட்டத்தரணி, சந்தேக நபர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயண தடை உத்தரவை நீக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். வழக்கைத் தாக்கல் செய்துள்ள ஊழல் விசாரணை ஆணைக் குழு இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

சம்பந்தப்பட்ட தடை உத்தரவை நீக்குமாறு உத்தரவு பிறப்பித்த நீதிபதி, சந்தேக நபர்கள் வெளிநாடு செல்ல முன்னர் அவர்கள் அதனை நீதிமன்றத்திடம் தெரிவிக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அவன்காா்ட் எனும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஆயுதக் களஞ்சியம் நடத்திச் செல்ல அனுமதி வழங்கியதன் மூலம் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உட்பட சந்தேக நபர்கள் அரசுக்குச் சுமார் 11 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நட்டத்தை ஏற்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஊடகவியலாளராக பணி புரிந்தாராம் மைத்திரிபால

பதியாகப் பதவியேற்றிருப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். தாம் ஒருபோதும், ஊடகவியலாளர்களைத் துன்புறுத்தமாட்டேன் என்றும் அவர் உறுதியளித்தார். (த-5)

# வடக்கை சுழற்றியது நடா புயல்

முன்னரே அறிவிப்புகள் வெளியிடப்பட்டதால் மக்கள் வீடுகளுக்குள் முடங்கினார்கள். நடா புயல் காரணமாகச் சாவகச்சேரியில் ஒருவர் உயிரிழந்தார். மீன்பிடிக்கச் சென்ற 4 பேர் காணாமற்போயுள்ளனர். 2 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் 22 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் 57 குடும்பங்களைச் சேர்ந்த 159 பேரும், கிளிநொச்சியில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

பயன்தரு மரங்கள் மற்றும் பெருமரங்கள் என்பன வேரோடு சாய்ந்து வீழ்ந்தன. மின்சார வயர்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினால் சில இடங்களில் மின்தடை ஏற்பட்டது.

நேற்றுக் காலையில் மழை குறைவாக இருந்தபோதும் மாலையில் கன மழை பெய்தது. நாள் முழுவதும் கடும் குளிரான கால நிலை நீடித்ததால் பொதுமக்கள் பெருமளவில் வீடுகளுக்குள்ளேயே முடங்கினர்.

இலங்கையின் வடகிழக்காக நிலை கொண்டிருந்த புயல் காரணமாக, நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தொடக்கம் மழை தூறிக் கொண்டிருந்தது. இடையிடையே மாத்திரம் காற்றுடன் கூடிய கன மழை பெய்தது. கடும் குளிரான காலநிலையும் நீடித்தது.

### ஒருவர் சாவு

கடுமையான காற்று வீசியதில், பட்ட மரம் முறிந்து வீழ்ந்தது. அதில் சிக்குண்டு ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சோகச் சம்பவம் நேற்றுக் காலை, சாவகச்சேரி, சங்கத்தானை இத்தியடி பிள்ளையார் கோயில் அருகில் இடம்பெற்றது. பூநகரியிலுள்ள தனது அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்த அரச பணியாளரான, சாவகச்சேரி சப்பச்சிமாவடியைச் சேர்ந்த சச்சிதானந்தம் கஜந்தன் (வயது-30) என்பவரே சாவடைந்தார். இந்தத் தகவல் பரவியதைத் தொடர்ந்து மக்கள் நடமாட்டம் நேற்றுப் பகல் குறைந்தது.

### மீனவரைக் காணவில்லை

இதேவேளை, மீன்பிடிக்கச் சென்ற 8 பேர் யாழ்.மாவட்டத்தில் காணாமற்போயுள்ளனர். மருதங்கேணியிலிருந்து இருவரும், சண்டிலிப்பாயிலிருந்து இருவரும், பருத்தித்துறையிலிருந்து 4 பேருமாக எட்டுப் பேர் இதுவரை காணாமற்போயுள்ளனர்.

மழை நேரத்தில் மின் இணைப்புக் கொடுத்துக் கொண்டிருந்த மீசாலை கிழக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், மின்தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்தார். கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் வகுப்பறைக் கட்டடம், மழை காரணமாகச் சரிந்து வீழ்ந்தது. இதில் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

கடும் காற்றுக் காரணமாக வாழை மரங்கள் மற்றும் பப்பாசி மரங்கள் என்பன முறிந்து வீழ்ந்தன. அத்துடன் பயன்தரு மரங்களும் வேருடன் சாய்ந்து வீழ்ந்தன. காற்றுடன் கூடியமழை காரணமாக வடக்கின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. (த-5-7-101-26-109-108-17-9-35-8-11)

# போருக்குப் பின்னர் வடக்கில் மது நுகர்வு 400 சதவீதம் அதிகரிப்பு

எழுப்பியிருந்தார். இதற்கான பதில்களை நிதி அமைச்சர் சபையில் ஆற்றுப்படுத்தியிருந்தார். மேலதிக கேள்விகளைப் பிறிதொரு நாளில் கேட்குமாறு கோரியிருந்தார். இதன்போது குறுக்கீடு செய்த பிமல் ரத்நாயக்கா, அமைச்சரே, வடக்கில் மதுபாவனை நுகர்வு அதிகரித்துள்ளது என்று ஜனாதிபதியே குறிப்பிட்டுள்ளார். இது முக்கிய பிரச்சினையாகும் – என்றார்.

'ஆம் உறுப்பினரே. சடுதியாக அதிகரித்துள்ளது. நூற்றுக்கு 400 சதவீதத்தால் அது அதிகரித்துள்ளது' - என்றார் நிதி அமைச்சர்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி போர் முடிவுற்ற நாளில் – யாழ்ப்பாணத்தில் 49 மதுபானச் சாலைகள் இருந்தன. 2010ஆம் ஆண்டில் 3, 2012 ஆம் ஆண்டில் 2, 2013 ஆம் ஆண்டில் 4, 2015ஆம் ஆண்டில் ஒன்று என்று புதிதாக மது விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் மதுபான நுகர்வு தலா 5.7 லீற்றராகும் என்று நிதி அமைச்சு சபைக்கு ஆற்றுப்படுத்திய பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# அரசியல் கைதி திடீரெனச் சாவு

சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட் டிருந்த அரசியல் கைதி ஒருவர் நேற்றுத் திடீரென உயிரிழந்துள்ளார். குணரத்தன கஜவீர (வயது-70) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவார்.

2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற காலி துறைமுகத் தாக்குதலுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் 63 வயதான மனைவி வைரமுத்து சரோஜாதேவியும் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இ களது இரண்டு மகன்களும் கைது செய்யப்பட்டுச் சிறைச்சா யிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவரின் சட தற்போது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவர் மாரடைப்பினால் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின் (த

# வட்டமேசைப் பேச்சுக்கு அழைக்கிறார் ஜனாதிபதி

## புதிய அரசமைப்பு தொடர்பில்

அதை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பொதுவான அபிப்பிராயமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்காகச் சகல தரப்பினையும் ஒன்றிணையுமாறும், வட்டமேசைப் பேச்சுக்கு வருமாறும் கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால, தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசு வகுத்துவரும் பொறிமுறை குறித்து சிங்கள மக்கள் மத்தியில் தவறான கருத்து பரப்பப்பட்டு வருகின்றது. கடந்தகாலச் சம்பவங்களை உதாரணம் காட்டி தீர்வுத்திட்ட முயற்சியைக் குழப்பிடியக்கச் சிலர் முற்படுகின்றனர். தீர்வுத் திட்ட முயற்சியைக் கொச்சைப்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். நாட்டில் மீண்டுமொரு இரத்தக் களரி உருவாகவேண்டும் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

பல்லினச் சமூகங்களும் வாழும் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படாமல் இருப்பதுகூட பெரியதொரு இடராகும். அதை அந்தக் கோணத்திலேயே பார்க்கவேண்டும்.

எமது நாட்டிலும் ஒவ்வொரு தசாப்த காலப் பகுதியில் முறுகல்கள் ஏற்பட்டு அதனால் பெரும் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இனங்களுக்கிடையில் நம்பிகையீனம் ஏற்பட்டது. சந்தேகம் வலுப்பெறத் தொடங்கியது. மக்களை அச்சம் சூழ்ந்து கொண்டது. இன்றுகூடச் சமாதானம் முழுமையாக ஏற்பட்டுவிட்டது என்று நான் கருதவில்லை. அதை நோக்கிப் பயணிப்பதே அரசின் நோக்கமாக இருக்கின்றது.

பண்டாரநாயக்க–செல்வநாயகம் உடன்படிக்கை, டட்லி – செல்வா உடன்படிக்கை ஆகியன கடும் எதிர்ப்புகளால் குழப்பியடிக்கப்பட்டன. பிரச்சினைகள் மேலும் உக்கிரமடைந்தன. கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஊடரங்குச் சட்டத்தைப் பிறப்பித்து 13ஆவது திருத்தச் சட்டத்தை ஜே.ஆர்.கொண்டு வந்தார். அதன் ஊடாகவும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது.

பிரச்சினை பன்னாட்டுச் சமூகம் வரை சென்றது. பல இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றனர். தமிழக முகாம்களில் இலங்கையர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறானதொரு சூழ்நிலையானது நாட்டுக்கு ஏற்பட்ட அகௌரவமாகும்.

புதிய அரசமைப்புப் பற்றிக் கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது. சாதகமானதொரு கட்டத்துக்குத் தற்போது பிரவேசித்துள்ளோம். பண்டாரநாயக்க, டட்லி, ஜே.ஆர்., சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்ற கடந்த காலத் தலைவர்கள் அரசியல் தீர்வுக்கான முன்முயற்சியை மேற்கொண்டபோது அவற்றைச் சிலர் குழப்பியதைப் போன்று இன்றும் சிலர் எமது முயற்சிகளையும் குறைத்து மதிப்பீடு செய்து – கொச்சைப்படுத்தும் வகையில் பேசிக் குழப்புவதற்கு முயற்சிக்கின்றனர்.

புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டைப் பிளவுப்படுத்த அரசு முயற்சிப்பதாக மாநாயக்க தேரர்கள் மத்தியில் சென்று தவறான கருத்தைப் பரப்புகின்றனர். பௌத்த மதத்துக்குரிய முதன்மை நீக்கப் போவதாகவும் பொய்யான பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். சிங்கள மக்கள் மத்தியிலும் வெளிநாடுகளில் வாழும் சிங்களவர்களிடமும் இதே கருத்துதான் கொண்டு செல்லப்படுகின்றது.

அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தப்பித்துக் கொள்வதற்கும் கடந்த காலத்தில் இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்திய சில தலைவர்கள், எதிர்காலத்தில் அதிகாரத்துக்கு வரும் எதிர்பார்ப்புடன் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக, பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தற்போதைய அரசின் உண்மையான முயற்சிகளை எந்தவொரு அடிப்படை ஆதாரங்களுமின்றிப் பொய்யான வார்த்தைகளைப் பயன்படுத்தி குழப்புவதற்கு முயற்சிக்கின்றனர். இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல் போகும் பட்சத்தில், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளுக்கு அவர்களே பொறுப்புக் கூறவேண்டும்.

இன, மத, குல மற்றும் மொழி பேத ரீதியான செயற்பாடுகள் பிரச்சினையைத் தீர்க்க உதவாது. பிரச்சினை சம்பந்தமாக பேசும்போது தீர்வு காண்பதிலும் நேர்மையாக இருக்கவேண்டும். இன்று போர் மற்றும் துப்பாக்கிச் சத்தங்கள் இல்லாத போதிலும் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. கடந்த தசாப்தங்களில் அற்பத்தனமான தேசாபிமானிகளின் செயற்பாடுகளினால் தா நாம் பாரதூரமான போருக்கு முகம்கொடுக்க வேண்டி வந்த எமக்கு, அரசியல் வீரர்கள் தேவையில்லை. நியாயபூர்வமா தீர்வொன்றை வழங்கும் வீரர்களே அவசியமாக இருக்கின்றன நிலையான சமாதானத்தையும் பிளவுபடாத நாடொன்றை உ வாக்குவதற்கும் மீண்டும் போர் ஏற்படாமல் இருப்பதற் சகலரும் ஒன்றிணைந்து வட்ட மேசையொன்றில் கலந்துபே பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்கு ஒத்துழைப்பு த மாறு நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் அனைத்து இன மக்களும் நட்புடனும், அச்சம், சந்தே மின்றியும் அமைதியாகவும் ஒன்றுபட்டு வாழக்கூடிய நிலை யை ஏற்படுத்தும் மீண்டுமொரு போர் ஏற்படாத சுழல் உரு கப்பட வேண்டும் - என்றார்.

(த

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 2
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் எவ்.ஏ. கிண்ணத்துக்காக நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை லீக்கில் பதிவுசெய்துள்ள அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து பொற்பதி சென். பீற்றர்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)



பொலிவியாவில் இருந்து கொலம்பியாவுக்கு சென்ற பயணிகள் விமானம் கொலம்பிய மலைப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை வீழ்ந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணித்த 81 பேரில், 76 பேர் சாவடைந்தனர். ஐந்துபேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். குறித்த விமானத்தில் பிரேஸிலின் கால்பந்துக் கழகமான சர்பிசியோன்ஸ் ரியல் அணியின் வீரர்களும் பயணித்தனர். விபத்தில் சாவடைந்த மக்களுக்கும் கால்பந்து வீரர்களுக்கும் ஸ்பெய்னின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனா வீரர்கள் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தினர். (ம)

## சேவியர், விண்மீன் அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 2
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். சேவியர், பலாலி விண்மீன் அணிகள் வெற்றிபெற்றன.
அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடர் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சென். சேவியர் அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் அணி மோதியது.
இதில் சென். சேவியர் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நக்கீரன் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. இதில் விண்மீன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## ஆஸ்திரேலியா – நியூசி. நாளைமறுதினம் மோதல்

ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது.
தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டம் சிட்னியில் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் கான்பராவில் டிசெம்பர் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், மூன்றாவது ஆட்டம் டிசெம்பர் 9 ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறவுள்ளன.
ஆஸ்திரேலிய அணிக்கு ஸ்ரீவ் சிமித்தும், நியூசிலாந்துக்கு வில்லியம்சனும் தலைமை தாங்குகின்றனர். (ம)





## அணியில் தொடர்வார் பட்டேல் கோக்லி நம்பிக்கை தெரிவிப்பு

இந்திய டெஸ்ட் அணியில் பார்திவ் பட்டேல் தொடர்ந்தும் நிலைத்திருப்பார் என்று நம்பிக்கை வெளியிட்டார் அந்த அணியின் தலைவரான கோக்லி.
இலக்குக் காப்பாளரான சகா காயமடைந்ததால் இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் பார்திவ் பட்டேல் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இலக்குக் காப்பில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய பட்டேல், துடுப்பாட்டத்திலும் சாதித்தார். இதனையடுத்தே பட்டேல் அணியில் தொடர்வது தொடர்பில் கோக்லி நம்பிக்கை தெரிவித்தார்.
பட்டேல் மூன்றாவது டெஸ்டில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இரண்டு இன்னிங்சிலும் அவர் அபாரமாக ஆடினார்.
முதல்தர ஆட்டங்களில் நன்றாக விளையாடிய அனுபவம் அவருக்கு கை கொடுத்தது. வேகப்பந்து வீச்சை அவர் நம்பிக்கையுடன் எதிர்கொண்டு விளையாடினார். எதிர்கால இந்திய அணியில் இடம் பெறுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார். இதனால் தொடக்க வீரர்களை தேர்வு செய்வதில் போட்டி நிலவும். பட்டேல் தொடக்க வீரராக நீடிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது" என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## கரப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், டிசெ. 2
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது.
அரியாலை - சரஸ்வதி சனசமூக நிலைய மைதானம், நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக மைதானம் ஆகியவற்றில் தொடரின் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.
தொடரில் 22 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-23)

## காலிறுதியில் சாய்னா தகுதி

சீனாவின், மக்காவ் பூப்பந்தாட்டத் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்றால் சாய்னா நேவால்.
காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் சாய்னாவை எதிர்த்து இந்தோனேசியாவின் தினார் தியா ஒஸ்ரின் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 17:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் இழந்தார் சாய்னா. இதனால் அடுத்த இரு செற்களையும் கைப்பற்றினார் மட்டுமே காலிறுதிக்கு முன்னேற முடியும் என்ற நிலை ஏற்பட்டது. முறையே 21:18, 21:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய சாய்னா 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

## டோனிக்கு நிகராக சாதித்தார் கோக்லி

தோல்வியைக் காணாமல் தொடர்ந்து வெற்றிநடை போடும் வரிசையில் டோனியின் பெறுபேற்றை சமன்செய்தார் கோக்லி.
இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தையும் சேர்த்து கோக்லி இதுவரை 20 ஆட்டங்களுக்கு தலைவராக செயற்பட்டுள்ளார். அதில் 12 ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ளார்.
டோனியும் தனது தலைமைத்துவத்தில் முதல் 20 டெஸ்ட் ஆட்டங்களில் 12 ஆட்டங்களில் வெற்றிபெற்றார். அவரது அடைவை கோக்லி தற்போது சமன் செய்தார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொசைன், ரகுமானுக்கு அபராதம் விதிப்பு

பங்களாதேஷ் அணியின் வேகப் பந்துவீச்சாளர் அல் அமின் கொசைன், துடுப்பாட்ட வீரர் சபிர் ரகுமான் இருவருக்கும் அபராதம் விதித்தது பங்களாதேஷ் கிரிக்கெட் சபை.

பங்களாதேஷ் பிரீமியர் லீக் தற்போது நடைபெற்று வருகிறது. ஒழுங்கீன நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்று தெரிவித்தே





பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இருவருக்கும் தலா 15 ஆயிரம் டொலர்கள் அபராதமாக விதித்தது. அபராதத்துக்கான காரணம் குறித்து வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை. எனினும் குறித்த வீரர்கள் இருவரும் தமது விருந்தினர்கள் எனத் தெரிவித்து, பெண்களை தமது விடுதி அறைக்கு அழைத்துச் சென்றனர் எனத் தகவல்கள் வெளியாகின. (ம)

## அல்ஹிஜிரா இலகு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 2

வவுனியா கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அல்ஹிஜிரா வெற்றிபெற்றது.

வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அல்ஹிஜிரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஷெட்தாரகை விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் அல்ஹிஜிரா விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# விதிமுறையை மீறினார் பிரைன்

## தெரிவிக்கப்பட்டது முறைப்பாடு

சிம்பாப்வே அணியின் வேகப் பந்து வீச்சாளரான பிரைன் விக்ரோறி பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறை மீறிப் பந்துவீசினார் என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.


சிம்பாப்வே, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இலங்கை சம்பியனானது. சிம்பாப்வேயின் தரப்பில் விக்ரோறி சிறந்த பந்துவீச்சுப் பெறுதியை வெளிப்படுத்தினார். 9 பந்துப் பரிமாற்றங்களை வீசி 52 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார். ஆரம்பவீரர்களான தனஞ்சய டி சில்வா, குசல் ஜெனித் பெரேரா, மூன்றாம் நிலை வீரரான டிக்வெல்ல மூவரும் விக்ரோறியிடம் ஆட்டமிழந்தனர். ஆனால் குறித்த ஆட்டத்தில் விக்ரோறியின் பந்துவீச்சு பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறைகளை மீறி இருந்தது என மைதான நடுவர்களால் பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் முறையிடப்பட்டது. இதனால் பன்னாட்டு கிரிக்கெட் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடத்தில் இன்னும் 14 நாள்களுக்கும் தனது பந்துவீச்சு முறைமையை அவர் நிரூபிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இதே பிரச்சினை காரணமாக தடைபெற்ற விக்ரோறி, இரண்டாவது தடவையாக இவ்வாறான சிக்கலில் மாட்டியுள்ளார். (ம)

# ஹபீஸுக்கு அனுமதி

பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரரான மொகமட் ஹபீஸ், மீண்டும் பந்துவீச அனுமதி வழங்கப்பட்டது.

பாகிஸ்தான்–இலங்கை அணிகள் கடந்த வருடம் விளையாடிய டெஸ்ட் தொடரின்போது பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறைகளுக்கு மாறாக பந்து வீசினார் என ஹபீஸ் மீது குற்றஞ் சுமத்தப்பட்டது.

ஏற்கனவே இவ்வாறானதொரு சிக்கலில் அவர் மாட்டியதால் ஒரு வருடத்துக்கு பந்துவீச தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பெய்னில் அமைந்துள்ள சோதனை மையத்தில் அவரது பந்து வீச்சு முறைமை சரியென நேற்றுமுன்தினம் நிரூபிக்கப்பட்டது. இதையடுத்து அவர் மீண்டும் பந்துவீச பன்னாட்டு கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியது. (ம)





# சிறந்த வீரராகத் தெரிவானார் அணித் தலைவர் மத்தியூஸ்

இலங்கை கிரிக்கெட் சபையின் 2015ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதை அணித்தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் சுவீகரித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு பத்தரமுல்லயில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 2015ஆம் ஆண்டின் சிறந்த வீரராகத் தெரிவான மத்தியூஸ், டெஸ்ட், ஒரு நாள் ஆட்டங்களில் சகலதுறைப் பெறுபேற்றை வெளிப்படுத்திய விருதுகளையும் வென்றார். ஒருநாள் ஆட்டங்களின் சிறந்த துடுப்பாட்ட வீரராக குமார் சங்கக்காராவும், டெஸ்ட் ஆட்டங்களின் சிறந்த துடுப்பாட்ட வீரராக சந்திமல்லும், ரி-20 ஆட்டங்களின் சிறந்த துடுப்பாட்ட வீரராக டில்சானும் தெரிவாகினர். ரி-20 ஆட்டங்களின் சிறந்த பந்துவீச்சாளராக மலிங்கவும், டெஸ்ட் ஆட்டங்களின் சிறந்த பந்துவீச்சாளராக கேரத்தும் தெரிவாகினர். வருடத்தின் வளர்ந்து வரும் வீரருக்கான விருதை குசல் மெண்டிஸ் பெற்றார்.

விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசிம் அக்ரம் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ல்சன் சம்பியன்

உலக செஸ் சம்பியனானார் நோர்வே வீரர் மாக்னஸ் கார்ல்சன். உலக செஸ் சம்பியன்சிப் நியூயோர்க் நகரில் கடந்த மாதம் 11ஆம் திகதி தொடங்கி நடைபெற்றது. நடப்புச் சம்பியனான கார்ல்சனை எதிர்த்து ரஷ்ய வீரர் செர்ஜி மோதினார். 12 சுற்றுக் கொண்ட ஆட்டத்தில் கிண்ணத்தை தீர்மானிப்பதற்காக மேலும் 4 சுற்றுக்கள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. 2 சுற்றுக்கள் சமநிலையாகின. இரண்டில் கார்ல்சன் வென்றார். முடிவில் அவர் 3:1 என்ற அடிப் படையில் உலகச்சம்பியன்பட்டத்தை தக்கவைத்தார். (ம)

NEC
S.K Balasabesh
H.N.Dip -in ACC (ATI)
PG Dip in. Ed (ous)
03.12.2016 (சனி)

NEC
1) மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
2) பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
A/L 2017 2018
கலை, வர்த்தக தொழில்நுட்ப பிரிவுகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.12.2016
சனி 9.00 Am
T.P : 077 469 6695

BARATHY
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி
தரம் 6 முதல் 11 வரை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
04.12.2016
ஞாயிறு 8.00 am
நீங்கள் நன்கு அறிந்த வழமையான பிரபல ஆசிரியர் குழுவினால்
Note:
❖ மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளதனால் புதிய மாணவர்கள் உங்கள் இட நெருக்கடியை தவிர்க்கும் முகமாக முன்கூட்டி அன்றைய தினமே அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.
❖ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகளுக்கான அனுமதியும் வழங்கப்படுகின்றன.
❖ விடுமுறை காலத்தில் மேலதிக வகுப்புக்கள் நடைபெறும்.
(C/26780)(10.18) அதிபர், ஆசிரியர்கள்.

SHAMROCK
ஈச்சமோட்டை
புதிய கல்வி ஆண்டு 2017
GR.-6 -11 வரை
ஆரம்பம்:
03.12.2016
சனி 8.00Am.
மாதாந்த பரீட்சைகளுடன் ஊக்குவிப்பு பரிசில்களும்
(STANDARD EDUCATION WITH GOOD DISCIPLINE)

BIT Semester 5,3,1 & Project Classes
கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து கணினி பட்டம் 2nd Upper உட்பட இதுவரை 50 இற்கும் மேற்பட்டோர் BIT பட்டம் பெற்றுள்ளனர். 10 வருட அனுபவம்
Windows based, Web based and Mobile based Projects
2007 இல் இருந்து Supervisor (60+ Projects)
Php, Vb.net C#, Ionic-2 AngularJS-2
Classes starts on coming Sunday 04-12-2016
Semi-5 at 6.30 am, Semi-3 at 9.30 am, semi-1 at 1.00 pm
By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS): 0779785796
New registrations with 3 passes in A/L at www.bit.lk from December 2016



# இன்னும் இரண்டு ஆண்டுகள் விளையாட வேண்டும் கேரத்

இலங்கை டெஸ்ட் அணியில் இன்னும் குறைந்தது இரு ஆண்டுகள் கேரத் விளையாட வேண்டும் என்று தலைமைத் தேர்வாளரான சனத் தெரிவித்தார்.

"இலங்கை அணியில் மகேல, சங்கக்கார, டில்சான் போன்றோர் அணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு, அவர்கள் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இன்னும் போதுமான வீரர்கள் கிடைக்கவில்லை. இரு ஓர் வகையில் எமக்குப் பின்னடைவாக உள்ளது. தற்போது இலங்கை அணியில் மூத்த வீரராக ரங்கன கேரத் உள்ளார். அவரும் ஓய்வு பெற்றால் மேலும் பின்னடைவை ஏற்படுத்திவிடும். எனவே அணியைக் கருத்தில் கொண்டு கேரத் தனது ஓய்வு முடிவில் அவசரப்படக்கூடாது" என ஜெயசூரிய மேலும் தெரிவித்தார். (மு)

# லோகேஸ் ராகுல் தயார்

லோகேஸ் ராகுல் காயத்தில் இருந்து முழுமையான விடுதலை பெற்றார் என இந்திய தேர்வுக் குழுத்தலைவர் பிரசாத் தெரிவித்தார். அண்மையில் முடிவடைந்த நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் லோகேஸ் காயமடைந்தார். இதனால் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் அவர் விளையாடவில்லை. ஆனால் இரண்டாவது ஆட்டத்தில் களமிறங்கினார். மீண்டும் காயமடைந்தார். இதனால் மூன்றாவது ஆட்டத்தில் விளையாடவில்லை. பதில் வீரராகக் களமிறங்கிய பார்திவ் பட்டேல் துடுப்பாட்டம், இலக்குக்காப்பு என இரண்டிலும் அசத்தினார். லோகேஸ் குணமடையாவிடில் பட்டேலின் இடம் உறுதியாக்கப்படும் என்று கருதப்பட்ட நிலையில் அவர் குணமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. "தற்போது அணியில் உள்ள அனைத்து வீரர்களும் சிறப்பான நிலையில் உள்ளனர். இதனால் 11 பேர் கொண்ட குழாமில் இடம்பெற கடும் போட்டி நிலவுகிறது. ரகானேயின் தடுமாற்றம் குறித்துக் கவலைப் படவில்லை. அணியுடன் சொத்தாக அவர் கருதப்படுகிறார். லோகேஸ் குணம் பெற்றார். இதனால் ஆரம்ப வீரருக்குரிய இடத்துக்கு கடும்போட்டி நிலவுகிறது." என பிரசாத் மேலும் தெரிவித்தார். (ம)

## அதிருப்தி

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட்டில் ஸ்ரோக்ஸ் ஆட்டமிழந்து செல்லும் போது, கோக்லி, தனது விரலை வாயில் வைத்து "சத்தம் போடக் கூடாது" என்பதைப் போன்ற செய்கையை வெளிப்படுத்தினார். இதற்கு முன்னாள் வீரரான கவாஸ்கர் தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். "கோக்லி எதை மனதில் வைத்து அவ்வாறு செயலாற்றினார் என்பது புரியவில்லை. ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டியவை. ஆட்டமிழந்து செல்லும் வீரரிடத்தில் வெந்த புண்ணில்வேலைப் பாய்ச்சும் விதமாக செயலாற்றுவது நாகரிகமல்ல. சிறப்பாகச் செயற்படும் சக வீரர்களைப் பாராட்டுங்கள். எதிரணியினருடன் முரண்பட வேண்டாம்" என கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். விராட் கோக்லி ஆட்டமிழந்து செல்லும்போது ஸ்டோக்ஸும் அவ்வாறானதொரு சைகையை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# அறிமுக வீரர்களை நம்புகிறது இங்கி.

இந்திய அணிக்கு எதிராக எஞ்சியுள்ள இரண்டு ஆட்டங்களிலும் இரு அறிமுக வீரர்களை களமிறங்கவுள்ளது இங்கிலாந்து அணி. இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி விளையாடி வருகிறது. மூன்று ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. முதல் ஆட்டம் சமநிலை கண்டது. ஏனைய இரு ஆட்டங்களிலும் வென்று 2:0 என்று முன்னிலையில் உள்ளது இங்கிலாந்து. குறைந்த பட்சம் தொடரைச் சமநிலையில் முடிக்க வேண்டுமாயின்அடுத்தஇருஆட்டங்களிலும் வெல்லவேண்டும் என்ற நெருக்கடி இங்கிலாந்துக்கு ஏற்பட்டுள்ளது. அந்த அணியின் துடுப்பாட்ட வீரரான ஹமீட், சுழற்பந்து வீச்சாளர் ஜாபர் அன்சாரி இருவரும் காயமடைந்து விலகியமை மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்று-கருதப்பட்ட நிலையில், அவர்களின் இடத்துக்கு இரு அறிமுக வீரர்களை இங்கிலாந்து களமிறக்கவுள்ளது. துடுப்பாட்டவீரர்ஜென்னிங்ஸ், சுழற்பந்து வீச்சாளர் லியாம் டேவ்சன் ஆகியோரே அவ்வாறு களமிறங்கவுள்ளனர். (ம)



"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமதே ஸ்ரீ பகவதே நமஹ"
தரம் 6 முதல் O/L ற்கு
யாழ் நகரின் NO : 1
எடிசன் அக்கடமி
INTENT + EFFORT + GRACE = SUCCESS
யாழ்ப்பாணம் | கலட்டி | நல்லூர் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு 2017
தரம் 6
English Medium / தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்
எமது சலுகைகள்
புலமைப் பரிசில் பரீட்சையில்
• மாவட்டத்தில் முதல் 10இடம் பிடித்தோருக்கு தரம் 6 முதல் O/L வரை இலவசக் கல்வி
• 170 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கு December 2017 வரை இலவசக் கல்வி
• 160 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கு August 2017 வரை இலவசக் கல்வி
• 150 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கு April 2017 வரை இலவசக் கல்வி
• 150 இலும் குறைந்த புள்ளி பெற்றவர்களுக்கு April 2017 வரை 1/2 கட்டணம்
தரம் 6
ஆரம்பம் : 04/12/2016 ஞாயிறு
யாழ் எடிசன் → மு.ப 09.00 மணி
நல்லூர் எடிசன் → மு.ப 10.30 மணி
கொக்குவில் எடிசன் → பி.ப 03.00 மணி
கணிதம் B.P.பாஸ்கரன்
தரம் 7 முதல் O/L வரை
ஆரம்பம் : 05/12/2016 திங்கள்
யாழ் எடிசன் → மு.ப 08.00 மணி
கலட்டி எடிசன் → மு.ப 09.30 மணி
நல்லூர் எடிசன் → மு.ப 11.30 மணி
கொக்குவில் எடிசன் → பி.ப 12.30 மணி
தொடர்பு : 077 77 37 926
பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் ! அவர்களையும் சாதனையாளர் ஆக்குங்கள் !!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.